Doubtlessly, the above suggestions of the poet are really valuable for the development of Tamil; he also advocates that the precious works of Tamil literature should be rendered in other languages and also envisages a heyday in which the world would be longing for having the Tamil works rendered in thousand tongues. His ideal days are portrayed in the following lines:

Mother, elegant Tamil and our
  Superb poems of Tamil bards
The world has shown a deep desire
  To have them rendered in thousand tongues! (7)

Bharathidasan earnestly desired that his poems should be translated into English. This desire he expressed to so many persons, including this author. Poet Murugu Sundaram, the Boswell of Bharathidasan, has clearly brought out this desire of the poet. In fact Murugu Sundaram rendered two or three poems into English. Except stray attempts at translation, no co-ordinated effort has

till now taken shape. Perhaps, this author's "selected poems of Bharathidasan" is the first of its kind and there is still a long way to go in fulfilling the deep desire of Bharadhidasan. It seem Bharathidasan University also has brought out a translation of some of his poems.

Apart from the 10 poems that find a place in the I Volume of Bharathidasan's collections, there is a separate book of poems written by him on the development and enthronement of Tamil. The title of the work is Tamiliyakkam ("Tamil Resurgence Movement"). In this, he exhorts all sections of society – students, Tamil teachers, housewives, merchants, politicians, temple priests, songsters, artists, writers, orators, and the moneyed men – to render their mite to the cause of Tamil.

He asks the students to rise up and fight for the cause of Tamil. He advises the merchants to display their name boards in pure Tamil, that, in faultless Tamil. He exhorts politicians and heads of educational institutions to give due regard and recognition to Tamil. He envisages the days in which only the Tamil scholars should become the Chief Ministers of Tamil Nadu. He suggests all Tamil Scholars should write and speak in pure Tamil and should free Tamil from the fetters of religion. To the platform speakers, the writers, the lyricists – to all of them he gives his valuable suggestions and finally asks the affluent persons of society to render their mite to the cause of Tamil and Tamilians. He predicts an age in which the Tamil would be enthroned in every sphere of life of the Tamils. In short his Tamiliyakkam ("Tamil Resurgence Movement") is one of his master-pieces, depicting his ambition in life. The following lines that find a place in this book are very famous and oft-quoted in every home and hearth of Tamil-land:-

"Does not the breeze bring you coolness?
  Do not groves give us shade?
Sad it is that our sweet Tamil
  finds no place in the streets of our land!"

These lines clearly depict the deep-rooted desire of the Revolutionary poet Bharathidasan. Why not we try to translate his ideals into practice at the eve of his centenary celebrations?

**Foot Note**

1) வெள்ளைத் துரைபோல் உடை உடுப்போம் மயிர்
வெட்டிக்கொள்வோம், தமிழ் துப்பிச்செல்வோம் - எனத்

துள்ளுது மற்றொரு நாகரிகம் இதில்
சொக்குதல் பற்பலர் பாரதமே

(கறுப்புக்குயிலின் நெருப்புக்குரல் - மன்னர் மன்னன் - ப 146)

2) வாழ்க! வாழ்கவே!
உளமார் எமது திராவிட நாடு

(பராசக்தி - படப்பாடல்)

3) *Article written by Dr. Kulandaiswamy in " Tamil Arasu" dated May 1, 1990.*

4) வெண்ணிலாவும் வானும் போல . . .

. . . . . . . . . . . . . . .
வண்ணத்தமிழும் நானும்

(பொன்முடி - படப்பாடல்)

5) தமிழுக்கும் அமுதென்று பேர்
. . . . . . . . . . . . .
தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ!

(இன்பத்தமிழ் - பாரதிதாசன் கவிதைகள் - தொகுப்பு -1)

6) எளிய நடையில் தமிழ்நூல் . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . .
தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்

(தமிழ்வளர்ச்சி - பாரதிதாசன் கவிதைகள் தொகுப்பு-1),

7) தாயெழிற் றமிழை, என்றன்
தமிழரின் கவிதை தன்னை
ஆயிரம் மொழியிற் காண
இப்புவி அவாவிற்று . . . .

(எந்நாளோ? - பாரதிதாசன் கவிதைகள் -1 முதல்தொகுப்பு)

8) மணக்கவரும் தென்றலிலே குளிரா இல்லை?
தோப்பில் நிழலா இல்லை?
தமிழ்நாட்டில் தமிழ்த்தெருவில்
தமிழ்த்தானில்லை!

(தமிழியக்கம்)

(The translation of the poems quoted in this article has been done by the author)

## நேராகப் போ !

- கலைமாமணி மன்னர் மன்னன்

தென் தமிழ் நாட்டுச் சிற்றூர்ப் பள்ளி ஆசிரியர் ஒருவர் சென்னையில் இருக்கும் பாவேந்தரின் எதிரில் வந்து நிற்கிறார்; முன்னரே கடிதத் தொடர்பின் மூலம் அறிமுகமானவர்; வந்தவர் தம் பெயரைச் சொல்கிறார்.

“ ஓ!”

-வியப்போடும் ஏதோ நிறைவோடும் பாவேந்தர் அவரிடம் “ உங்க சங்கதி இன்னும் முடியலியா?” என்கிறார்.

“ முடியலிங்க. ஒரு கடுதாசி கொடுத்திங்கன்னா நேர்ல எங்க அதிகாரியைப் பாத்து நினைவுபடுத்தலாம்னு வந்தேன்!”-சற்றுக் குழைவாகவே சொல்கிறார். ஆசிரியர்.

“ உங்க அதிகாரிதான் அசையறதா காணோம்னு எழுதினிங்களே!”

பாவேந்தர் விடுத்த இந்த வினாவையே தன் விடிவுக்கு வழி என்று கருதிய ஆசிரியர், “ கல்வித் துறைச் செயலர் மனசுவச்சா நடந்துடும்னு நெனைக்கிறேன்” என்கிறார்.

உள்ளே போன பாவேந்தர், வெண்ணிற நீளக் கைச்சட்டையும் அதன் மேல் செந்நிறச் சால்வையுமாக வெளிவருகிறார்.

`போகலாம்' என்று கூறிவிட்டு வாடகை மகிழுந்து கொண்டு வரக் கட்டளையிடுகிறார் பாவேந்தர்.

முன்னேற்பாடின்றி அரசுச் செயலரைப் பார்த்துவிட முடியுமா என்கிற தயக்கம், ஆசிரியருக்கு!

`தொலைபேசியில செயலருக்குத் தெரிவித்துவிட்டுப் போகலாமே' என்கிறார் ஆசிரியர்.

“ஊம்!”-மறுப்பு வருகிறது பாவேந்தரிடமிருந்து. மகிழுந்து வந்தாயிற்று.

“ ஒரு கடிதம் குடுத்திங்கன்னா போதும். நீங்க எதுக்கு அலையணும்னு நெனைக்கிறேன். ”

-இழுக்கிறார் ஆசிரியர்.

இதற்குள் மகிழுந்தில் ஏறி அமர்ந்த பாவேந்தர், நேராகக் கோட்டைக்கு வண்டியை விடச் சொல்கிறார்.

பள்ளி ஆசிரியர் தன் மேலதிகாரியின் மூலம் முன் ஒப்புதலைப் பெறாமல் செயலரைக் கண்டு பேசுவது முறையன்று; இது ஆசிரியர்க்குத் தெரியும்.

பாவேந்தருக்கு?

தெரியாது! தெரிவித்தாலும் தம் போக்கை மாற்றிக் கொள்ள மாட்டார் என்பது எங்கட்குத் தெரியும்.

கோட்டை-கல்விச் செயலர் அறையின், முன் தாழ்வாரத்தில் இருக்கும் காவலர், இவரை ஊடுருவிப் பார்க்கிறார்.

நெருப்பு நிறச் சால்வை, நெருங்கவிடாமல் தடுத்ததோ என்னவோ!

காவலர் எங்களை அணுகி இவர் யார் என்று அறிந்துகொண்டு, ஓடி அறைக் கதவைத் திறந்து தாமே முந்திச் சென்று செயலரிடம் செய்தி கூறுகிறார்.

எழுந்து நின்று கைகூப்பி இவருக்கு இருக்கை காட்டுகிறார் செயலர், கா. திரவியம் அவர்கள்.

அரசினர் பள்ளித் தமிழாசிரியர் தென்தமிழ் நாட்டின் மூலையில் அலுவல் பார்க்கிறார். அவரின் துணைவியார் சேலம் பகுதியில் அலுவல் புரிகிறார். எத்தனை ஆண்டுகள் இப்படி அல்லல்படுவது? இவர்கள் இணைந்து இல்லறத்தை நடத்திட வாய்ப்பாக ஒரே இடத்தில் அல்லது ஊரில் வேலை பார்க்க ஏற்பாடு செய்ய வேண்டுமே என்று உருக்கமாய்ச் சொல்கிறார் பாவேந்தர்.

ஆவன செய்வோம் என்று அமைதி கூறும் செயலர், சுவைநீர் அருந்த ஏற்பாடு செய்துவிட்டு, ஆசிரியரை அழைத்து, " மாவட்டக் கல்வி அதிகாரி உங்களின் விண்ணப்பத்தை என்னிடம் அனுப்புமாறு சொல்லுங்கள். நான் உதவி செய்கிறேன்" என்கிறார்.

பாவேந்தர் இடைமறித்து,

'நீங்களே உத்தரவைப்போட்டு விடுங்களேன்' என்று கூற, ஆசிரியர் குறுக்கிட்டு, முறைப்படியாகச் செய்து விட்டால் போதும் என்கிறார்.

"பார்! இதற்காகத்தான் நேராகச் சந்தித்துப் பேச வேண்டும் என்றேன்" இது பாவேந்தர்.

செயலர், கனிவாக-" எந்தச் செய்தியானாலும் ஒரு கடிதம் கொடுத்தனுப்புங்கள். அல்லது தொலைபேசியில் சொல்லுங்கள். அய்யாவுக்காக நான் செய்து முடிப்பேன். நீங்கள் நேரில் வரவேண்டிய தொல்லையை நான் தரமாட்டேன்" என்று பாவேந்தரிடம் சொல்கிறார்.

**"நம்ம பிள்ளைகள் படிக்கணும் படிக்கணும்னு நான் பாடுபடறேன். அந்தப் பிள்ளைகளைப் படிக்க வைக்கிற பொறுப்பை ஏற்றுக்கிட்டிருக்கிற ஆசிரியர் குடும்பமும் நல்லா இருக்கணுமில்லை. ஆசிரியனா நான் வேலை பார்த்தவன். அவங்க தொல்லை எனக்குத் தெரியும். எனக்கு இப்படித் தொல்லை நிறைய ஏற்பட்டதுண்டு. அதையெல்லாம் நான் சட்டை பண்ணினதில்லை ஆனா இவங்களால தாங்க முடியாது."**

நீண்ட விளக்கமே தருகிறார் பாவேந்தர்.

கோட்டை வெளிவாயில்வரை வந்து பாவேந்தரை வழி அனுப்பி வைக்கிறார் செயலர்.

நேரில் சந்தித்துப் பேசியதில் மகிழ்வும் மனநிறைவும் பாவேந்தருக்கு!

சிக்கல் தீரும் என்ற நம்பிக்கை ஆசிரியருக்கு!

மகிழ்ந்துக்கு வாடகைச் செலவு எங்கட்கு!

குறைதீர்க்கும் வழியாக நேரில் தொடர்பு கொண்டு உடையவரிடம் சொல்லி விட வேண்டும் என்பது பாவேந்தர் வழி.

ஆசிரியராகப் பணியாற்றியபோது மாணவர்க்கு நேர்ந்த குறைகளையும் தமிழாசிரியர்க்கு ஏற்பட்ட இன்னல்களையும் குறிப்பிட்ட அதிகாரிகளிடம் நேரில் சொல்லித் தீர்வு கண்டவர் பாவேந்தர்.

அதே நேர்வழியில்தான் எப்போதும் அவர் நடந்திருக்கிறார் என்பதற்கு இன்னொரு சான்று:

ஆண்டு 1955-புதுவை மாநிலம் இந்தியப் பேராட்சியுடன் இணைந்த சில மாதங்களில் ஒருநாள் அன்பர் ஒருவர் தமக்கேற்பட்ட நிலையினை எடுத்துக்கூறப் பாவேந்தரிடம் வருகிறார். இந்திய ஆட்சிக்கும் பிரஞ்சு ஆட்சிக்குமிடையே ஏற்பட்ட பிணக்கால், புதுவை வணிகர்களின் ஏற்றுமதி - இறக்குமதி வணிகத்தில் சில முடக்க விதிகள் ஏற்பட்டு, விடுதலைக்குப் பின், புதுவையின் மேநிலை ஆணையர் விருப்பத்துக்கு ஏற்ப உரிமங்கள் அளிக்கப்பட்டன. பயன் பெற்றோர் சிலர்; முடக்கப்பட்டோர் பலர். அவருள் ஒருவர் தான் இந்த வணிகர்.

வணிகரின் வாதம் சரியே என்று கருதிய பாவேந்தர் "புறப்படு -. அவரைப் பார்த்து நேராகச் சங்கதியைச் சொல்லுவோம்" என்கிறார்.

வணிகர் தயங்கியபடி "அவருக்கும் உங்கட்கும் அவ்வளவாக ஒத்து வராத நிலையாயிற்றே" என்று கூறுகிறார்.

"நேராப்பாத்துப்பேசுவோம்- இங்கிருந்தபடியே நாமே ஒரு முடிவுக்கு வரலாகாது" என்று கூறிப் புறப்படுகிறார் பாவேந்தர்.

மேநிலை ஆணையர் கேவல்சிங் மாளிகை. பாவேந்தர் வந்திருப்பதறிந்து மாடி விட்டிறங்கி வந்து இவரின் அருகில் அமர்ந்து நலன் விசாரித்துவிட்டு, `நான் என்ன செய்ய வேண்டும்' என்கிறார்.

"ஒரு சார்பாக நீங்கள் வணிகர்க்கு உரிமம் வழங்குவது சரியில்லை. இவரின் விண்ணப்பத்தை ஏற்று நீதி வழங்க வேண்டும்" என்கிறார் பாவேந்தர்.

ஏற்கிறார் ஆணையர். ஆவன செய்திட உறுதி கூறுகிறார்.

இந்த இருவரிடையே நிலவிய எதிர்ப்புணர்ச்சி எங்கே போயிற்று?

-வணிகநண்பரின் வினா இது!

பாவேந்தரின் அணுகுமுறை பற்றி அவருக்கு எந்த வகை வியப்பு ஏற்பட்டதோ அதுவே நமக்கும் ஏற்படுவது இயற்கை!

வியப்பேதும் இதில் இல்லை!

> பிறருக்கு உதவி செய்ய முந்தி முந்திச் செயல்பட வேண்டும்.
> நீதி கேட்டு எவர் வீட்டுக் கதவையும் தட்டலாம்.
> ஆனால் -
> அது தன்னலம் பற்றியதாக இருக்கலாகாது.
>
> "பிறர் நலம் எண்ணி உழைத்திட நான் தவறேன்!"
> -இதுதானே பாவேந்தர் உரைத்த ஆணை!

நேராக நினைப்பது - நேராகப் பேசுவது - நேராக எழுதுவது- இவை பாவேந்தரின் வாழ்க்கை முறை.

பொதுக் கூட்டமாயிருந்தாலும் இலக்கிய நிகழ்ச்சியாக இருந்தாலும் தம் கருத்தை வெளிப்படையாகவே கொட்டுவார். யாரையாவது கண்டிப்பதானால் அவரை தம்முன் நிறுத்திப் பேசும் மாதிரியில் அவர் பேச்சு அமையும்.

கடிதங்களில் நலன் விசாரிப்பது அது இது என்று சுற்றிவளைக்காமல், நேராகத் தாம் சொல்ல நினைப்பதை எழுத்தில் வடித்து விடும் வழக்கம் அவரிடம் பார்க்க முடிந்தது.

" தம்பிக்கு, இக் கடிதத்தை எடுத்துக் கொண்டு நேராகப் போ. நான் சொன்னதாகத் தெரிவி. உடன் எனக்கு மறுமொழி எழுது. அல்லது நேரில் புறப்பட்டு வா".

எனக்கு இப்படித்தான் மடல் எழுதுவார். யாராயிருந்தாலும் அப்படித்தான்!

தொலைபேசியில் ஒருவரைத் தொடர்பு கொண்டு நேரம் குறிப்பிடச் சொல்லிப் போவதை அவர் பெரும்பாலும் தவிர்ப்பார். வீட்டில் இருந்துகொண்டே இல்லை, பிறகு ஆகட்டும் என்றெல்லாம் காலத்தை ஓட்டும் பெரிய மனிதர்கள் பலரை அவருக்குத் தெரியும்.

'நேராகப் போய்த்தான் இவனுங்களைப் பிடிக்கணும் என்றும் அவர் சொல்வார். அது சரி என மெய்ப்பிக்கப்பட்டிருக்கின்றது பல முறை.

நேராகப் போய்ப் பேசித் தீர்வு காணும் இந்த வழக்கப்படித் தம் சொந்த நலன்கருதி அவர் செல்வது உண்டா எனில் - இல்லை, இல்லை தான்!

பாரதியாரின் கவிதையைப் பற்றி அவர் வானொலி உரையிற் சொன்னது நினைவுக்கு வருகிறது.

" பாரதியார், முருகனாய் இருக்கட்டும் அல்லது சிவபெருமானாக இருக்கட்டும் அல்லது சத்தியாக இருக்கட்டும். அங்கே போய் அருள்செய்ய வேண்டும் என்று 'கோரி பிச்சை கேட்பது இல்லை. கெஞ்சுகின்ற வழக்கம் அவரிடத்திலே நான் பார்த்ததே கிடையாது. இது எப்படி யிருக்கிறது என்று கேட்டால், எனக்கு மிகப் பசியாக இருக்கிறது, உதவுங்கள் என்று கேட்கப் போன ஒருவன், பசியாக இருக்கிறது போடுகின்றாயா இல்லையா என்று அதிகார தோரணையிலே கேட்பதாக இருந்தால் எப்படியிருக்கும்? அப்படியிருக்கிறது, அவர்கள் கடவுளரைப் பற்றிக் கேட்பது. இது ஞாயமா என்று கேட்கலாம். ஞாயமில்லாமல் வேறு என்ன என்று நான் கேட்கிறேன். ஏன் என்று கேட்டால், பாரதி தமக்கென்று கேட்பதில்லை..."

பிறரின் நலன் காக்க அஞ்ச வேண்டியதில்லை. தட்டிக் கேட்கத் தயக்கம் வேண்டியதில்லை.

தமக்கொரு தீமை என்று நற்றமிழர்
எனை அழைத்திடில் தாவி
இமைப்பினில் ஓடித்தரக்கடவேன்
இனிதாம் என் ஆவி!

என்று கூறுரைத்த பாவேந்தர், சமுதாயத்துக்காக நேராய் வாழ்ந்தவர். நேராய் நம்மைச் சிந்திக்கச் செய்தவர்.

## பாரதிதாசனும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வும்

-சி. பாலசுப்பிரமணியன்

கவிஞர்களெல்லாம் இயற்கையின் காதலர்கள். விரிந்த வானைப் போல் உள்ளம். அருவியைப் போல் சோம்பலற்ற இயக்கம், மலையைப் போன்ற பெருமிதம், தூய காற்றைப்போல் சிந்தனைகள், நிலத்தைப் போல் பொறுமை என்று இயற்கையின் கூறுகளில் மனிதர்க்காகும் உயர் பண்புகளைக் காண்பர். பாவேந்தர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இயற்கையிலும் இயற்கை அளிக்கும் இன்ப வாழ்விலும் ஈடுபாடுமிக்கவர்.

சங்ககாலத்திலிருந்தே வாழ்க்கையை இயற்கையோடு பிணைத்துப் பார்க்கும் ஒருநோக்கு தமிழ்க்கவிஞர்க்குண்டு. ஒவ்வொரு நிலத்திற்கும் அதனைச் சார்ந்த மரம் செடி கொடி புள்ளினம் எனக் கருப்பொருளை உரிமையாக்கும் சூழலைச் சங்க இலக்கியங்களில் காண்கிறோம். இத்தகைய ஒரு மரபைப் பிற்காலக் கவிஞர்களில் பாரதிதாசன் மிக அழுத்தமாக எடுத்துரைக்கின்றார். மனிதர்கள் எங்கு நல்லவர்களாக இருக்கின்றார்களோ அங்கே நிலமே நீயும் நல்லை என்பார் ஔவையார். " வள்ளி கீழ்வீழா வரைமிசைத் தேன் தொடா மலைவாழ்நர் அல்ல புரிந்தெழுகலான்' என்று கூறி இந்த மலையில் வாழ்பவர்கள் தீயன செய்தொழுகுவதால் இங்கே கிழங்கு வேர்விடாது. மலைமீது தேன் சமையாது என இயற்கையே மனிதர்களின் மனநிலைக்கேற்ப அமையும் என்பதைக்காட்டுவார். மனிதர்கள் இயற்கைச் சூழல் கெடாதவாறு நல்ல ஒழுகுநெறியை மேற்கொளவேண்டும். கம்பனுக்கு ஆறு சான்றோரின் கவியெனக் காட்சியளித்தது. அழகு, பயன், தெளிவு, குளிர்ச்சி, ஓட்டம் ஆகியவை ஆற்றின் தகுதிகளாக அக்கவிஞனாற் காட்டப்பெறும். பாவேந்தர் ஆறளிக்கும் பயனை,

> நோய்தீர்ந்தார்! வறுமை தீர்ந்தார் நூற்றுக்கு நூறு பேரும்!
> ஓய்வின்றிக் கலப்பை தூக்கி உழவுப்பண் பாடலானார்
> சேய்களின் மகிழ்ச்சி கண்டு சிலம்படி குலுங்க ஆற்றுத்
> தாய்நடக் கின்றாள் வையம் தழைகவே தழைக என்றே!

ஓர் ஊரின் தூய்மைக்கும், நோயின்மைக்கும் அங்குள்ள நீர்நிலையின் தூய்மை இன்றியமையாதது. உண்ணும் உணவை விளைக்கும் முதலாகவும், பருகும் நீராகவும் அமைவதனை வாழ்வின் உயிர்த்தேவை எனலாமே! ஆகவே பாவேந்தர் வளர்த்துப்பேணும் தாயென ஆற்றைக் கண்டார். இன்று ஆற்றிடையே ஊரின் சாக்கடைகள், கழிவுநீர்க் கால்கள் கலக்கின்றன. கங்கையும், கங்கையிற் புனிதமாய காவிரியும் மாசுண்ட மேனியோடு நடக்கின்றன. ஆறுகள் பலவற்றில் தொழிற்சாலைகளின் நச்சுக் கழிவுகள் புகுகின்றன. ஆற்று மணல் "உரித்தநற் றாழம் பூவின் நறும்பொடி உதிர்த்தது" போல இருக்குமெனப் புரட்சிக் கவிஞர் கூறுமாறு இல்லை. "இருகரையவாரமும் திருமகள் உறையுளாப் பண்ணும் இப்புண்ணிய தாமிர வருணி" என மனோன்மணீய ஆசிரியர் கூறியுள்ளவாறு ஆற்றின் நிலை இன்று இல்லை. ஆற்றின் உயரிய கரைகள், கரைகளில் மரங்கள், மரங்களில் பறவைகள் எனப் பாவேந்தரின் ஆற்றுக் காட்சி அமைகிறது. இத்தகைய சுற்றுச் சூழல் அமையுமாறு இயற்கைக்கு நாம் அரண்செய்தல் வேண்டும்.

மனித வாழ்விற்காகும் தூய காற்று நம் சுற்றுப்புறத் தூய்மையாலேயே பெறப்படுவது. வீட்டுக்கு ஒரு மரம் நடுவோம் என்பது அரசின் அறிவிப்பாக இருக்கிறது. தென்னை பயரிடுங்கள்

என்றும் தேக்குவளர்த்திடுங்கள்என்றும் வேளாண்துறை பரிந்துரைக்கின்றது. காற்றினை அசைத்து முகில்களை வருடி மழையை உண்டாக்கும் ஆற்றலுடைய காடுகளை நாம் அழித்துக்கொண்டு வருகிறோம். மரங்களை வெட்டுவதால் உதகை போன்ற மலைப்பகுதிகளில் நிலச்சரிவு ஏற்படுகிறது. சாம்பற் சத்து, மணிச்சத்து, தழைச்சத்து என்பனவற்றுக்கெல்லாம் மூலமாக விளங்கும் தாவரச் செல்வத்தை நாம் இழந்து வருகின்றோம்.

செருந்தி ஆச்சா, இலந்தை தேக்கு ஈந்து கொன்றை யெல்லாம்
பெருங்காட்டின் கூரை அந்தப் பெருங்கூரை மேலே நீண்ட
ஒருமூங்கில் இருகுரங்கு கண்டேன் பொன்னூசல் ஆடல்!
குருந்தடையாளம் கண்டேன் கோணல்மா மரமும் கண்டேன்!

எத்தனை மரங்களின் பெயர்கள் ஒரு சிறிய பாட்டில் அடுக்கப்பெறுகின்றன. எதிர்காலத் தமிழ்ச் சமுதாயம் இவற்றில் பலபெயர்களுக்குரிய மரங்களை அடையாளம் காணப்போவதில்லை. தொட்டிகளில் வேர்விடாமல் குரோட்டன்ஸ் வளர்த்தல், குறுமரங்களாகவும் சிறுசெடிகளாகவும் குறுக்கப்பட்டுப் பயன்பெறும் (Bonsay) தாவரங்களைப் பெருக்கல், வரவேற்பறைகளில் பிளாஸ்டிக் தென்னை மரங்களை அழகிற்கென அமைத்தல் ஆகியன சமூகப் பண்புகளாக மாறிவருகையில் சுற்றுச் சூழலைத் தூய்மையாக்கி நல்லகாற்றை வழங்கும் மரம்பயிரிடும் மனநிலை எப்படி உருவாகும்.

குயில்கூவிக் கொண்டிருக்கும் கோல மிகுந்த
மயிலாடிக் கொண்டிருக்கும் வாசம் உடையநற்.
காற்றுக் குளிர்ந்தடிக்கும்; கண்ணாடி போன்றநீர்
ஊற்றுக்கள் உண்டு; கனிமரங்கள் மிக்க உண்டு

என்று பாவேந்தர் கூறுகின்றவாறு காட்டின் எழில் சுற்றுச்சுழலின் மாசு துடைத்து மனித சமூகத்தை நோய் அண்டாமல் பாதுகாக்கவல்லது. புறாக்கூண்டுகளாக வீடுகளைக் கட்டிக்கொண்டு, குளிர்சாதனப் பெட்டிகளின் மின்காற்றிடம் அடைக்கலம் புகுந்து அதில் ஏற்படும் சலிப்பில் மெரினாவில் காற்றுவாங்கக் காத்திருக்கும்போதுதான் காற்று வசதிமிக்க சூழலின் தேவை நம் கவனத்திற்கு வருகிறது. "காத்து வாங்க பீச்சுப் பக்கம் காத்திருக்கும் கூட்டமே நேத்து வாங்கிப் போன காத்து என்ன ஆச்சு வீட்டிலே" என்று கண்ணதாசன் இந்த வாழ்க்கைச் சூழலை எள்ளி நகையாடுகின்றார். பாவேந்தர் இயற்கையளித்த சூழற் கொடையினை எண்ணி எண்ணி வியக்கின்றார்.

விரிந்த வானே, வெளியே-எங்கும்
விளைந்த பொருளின் முதலே
திரிந்த காற்றும் புனலும்- மண்ணும்
செந்தீ யாவும் தந்தோய்
தெரிந்த கதிரும் நிலவும்-பலவாச்
செறிந்த உலகின் வித்தே
புரிந்த உன்றன் செயல்கள்-எல்லாம்
புதுமை! புதுமை! புதுமை!

என்று போற்றுகின்றார். காற்றை நோக்கிக் கவிஞர் கூறும் "உன்னிடம் அமைந்திருக்கும் உண்மையின் விரிவில் மக்கள் சின்னதோர் பகுதியேனும் தெரிந்தார்கள் இல்லை" என்ற கூற்றை நாம் நினைக்கவேண்டும்.

வீடு, வாழும்தெரு, ஊர், நாடு என்று ஒவ்வொரு நிலையிலும் சுற்றுச்சூழல் இனிதமைய விழிப்புணர்வு வேண்டும். 'இருண்ட வீடு' என்ற நூலில் புரட்சிக் கவிஞர் இதனை அழகாகக் காட்டுகின்றார்.

வீட்டினுள் காற்று வீசுந் தோறும்
மோட்டு வளையில் மொய்த்த ஒட்டடை
பூமழை யாகப் பொழியும் தலையில்!
ஊமைக் குப்பைகள் உம்மென்று மேலெழும்!

இப்படி ஒரு வீடிருக்குமானால் என் செய்வது? குடும்பவிளக்கில் இல்லத்தலைவி தங்கம் நாள்தோறும் வீட்டின் செம்மை பேணுகின்றாள்; ஒட்டடை அடிக்கின்றாள்; பெயர்ந்த காரை பூசுகின்றாள்.

பனித்துளி மணிகள் காய்க்கும் பசும்புற்கள் அடர்புலத்தில்
தனித்தனி அகலா வண்ணம் சாய்ந்திட்ட பசுக்கள் எல்லாம்
தனக்கொன்று பிறர்க்கொன்று என்னாத் தன்மையால் புல்லை மேயும்

என்று சிற்றூரின் சூழல் காட்டுவர். பசுக்கள் மேயப் புல்வெளி பரந்த நிலமுண்டு சிற்றூரில்! அவற்றைக் காலாற மேய்த்தலும் ஓடும் நீரிற் குளிப்பாட்டலும் உண்டு அங்கே! நகரில் கட்டுத்தறி பெயராத மாடுகளிடையே வைக்கோற் கன்று காட்டி வரவழைக்கும் பாலினால் மனிதர்கட்கு நோய் மலிகிறது. இடநெருக்கடியைத் தவிர்க்கின்ற வகையிலும் இயற்கைச் செந்நெறி குலையாவண்ணமும் நகரமைப்பு வேண்டும். நச்சுப் புகை கக்கும் ஊர்திகளும் கொசுப் பண்ணைகளாக விளங்கும் குட்டைகளும், குப்பை கூளம் மலிந்த தெருக்களும் தொழிற்சாலைக் கழிவுகளும் நம். சுற்றுச் சூழலைக் கெடுத்து நோய்களை உருவாக்க வல்லன. ஓசோன் என்ற இயற்கைக் காற்று வெளி மண்டிலத்தின் இனிய கொடை நலிவுறாதவாறு நாம் பேணிக்கொள்ள வேண்டும். இல்லையெனில் எதிர்கால மானிடச் சாதி முழுவதும் மருத்துவமனைகளில் நிலையாகக் குடியேறும். "வஞ்சகம் சேர் சின்ன மானிடச் சாதிக்கு வாய்ந்த நிலை இதுவோ" என்று பாவேந்தர் கூறுமாறு நம் நிலை ஆகும்.

எண்ணங்கள் போல - விரி
வெத்தனை! கண்டாய் - இரு
கண்ணைக் கவர்ந்திடும் ஆயிரம் வண்ணங்கள்
கூடிச் சுடர்தரும் வான்!

என்பதுபோல் பரந்த வான்வெளியைக் கருமா முகிற்குலம் தோய காற்றின் ஊஞ்சலில் மழைக்கம்பி பிடித்து இறங்க, அதனால் வையகம் வாழ நாம் சுற்றுச் சூழலை பேணுவோமாக! "Nature never did betray the heart that loved her. It is her privilege through all the years of our this life to lead from joy to joy என்று கவிஞர் வேர்ட்ஸ்வொர்த்து கூறியவண்ணம் இயற்கைத்தாயின் இனிய மடியில் நாம் இன்புறுவோமாக!

## உள் உணர்ச்சி வெளியீட்டுச் சுதந்திரம் பாரதிதாசன் கவிதைகளில்

-நீல பத்மநாபன்

தலைப்பில் குறிப்பிட்டிருக்கும் உள் உணர்ச்சி வெளியீடு என்ற வார்த்தையால் இங்கே சுட்டநினைப்பது ஆங்கிலத்தில் `எமோஷன்' (*emotion*) என்கிறோமே `உணர்ச்சி' அதுவன்று, என்பதை முதலிலேயே நான் தெளிவுபடுத்தியாக வேண்டும். `எமோஷனு'டன் எண்ணமும் (தாட்-*thought*) சேர்ந்த `எக்ஸ்பிரஷன்' (*expression*) என்ற சொல்லின் தமிழ் பெயர்ப்பே இங்குக் குறிக்கோள். *'Freedom of expression'* என்பதைத்தான் உள் உணர்ச்சி வெளியீட்டுச் சுதந்திரம் என்ற வார்த்தைச் சேர்க்கை மூலமாய் ஏகதேசமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கவிஞன் அல்லது எழுத்தாளன் என்பவன் மொத்த சமூகத்தில் ஓர் அங்கம். மொத்த சமூகத்தின் குறை நிறைகளுக்கு அவன் அப்பாற்பட்டவன் அல்ல. இருந்தும், வாழும் சமூகத்தை அவன் விமர்சிக்கும்போது விமர்ச்சிக்கும் அவன் மட்டும் கொம்பனா என்று பாதிக்கப்பட்ட சமூகம் அவன் மீது சாடிவிழுவது காலம் காலமாய் நடந்துவரும் வழக்கம். இதனால் சமூகத்தின் முன்னோடிகளான எழுத்தாளர்கள் உலகில் ஒருபோதும் ஓய்ந்திருப்பதில்லை, நமக்கேன் வம்பு என்று ஒதுங்கியிருப்பதும் இல்லை.

சுதந்திர மானிடனைக் கவிதையாய்த் தீட்டி நோபல் பரிசு பெற்ற செக்கோஸ்லேவியா நாட்டு கவிஞன் ஜாறொஸ்லாவ் ஸீஃபெர்ட் (*Jaroslav Seifert*) கூறுகிறான்: "ஒரு சாதாரண மனிதன் மௌனமாக இருந்தால் அது நிர்வாகத் தந்திரமாக இருக்கக்கூடும் ஆனால் ஒரு எழுத்தாளன் மௌனம் சாதித்தால் அவன் பொய் சொல்கிறான் என்றாகிவிடும்". (*"When an ordinary person is silent, it may be a tactical manoeuver. If a writer is silent, he is lying"*).

தான் வாழும் சமூகத்தின் அநீதிகளைக் கண்டு ஆர்ப்பரிக்கும் அவன் மனம் அதை வெளியிடுவதால் தன் மீது ஏற்படப்போகும் எதிர்ப்பையும் வெறுப்பையும் நினைத்து அஞ்சிவிடுவதில்லை, தன் கருத்து வெளியீட்டு சுதந்திரத்தை எந்த சக்திக்கு முன்னும் அவன் பணயம் வைப்பதும் இல்லை.

இனி, சமயத் துறையை குறிப்பாக எடுத்துக்கொண்டால் அது வெகு விரைவில் மக்களை உணர்ச்சியடைய வைக்கும் ஒன்று. (*Sensitive issue*). நூற்றாண்டுகளாய் அமுலில் இருக்கும் சம்பிரதாயங்கள், மரபுக்கு உட்பட்ட கருத்துக்களை எதிர்த்து ஒருவன் குரல் எழுப்பும்போது- அந்தக் குரலின் நியாய அநியாயங்கள், உடன்பாடும் உடன்பாடின்மையும் மீறி, அப்படி அவன் சொந்த அபிப்பிராயத்தை வெளியிடும் சுதந்திரத்தை அவனுக்குச் சமூகம் அளிக்குமா என்பதுதான் கேள்வி. ஆனால் இப்படியொரு சுதந்திரத்தை கலகக்காரனான (*rebel*)எழுத்தாளன் யாரிடமும் யாசகம் கேட்டுப் பெறுவது இல்லை; தன் பிறப்புரிமையாய் எதிர்ப்புக் குரலை எழுப்பிக்கொண்டே இருக்கிறான், அது பரவலாய் பலருக்கும் சுவைப்பதில்லை என முன்கூட்டித் தெரிந்திருந்தும்.

தமிழ்நாட்டில் 17-ம் நூற்றாண்டிலேயே சமயத் துறையில் கலகக் கொடி ஏற்றிய சித்தர்களின் தீரமான கருத்துக்கள் இங்கே எண்ணிப் பார்க்கத் தக்கவை. நாதனுள் இருக்கையில் நட்டகல்லை தெய்வமென்று செய்யும் மரியாதையைக் கேலிசெய்தும், பறைச்சி-பனத்தி

(பார்ப்பனத்தி) வேறுபாட்டைத் தெரிந்துகொள்ள `இறைச்சி, தோல் எலும்பினுள் இலக்கமிட்டிருக்குதோ?' என்று வைதீக, பிராமணீய ஆதிக்க சக்திகளை இடித்துரைத்தும் சிவவாக்கியர் பாடியதும், `வெட்ட வெளிதன்னை மெய்யென்றிருப்பார்க்குப் பட்டயம் எதுக்கடி?' என்று மகா சந்நிதானங்களுக்கு, எதிராய் குதம்பைச் சித்தர் குரல் எழுப்பியதும் இத்தகைய கருத்துவெளியீட்டு உரிமை உணர்வினால்தானே....! சாதி மத வேற்றுமைகள், பல தெய்வ, உருவ வழிபாடு இவைகளை எதிர்த்தும், வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடியும் வீடுதோறும் இரந்தும் யாரும் அன்னமிடாமல் வெற்று ஓடராய்த்திரும்பிய பிச்சைக்காரர்களைக் கண்டபோதெல்லாம் உள்ளம் நொந்தும் மனித நேயத்துடன் ஜீவகாருண்யத்துடன் வள்ளலார் இராமலிங்க அடிகளார் (1823-1873) இயற்றிய அருட்பாவை மருட்பா என்று கேலி செய்து சைவ சமயத்தாரைப் புண்படுத்துவதால் தடைவிதிக்கக் கோரி நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்ததும் நம் நாட்டில் நடந்த நிகழ்ச்சியல்லவா!

தாழ்த்தப்பட்ட மக்களுக்கிழைக்கப்பட்ட கொடுமையை வெளியிட்ட கோபால கிருஷ்ண பாரதியார் (1882-1921) திருநாளைப் போவார் என்னும் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை', தான் வாழ்ந்த சமூகத்து நிலைகெட்ட மனிதரை நினைத்து நெஞ்சு பொறுக்காது பொருமிய சுப்ரமணிய பாரதி (1882-1921) இவர்களின் வழியில் வந்து, வாழ்ந்த சமூகத்தின் விருப்பு, வெறுப்பைப் பற்றி அலட்டிக்கொள்ளாமல் கொண்ட கொள்கையை-உள்ளக்கருத்தைச் சுயேச்சையாய் வெளியிட்ட கவிஞர் பாரதிதாசன் (1891-1962). இக் கவிஞர்களுக்கு அவர்கள் வாழ்நாளுக்குப் பின் கிடைத்திருக்கும் அங்கீகாரம் அவர்கள் வாழ்ந்த காலகட்டத்தில் சமூகத்தில் "புத்திஜீவி' களிடம் இருந்துகூட கிடைக்கவில்லை என்பதையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

பாரதிதாசனின் சுயேச்சையான உள்ளுணர்வு வெளியீட்டு நேர்த்தியை அவர் கவிதை வரிகளை எடுத்தாண்டு ஆராயும் முன் இது சம்பந்தமாய் இக்கட்டுரையாளரின் ஒன்றிரண்டு பொதுக்கருத்துக்களையும் இங்கே தெளிவுபடுத்தியாக வேண்டும்.

1) வாழும் சமூகத்தில் அமுலில் இருக்கும் வழக்கங்களுக்கு எதிரான நீச்சல் கவிஞரின் இந்த அபிப்பிராய வெளியீடு. அந்த அபிப்பராயத்தின் நியாய அநியாய வாதமோ (*value judgement*) கருத்து உடன்பாடோ உடன்பாடின்மையோ இங்கே பொருட்டல்ல. அந்த எதிர் அபிப்பிராய வெளியீட்டு சுதந்திரம், அதுதான் இங்கே முக்கியம்.

2) நாடு முழுவதும் ஓடும்போது நடுவில் கூட்டத்துடன் கோவிந்தா போட்டுக் கொண்டு ஓடாமல், விலகிநின்று கருத்து வெளியிடுவதினாலோ, கேலி செய்வதினாலோ மட்டும் அந்தக் கருத்துக்களுக்கு ஒரு இலக்கிய அந்தஸ்து கிடைத்துவிடுமா? கருத்தின் கனத்தால் மட்டும் இலக்கிய நயமில்லாத ஒரு படைப்பு இலக்கியப் படைப்பாகிவிடாது. அழகியலுக்கும் சொல்லும் நேர்த்திக்கும் இலக்கியத்தில் முதன்மையான பங்குண்டு. `எல்லா இலக்கியங்களும் பிரச்சாரமே; ஆனால் எல்லாப் பிரச்சாரங்களும் இலக்கியமாகாது' என்கிறார் மாசேதுங். எழுத்தாளரின் அபிப்பிராயங்கள் கலைப்படைப்பில் எத்தனைக்கு ஒளிந்திருக்கிறதோ, அத்தனைக்கு நல்லது' என்று எங்கெல்ஸ் சூசகமாய் சொல்ல வேண்டியதை வலியுறுத்தியிருக்கிறார். `எதுகை, மோனைகளுக்காகச் சொல்லவந்த பொருளை மாற்றிச் சொல்லும் பண்டிதன் சரஸ்வதி கடாட்சத்தை இழந்துவிடுவான். யமகம், திரிபு முதலிய சித்திரக்கட்டுகளைவிரும்பி சொல்லுக்குத் தக்கபடி பொருளைத் திரித்துக் கொண்டு போகும் கயிறு பின்னிப் புலவன் வாணியின் திருமேனியை நோகும்படி செய்கிறான்.

அவசியமில்லாத அடைமொழிகள் கோப்போன் அந்தத் தெய்வத்தின் மீது புழுதியைச் சொரிகிறான். உலகத்தார்க்குப் பொருள் விளங்காதபடி இலக்கியம் செய்வோன் அந்தச் சக்தியைக் கரித்துணியாலே மூடுகிறான். வெள்ளைக்கலையுடுத்துவதில்லை. மனமறிந்த உண்மைக்கு மாறுசொல்லும் சாஸ்திரக்காரனும் பாட்டுக்காரனும் சரஸ்வதிக்கு நிகரில்லாத பாதகம் செய்கின்றனர். இலக்கியத்திற்குத் தெளிவும் உண்மையுமே உயிரெனலாம். இவ்வுயிருடையவர்க்கே அருள்வாக்கென்று சொல்லப்படும்." -இப்படிச் சொன்னவர் பாரதி. இதைக் கருத்தில் கொண்டு, தெளிவும் உண்மையும் ஒளிரும் பாரதிதாசனின் கவிதைகளில் **"பாரதிதாசன் கவிதைகள்"** (முதற்பதிப்பு 1938) என்ற நூல் மட்டுமே இந்த ஆய்வுக்கு ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

உள்ளுணர்ச்சி வெளியீட்டுச் சுதந்திரத்தை வலியுறுத்த எடுத்தாளப்பட்டிருக்கும் இந்தக் கவிதைவரிகளில் இலக்கிய நயம் ஒரே அளவில் எதிர்பார்க்க வேண்டியதில்லை என்பதை, மேலே முன்கூட்டி குறிப்பிட்டிருக்கும் காரணங்களால் புரிந்துகொள்ள முடியும். தலைப்பை மட்டும் வைத்துக்கொண்டு இது முற்றிலும் இலக்கியத்திற்குப் புறம்பான *(Extra-literary)* ஆய்வு என்ற முடிவுக்கு வராதிருக்கவே இந்தப் பீடிகை. இனி கவிதைகளுக்கு வருவோம்.

**கடவுள்**

`எங்கெங்குக் காணினும் சக்தியடா! - தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா! அங்குத்
தங்கும் வெளியினிற் கோடியண்டம்'

என்று துவங்கும் 16 வரி கவிதையை, பாரதியின் விருப்பப்படி பாடி அறிமுகமான பாரதிதாசன், தன் கவிதை பயணத்தில் `கனமான கடவுளே உனைச் செய்த சிற்பி எவன்? காட்டுவீர்?' என்றவுடனே கடவுளைக் காண்கிலேன்!' என்று அங்கலாய்த்து (**"கடவுள் மறைந்தார்"**) பாரதியின் வழியிலிருந்து விலகிக் கொள்வதைப் பார்க்கிறோம். சுயசிந்தனையும் *(Original Thinking)* சுதந்திர உணர்வும் உள்ள எழுத்தாளன் இப்படி விலகி தனக்கென்று ஒரு தனிப்பாதையை உருவாக்கிக் கொள்ளாமல் இருந்தால்தான் வியப்பிற்கிடமாகும். எழுதத்துவங்கும் காலையில் குருநாதர்களையும் முன்மாதிரிகளையும் ஒருவேளை சார்ந்திருந்தாலும் காலக்கிரமத்தில் தன் தனித்தன்மையை நிலைநாட்டவே அவன் முயற்சிப்பான். பாரதிதாசன் விஷயத்திலும் இதுவே நிகழ்ந்திருக்கிறது.

ஏழுகடல் சக்தியின் வண்ணத்தைத் துவக்கத்தில் கண்ட கவிஞர் பின்பு குன்றின் மீது நின்று கண்ட "காட்சி இன்பம்" என்ன?

முன்பு கண்ட காட்சி தன்னை
முருகன் என்றும் வேலன் என்றும்
கொன் பயின்றார் சொல்வர்; அஃது
குறுகும் கொள்கை அன்றோ தோழி!
கண்ணும் நெஞ்சும் கவருகின்ற
கடலை, வானைக் கவிஞர் அந்நாள்
வண்ண மயில் வேலோன் என்றார்கள்
வந்ததே போர் இந்நாள் தோழி!
எண்ண எண்ண இனிக்கும் காட்சிக்
கேது கோயில்? தீபம் ஏனோ?

வண்ணம் வேண்டில் எங்கும் உண்டாம்
மயிலவெற்பும் நன்றே தோழி
பண்ணவேண்டும் பூசை என்பார்
பாலும் தேனும் வேண்டும் என்பார்
உண்ண வேண்டும் சாமி என்பார்
உளத்தில் அன்பு வேண்டார் தோழி

இக் கவிதையை வாசித்துக் கேட்கும்போது இருபதாம் நூற்றாண்டின் கடைசிப் படியில் நிற்கும் இன்று கூட சிலர் முகத்திலும் பலர் அகத்திலும் ஒருவித எதிர்ப்புத் தோன்றுகிறது என்றால், கவிஞரின் இந்த உள்ளுணர்ச்சி வெளியீடு தீரமாய் நிகழ்ந்த இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் நாஸ்திக வாதம், பகுத்தறிவுக் கொள்கை என்றெல்லாம் எத்தனைக்கு, கடுமையான சினத்திற்கும் வெறுப்புக்கும் ஆளாகியிருப்பார் என்பது யூகிக்கத்தக்கது.

பிறந்த உடனையே ஆண்குழந்தை தாலாட்டு பாடுகிறார் கவிஞர்.

வாடப்பல புரிந்து வாழ்வை விழலாக்கும்
மூடப்பழக்கத்தைத் தீதென்றால் முட்டவரும்
மாடுகளைச் சீர்திருத்தி வண்டியிலே பூட்டவந்த
ஈடற்ற தோளா, இளந்தோளா, கண்ணுறங்கு!
`எல்லாம் அவன் செயலே' என்று பிறர்பொருளை
வெல்லம்போல் அள்ளி விழுங்கும் மனிதருக்கும்,
காப்பார் கடவுள் உமைக்கட்டையில் நீர் போகுமட்டும்
வேர்ப்பீர், உழைப்பீர் என உரைக்கும் வீணருக்கும்
மானிடரின் தோளின் மகத்துவத்தைக் காட்டவந்த
தேனின் பெருக்கே, என் செந்தமிழே கண்ணுறங்கு!

பெண் குழந்தை தாலாட்டில் தனியாகச் சொல்கிறார்.

தெய்விகத்தை ,நம்பும் திருந்தாத பெண்குலத்தை
உய்விக்க வந்த உவப்பே! பகுத்தறிவே!
எல்லாம் கடவுள் செயல் என்று துடைநடுங்கும்
பொல்லாங்கு தீர்த்துப் புதுமைசெய வந்தவளே!
வாயில் இட்டு தொப்பை வளர்க்கும் சதிக்கிடங்கைக்
கோயிலென்று காசுதரும் கொள்கை தவிர்ப்பவளே!
சாணிக்குப் பொட்டிட்டுச் சாமி என்பார் செய்கைக்கு
நாணி உறங்கு; நகைத்து நீ கண்ணுறங்கு!

கவிதையில் காரண காரியத் தொடர்புடன் வாதித்து, கருத்துக்கள் நிறுவப்பட வேண்டும் என்பதில்லைதான். சூசகமாய் ஒருசில சொற்கள் உதிர்க்கும்போதே கலையுள்ளம் கொண்ட மனங்களில் அவை சென்று கிளர்ச்சியை எழுப்பிவிடும். ஆனால் பாமரரைப் போதனை செய்யும் நோக்கில் இக்கவிஞன் காரண காரியத் தொடர்புடன் தளைஅறுக்க வாதிடுகிறார், `கடவுள் என்ற நாமதேயம் கழறிடாத நாளிலும் உடைமை யாவும் பொதுமையாக உலகு நன்று வாழ்ந்ததாகவும், `கடையர்' செல்வர் என்ற தொல்லை கடவுள் பேர் இழைத்ததே' என்றெல்லாம்.

`உடைசுமந்த கழுதை கொண்
டுழைத்ததோர் நிலைமையும்

உடைமை முற்றும் படையை ஏவி
அடையும் மன்னர் நிலைமையும்
கடவுளாணையாயின், அந்த
உடைவெளுக்கும் தோழரைக்
கடவுள்தான் முன்னேற்றுமோ? தன்
கழுதைதான் முன்னேற்றுமோ?

இந்த வரிகளில் முழு தாத்பரியமும் சரிவர விளங்க வேண்டுமாயின் இந்தக் கவிதையில் கடைசி வரிகளையும் வாசித்தாக வேண்டும்.

நடவு செய்த தோழர்கூலி
நாலணாவை ஏற்பதும்
உடலுழைப்பிலாத செல்வர்
உலகை ஆண்டுலாவலும்
கடவுளாணை என்றுரைத்த
கயவர் கூட்டமீதிலே
கடவுள் என்ற கட்டறுத்துத்
தொழிலுளாரை ஏவுவோம்.

கவிஞரின் கடவுள் சம்பந்தப்பட்ட உள்ளுணர்ச்சி வெளியீட்டை விரிவாக **'வாழ்வில் உயர்வுகொள்'** கவிதையில் காணலாம்.

சேசு முகம்மது என்றும்! -மற்றும்
சிவனென்றும் அரியென்றும் சித்தார்த்த னென்றும்,
பேசிவளர்க்கின்ற போரில்- உன்
பெயரையும் கூட்டுவர் நீ ஒப்பவேண்டாம்!
காசைப் பிடுங்கிடுதற்கே -பலர்
கடவுளென்பார்! இரு காதையும் மூடு!
கூசி நடுங்கிடுதம்பி! -கெட்ட
கோயிலென்றால் ஒரு காதத்திலோடு!

கோயில் திருப்பணி என்பர்-அந்தக்
கோயில் விழாவென்று சொல்லியுன் வீட்டு
வாயிலில் வந்துனைக் காசு- கேட்கும்
வஞ்சக மூடரை மனிதர் என்னாதே!
வாயைத் திறக்கவும் சக்தி-இன்றி
வயிற்றைப் பிசைந்திடும் ஏழைகட்கே நீ
தாயென்ற பாவனையோடு-உன்
சதையையும் ஈந்திட ஒப்புதல் வேண்டும்.

கடவுள் துவக்கிக் கொடுத்த -பல
கவிதைகள், பதிகங்கள் செப்பிய பேர்கள்
கடவுள் புவிக்கவதாரம் - அந்தக்
கடவுளின் தொண்டர்கள், லோக குருக்கள்,
கடவுள் நிகர் தம்பிரான்கள்-ஜீயர்
கழுகொத்த பூசுரர், பரமாத்து மாக்கள்
கடவுள் அனுப்பிய தூதர்-வேறு

கதைகளினாலும் சுகங்கண்டதுண்டா?

. . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . .

குடிக்கவும் நீரற்றிருக்கும்-ஏழைக்
கூட்டத்தை எண்ணாமல், கொடுந்தடியர்க்கு
மடங்கட்டி வைத்ததினாலே- தம்பி!
வசம்கெட்டு போனது நமது நன்னாடு
உழைக்காத வஞ்சகர்தம்மை-மிக
உயர்வான சாதுக்கள் என்பது நன்றோ?
விழித்திருக்கும் போதிலேயே- நாட்டில்
விளையாடும் திருடரைச் `சாமி' என்கின்றார்!
அழியாத மூடத்தனத்தை-ஏட்டில்
அழகாய் வரைந்திடும் பழிகாரர் தம்மை
முழுதாய்ந்த பாவலர் என்பார்- இவர்
முதலெழுத்தோதினும் மதியிருட்டாகும்.

இப்படி வாய்ப்பு கிடைக்கும் இடத்தில் எல்லாம் சுடுசொற்களாலும் விகடாலங்காரமாகவும் (Satirical) கடவுள், சாதிபேதம், மூடநம்பிக்கைகள் சம்பந்தப்பட்ட தன் கருத்துக்களைப் பாடியிருக்கிறார். சமயபேதம் வளர்த்தே தளர்வது நன்றா? காணுமானிடரைக் கனம் செயல்முறையா? கடவுள் எனும் மயக்கில் கவிழ்ப்பது முறையா? கோயிலுக்கொன்று கொடுத்திடல் அறமா? மடத்தில் வீணிற் பொருளைக் கொடுத்திடல் அன்போ? ஆழ்வுறும் ஆத்திகம் வைதிகம் சுகமா? என்றெல்லாம் **ஆய்ந்து பார்க்க** வேண்டுகிறார் கவிஞர். `பண்டொழிந்த புத்தன், ராமானுஜன், முகம்மது, கிறிஸ்து-எனும் பல பேர் சொல்லிச் சண்டையிடும் அறியாமை அறிந்தாரில்லை!' என்றெல்லாம் முன்னேறுவதற்காக அறைகூவல் விடுகிறார்.

மக்கள் பசிக்க மடத்தலைவர்க்கெனில்
வாழையிலை முற்றும் நறுநெய்யாம்-இது
மிக்குயிர் மேல்வைத்த கருணையாம்
கோயிலிலே பொருள்கூட்டும் குருக்களும்
கோதையர் தோளினிற் சாய்கின்றார்-இங்கு
நோயினிலே மக்கள் மாய்கின்றார்.

என்றெல்லாம் **'சாய்ந்த தராசு'** வில் கவிஞர் வர்ணிக்கிறார்.

நல்ல இலட்சியத்துடன் ஸ்தாபிக்கப்பட்ட மதத்திலும் நாளாவட்டத்தில் நஞ்சு கலந்து விடுகிறது என்பதைத் `தோழன்-தோழி சம்பாஷணை'மூலம் **சேசுபொழிந்த தெள்ளமுது'** வில் கவிஞர் எடுத்துரைக்கிறார்.

சொல்லிய சேசுவின் தொண்டர்கள்
எங்கடி? தோழி- அந்தத்
தொண்டர்கள் உள்ளனர், தொண்டு பறந்தது.

**பஞ்சமர் பார்ப்பனர்** என்பதெல்லாம் பாரத நாட்டுப் பழிச் சின்னத்தின் பெயர்

என்கிறார் கவிஞர். ஆலயம் சாமி அமைத்தவர் அறிவை இருட்டாக்கி ஆள நினைப்பவர் என்றும் சாற்றுகிறார்.

பாரதிதாசன் பார்வையில் **வீரத்தமிழன்** யார்?

என் தமிழர் மூதாதை! என் தமிழர் பெருமான்
இராவணன் காண்! அவன் நாமம் இவ்வுலகம் அறியும்!
வஞ்சக விபூஷணனின் அண்ணனென்று தன்னை
வையத்தார் சொல்லுமொரு மாபழிக்கே அஞ்சும்
நெஞ்சகனை, நல்யாழின் நரம்புதனைத் தடவி
நிறைய இசைச் செவியமுது தரும் புலவன் தன்னை
வெஞ்சமரில் சாதல்வர நேர்ந்திடினும் சூழ்ச்சி
விரும்பாத பெருந்தகையைத் தமிழ் மறைகள் நான்கும்
சஞ்சரிக்கும் நாவானை வாழ்த்துகின்ற தமிழர்
தமிழரென்பேன், மறந்தவரை சழக்கரெனச் சொல்வேன்!
......................
கீழ் செயல்கள் விடவேண்டும்! ராவணன் தன்
கீர்த்தி சொல்லி அவன் நாமம் வாழ்த்த வேண்டும்!

தம் ஆடை அணிகளில் பவிசைக் காட்டி பிறர் மதிக்க ஆலயம் வருகிற போலி பக்தர்களை **ஏசுநாதர் ஏன் வரவில்லை** என்ற கவிதையில் நையாண்டி செய்கிறார் கவிஞர். பணமும் பவிசும் படோடபமாய் இயங்கும் இடத்தில் ஆண்டவனுக்கு என்ன வேலை?

தலை, காது, மூக்கு, கழுத்து, கை, மார்பு, விரல்
தாள் என்ற எட்டுறுப்பும்
தங்க நகை, வெள்ளி நகை, ரத்தின மிழைத்த நகை
தைய லர்கள் அணியாமலும்,
விலை குறையும் ஆடைகள் அணிந்துமே கோயில் வர
வேண்டுமென்றே பாதிரி
விடுத்த ஒரு சேதியால் விஷமென்று கோயிலை
வெறுத்தார்கள் பெண்கள் புருஷர்!

நிலைகண்ட பாதிரி பின் எட்டுறுப்பேயன்றி
நீள் இமைகள், உதடு, நாக்கு
நிறைய நகை போடலாம், கோயிலில் முகம்பார்க்க
நிலைக்கண்ணாடியும் உண்டென
இலைபோட்டழைத்ததும், நகைபோட்ட பக்தர்கள்
எல்லோரும் வந்து சேர்ந்தார்;
ஏசுநாதர் மட்டும் அங்கு வரவில்லையே
இனிய பாரத தேசமே.

இலக்கியப் படைப்பில் படைப்பாளியைப் பொறுத்த வரையில் கடவுள் ஆயினும் சைத்தான் ஆயினும் ஒன்றே. பாத்திரப் படைப்பில் அவன் நியாயம் செய்ய வேண்டுமாயின் சார்பற்றவனாய் ஒழுக வேண்டும் என்பதற்கு *(Paradise Lost)* இழந்த சொர்க்கம் போன்ற படைப்புக்கள் உதாரணம். சைத்தான் அல்லவா முக்கிய பாத்திரம். பாண்டவர்கள், இராம லட்சுமணர்கள், நரசிம்மம் இவர்கள், கடவுள் அவதாரங்களாய்ப் பூஜை செய்யப்படும் நாட்டில் இவர்களின்

எதிரிகள் முறையே துரியனையும், ராவணனையும், இரணியனையும் எல்லாம் போற்றி வீரகாதை, சுமார் அறுபது எழுபது ஆண்டுகளுக்கு முன்னாலேயே அதிர்ச்சி வைத்தியமாய்ப் பாட வேண்டுமாயின் எத்தனைக்குப் புரட்சியுள்ளமும் அதை வெளியிடும் நெஞ்சமுத்தமும் இருந்திருக்க வேண்டும்.

`உன்னை விற்காதே'யில் கவிஞரின் நெஞ்சத்தில் குருதிப் பூக்கள் விரிகின்றன.

தென்னிலங்கை யிராவணன் தன்னையும்
தீயனென்னும் துரியனையும் பிறர்
என்ன சொல்லி யெவ்வாறு கசப்பினும்
இன்று நானவர் ஏற்றதைப் பாடுவேன்
இன்னுமிந்தச் செயலற்ற நாட்டினில்
எத்தனை துரியோதனர் வாழினும்
அன்னவர் தமைக் கொல்ல முயன்றிடும்
அந்தகன்தனை நான் கொல்ல முந்துவேன்

-இப்படி நெஞ்சில் தோன்றியதைப் பாட்டினில் நாட்டும் கவிஞனின் படைப்புப் பிரபஞ்சம் விரிகிறது.

நெஞ்சிலுற்றது செய்கையில் நாட்டுதல்
நீச மன்று;மறக்குல மாட்சியாம்!
நஞ்சமென்று பிறன்கையில் தாழ்கிலாத்
தன்மையாவது வீரன் முதற்குணம்!
நெஞ்சிலூறிக்கிடந்த தம் பூமியை
நேரில் மற்றவர் ஆண்டிடப் பார்த்திடும்
பஞ்சையன்று. துரியன் இராவணன்
பாரதக் குலம் வேண்டிடும் பண்பிதே

வெறும் சகட்டுமேனிக்கல்ல, காரணகாரிய தொடர்பு படுத்தியே விளக்குகிறார். படித்திருந்தாலும் ஓரிபோல் (ஓரி-கிழநரி) பதுங்குபவரை ஊமை நொள்ளை செவிடென்று கொள்வதனால்தான் இவருக்கு இந்த வெளியீட்டுத் துணிச்சல் ("ஓரிபோலப்பதுங்கும் படித்தவர் ஊமை நொள்ளை செவிடென்று சொல்லுவேன்!")

தன்குலத்தினைத் தூக்கிடும் தாம்பெனச்
சகம் சிரிக்கப் பிறந்த விபீஷணன்
நன் மனத்தவன் ராமனைச் சார்ந்ததை
நல்லதென்பது ராமன் முகத்துக்காம்
இன்பம் வேண்டிப் பிறன் வசமாவதை
இந்தத் தேசம் இகழ்ந்திடும் மட்டிலும்
துன்ப மன்றிச் சுகம் கிடையாதென்றே
துரைகள் சேர்ந்த சபைக்கு முன் கூறுவேன்

**பெண்கள்**

"மயிலை"ப் பாட வந்த கவிஞர் சிலேடையாக மயிலிடம் ஓர் `விஷயம்' சொல்கிறார்.

நீயும் பெண்களும் `நிகர்' என்கின்றார்!
நிசம் அது! நிசம்! நிசம்! -நிசமேயாயினும்
பிறர் பழி தூற்றும் பெண்கள் இப்பெண்கள்!
அவர் கழுத்து உன் கழுத்தாகுமோ சொல்வாய்!
அயலான் வீட்டில் அறையில் நடப்பதை
எட்டிப் பார்க்காதிருப்பதற்கே
இயற்கை அன்னை, இப்பெண்கட்கெலாம்
குட்டைக் கழுத்தைக் கொடுத்தாள்! உனக்கோ,
கறையொன்றில்லாக் கலாபமயிலே,
நிமிர்ந்து நிற்க நீள் கழுத்தளித்தாள்!
இங்கு வா உன்னிடம் இன்னதைச் சொன்னேன்
மனதிற்போட்டுவை; மகளிர் கூட்டம்
என்னை ஏசும் என்பதற்காக!

* * *

புவிக்கொன்றுரைப்பேன்; புருஷர் கூட்டம்
பெண்களை ஆதிப் பெருநாள் தொடங்கி
திருந்தா வகையிற் செலுத்தலால், அவர்கள்
சுருங்கிய உள்ளம் விரிந்த பாடில்லையே!

`சுருங்கிய உள்ளம்'-பின்புத்திக்குக் காரணம் புருஷர் கூட்டமே என்பது கவிஞர் முடிவு.

`சின்ன வயதினில் மணந்த சீமான் செத்துவிட்டது நான் செய்த குற்றமன்று!' என்று கண்ணீர் சொரியும் `அமங்கலை' ஒருத்தி காளை குப்பனிடம், `மணந்திட நெஞ்சில் வலிவுளதோ?' என்று துணிச்சலாகக் கேட்பதை `மாந்தோப்பில் மணத்தில்' பார்க்கிறோம்.

`சாதியிலுன்னை விலக்கிடுவோம்-உன்
தந்தையின் சொத்தையும் நீ இழப்பாய்!-நம்
ஆதிவழக்கத்தை மீறுகின்றாய்! தாலி
அறுத்தவளை மணம் ஒப்புகின்றாய்! நல்ல
கோதையொருத்தியை யாம் பார்த்து மணம்
கூட்டி வைப்போம் என்று சத்தமிடும்

`பற்பல வீணர்களும் வேறு விதியற்ற சிற்சில பண்டிதரும்' இன்றும் சமூகத்தில் இயங்கும்போது அன்றே அவர்கள் முகத்திரையை `பேடி வழக்கங்கள், மூடத்தனம்-இந்தப் பீடைகளே இங்குச் சாத்திரங்கள்' என்று தன் பாட்டால் கிழிக்க இக் கவிஞர் அஞ்சவில்லை.

`ஏதோ இருக்கின்றேன், சாகவில்லை' என்று காதற் கடிதம் தீட்டும் காதலிகளையும் படம் பிடித்துக் காட்டுகின்றார் இவர்.

இளந்தலைக் கைம்பெண் `ஆணழகன்' ஒருவனிடம் `வெள்ளத்தினோடொரு வெள்ளமுமாய் - நல்ல வீணையும் நாதமும் ஆகிவிட்டதை', `தீமையுண்டோ?' என்று வினவுகிறார்

**காதற்குற்றவாளிகளில்**-துட்ட இருட்டறையே நீதி கொள்' என்று `சூது நிறைந்த வுலகை' நிந்தனை செய்து `தூய நற்காதலர்க்கே பெருந் தொல்லை தரும் புவியில் மாய்க நமதுடல்கள்! விஷம் மாந்துக நம் மலர்வாய்! போய்

நுகர்வோம் சலியா இன்பம்! பூமியின் கர்ப்பத்திலே! என்று விஷம் குடிக்கும் காதலர்கள் `காதற்பெருமை'யில்.

எனை மணந்தார் இறந்தார், என் குற்றமல்ல
இறந்தவுடன் மங்கலநாண், நல்லாடைகள்
புனைமலர் குங்கும அணிகள் போனதுண்டு,
பொன்னுடலும் இன்னுயிரும் போனதுண்டோ?

என்று காதலைத் தீய்த்த கட்டுப்பாடு பொறுக்காது கேட்டு இறுதியில் ஊரார்களினால் தீய்ந்து விடும் மற்றும் இருவர்.

தன்கணவன் செத்துவிட்டபின் மாது
தலையிற் கைம்மை என ஓர் பெருந்
துன்பச் சுமைதனை தூக்கிவைத்தார்; பின்பு
துணைதேட வேண்டாம் என்றார்.
துணைவி இறந்த பின் வேறு துணைவியைத்
தேடுமோர் ஆடவன் போல்-பெண்ணும்
துணைவன் இறந்தபின் வேறுதுணைதேடச்
சொல்லிடுவோம் புவிமேல்

என்கிறார் கவிஞர் `கைம்மைப்பழி'யில்.

`அழகிய பெண்கள் -நமக்கோ
அழுகிய பழத்தோல்'

என்று அங்கலாய்த்து,

"மாண்டவன் மாண்டபின்னர் அவனின் மனைவியின் உளத்தை" காணாத `ஆண்டையரைச் சாடுகிறார் `கைம்மைக் கொடுமை'யில்.

பெண்களைப் பற்றிப் பர்னாட்ஷா சொன்னதை எடுத்துச் சொல்லி, `குள்ளர்களே, கேட்டீரோ ஷாவின் பேச்சை' எனக் குரல் எழுப்புகிறார்.

பொருந்தா மணத்தை- மூடத்திருமணத்தை எத்தனைக்கு வீறுகொண்டு தாக்குகிறார் இவர். மருமகனும் மகளும் கனிந்து காதல் விளைப்பதைக் காண ஓடின கண்கள் கண்டது என்ன? `வாயின் கடையில் எச்சில் வழியக் குறட்டை விட்டுக், கண்கள் குழிந்து நரைத்தலை சோர்ந்து, நல்லுடல் எலும்பாய்ச் சொந்த மருமகக் கிழவன் தூங்கினான்! இளமை ததும்ப, எழிலும் ததும்பக் காதல் ததும்பக், கண்ணீர் ததும்பி மகள் கிழவனருகில் இருந்தாள். சிவந்த கன்னத்தால் விளக்கொளி சிவந்தது! கண்ணீர்ப் பெருக்கால் கவின் உடை நனைத்தாள். தொண்டு கிழவன் விழிப்பான் என்று கெண்டை விழிகள் மூடாக் கிளிமகள் காதலும், தானும் கனலும் புழுவுமாய் ஏங்கினாள்'. பின்பு விஷம் குடித்துத் தற்கொலை செய்ய முனைந்த அவளைத் தடுத்துவிட்டு, சமூகத்தின் நேர் கவிஞர் தொடுக்கும் சாபம் அக்கினிப்பிழம்பாய்த் தெறிக்கிறது.

மண்ணாய்ப்போக! மண்ணாய்ப்போக!
மனம் பொருந்தா மணம் மண்ணாய்ப்போக!
சமூகச் சட்டமே! சமூக வழக்கமே

நீங்கள், மக்கள் அனைவரும்
ஏங்காதிருக்க மண்ணாய்ப் போகவே!

சுதந்திரம் என்பதைத் `தரும்போது கொள்வதுதான் தருமம்' என்றிருக்காது `தராவிடில் மேற்கொள்ளும்' ஆத்மதைரியம் படைத்தவர் இக் கவிஞர். குழந்தை மணத்தின் கொடுமையைப் பாடுவது மட்டுமல்ல: பெண்ணுக்கு நீதியும், கல்யாணம் ஆகாத பெண்ணை அழைத்துப் போதனைச் செய்கிறார்:

"கனத்த உன் பெற்றோரைக் கேளே! அவர்
கல்லொத்த நெஞ்சையுன் கண்ணீரினாலே
நனைத்திடுவாய் அதன் மேலும்-அவர்
ஞாயம் தராவிடில் விடுதலை மேற்கொள்"

**சமுதாயச் சீர்கேடுகள்**

`கலையாவும் தமிழ் மொழியால் விளைந்தோங்க' விருப்பம் கொண்டவர் இக்கவிஞர்.

விந்தை உரைத்திடுவேன்-அந்த
வேளையில் அங்கொரு வாள்விழிகொண்டவள்
முந்த ஓர் பாட்டுரைத்தாள்-அது
முற்றுந் தெலுங்கில் முடிந்து தொலைந்தது
பிந்தி வடக்கினிலே-மக்கள்
பேசிடும் பேச்சினில் பாட்டு நடத்தினள்
எந்தவிதம் சகிப்பேன்?
................
............ ........
சங்கீத விற்பனனாம்-ஒரு
சண்டாளன் ஆரம்பித்தான் இந்துஸ்தான் ஒன்றை;

இந்நேரம் எங்கிருந்தோ தமிழில் கேட்ட இன்ப நறுங்கவி `தமிழ்ப் போசனமாய்'-தமிழ் உணவாய் இனித்தது.

`இன்பத்தமிழ் கல்வியாவரும் கற்றவர் என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால் தமிழ் பேறாய் இறுமாப்படைகிறார் கவிஞர். தமிழ்வளர்ச்சி என்றால் `எங்கள் தமிழ் உயர்வென்று நாம் சொல்லிச் சொல்லித் தலைமுறைகள் பல கழித்தோம்; குறைகளைக் களைந்தோமில்லை' என்றுவிட்டு இனி என்ன செய்ய வேண்டும் என்பதற்கு ஒரு பட்டியலே தருகிறார்.

எளிய நடையில் தமிழ் நூல் எழுதிடவும் வேண்டும். இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும். வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாம் கண்டு தெளிவுறுத்தும் படங்களோடு சுவடியெலாம் செய்து செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும். எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லையென்றால் இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும். உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூல்கள் ஒருத்தர் தயை இல்லாமல் ஊரறியும் தமிழில் சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிடவேண்டும். தமிழ் மொழியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும். இலவச நூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்.

கவிஞரின் எந்நாளோ? என்ற ஏக்கங்கள் இந்நாள்வரை கை கூடியதாகத் தெரியவில்லையே. தமிழ் நாட்டின்கண் எல்லோரும் கல்வி கற்றுப் பன்னருங்கலை ஞானத்தால், பராக்கிரமத்தால், அன்பால் உன்னத இமயமலைபோல் ஓங்கிடும் கீர்த்தியெய்தி இன்புற்றார் என்று மற்றோர் இயம்பக் கேட்டிடல் எந்நாளோ என்ற கவிஞனின் ஆசை பேராசை அல்லவே...! தமிழரின் கவிதை தன்னை ஆயிரம் மொழியிற்காண இப்புவி அவாவிற்றென்ற தோயுறும் மதுவின் ஆறு தொடர்ந்து தன் செவியில் வந்து பாயும் நாள் எந்நாளோ என்றும் ஏங்கினார்.

தறுக்கினாற் பிறதேசத்தார்
தமிழன்பால் - என் நாட்டான்பால்
வெறுப்புறும் குற்றஞ்செய்தா
ராதலால் விரைந்தன்னாரை
நொறுக்கினார் முதுகெலும்பைத்
தமிழர்கள் என்ற சேதி
குறித்த சொல் கேட்டின்பத்திற்
குதிக்கும் நாள் எந்த நாளோ?

என்ற அங்கலாய்ப்புடன் நிற்கவில்லை. சங்கநாதமும் முழக்குகிறார்.

சிங்களஞ்சேர் தென்னாட்டு மக்கள்
தீராதி தீரரென்றூ தூது சங்கே
பொங்கு தமிழர்க்கின்னல் விளைத்தால்
சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு!

கவிஞரின், 'எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார், இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!' என்ற ஆசையை நப்பாசையாக்கும் விஷவித்துக்கள் நம்மிடையில் இன்றும் இருப்பதை நாமறிவோம். இதையும் கவிஞர் அன்றே உணர்ந்திருந்தார் என்பதற்கு அத்தாட்சி அவர் தமிழ்க்கனவு. சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பில்லாமைக்கு உலகப்பரிசுகள் ஏதாவது உண்டென்றால் அது தமிழ் இனத்துக்கே கிடைக்கும்.

வீரத்தமிழன் வெறிகொண்டெழுந்தான்!
உரக்கக் கேட்டான். உயிரோ நம் தமிழ்?'
அகிலம் கிழிய ஆம்! ஆம்! என்றனர்!!'
ஒற்றுமை என்றான்; நற்றேன் என்றனர்.
உள்ளன்பு ஊற்றி ஊற்றி ஊற்றித்
தமிழை வளர்க்கும் சங்கம் ஒன்று
சிங்கப்புலவரைச்சேர்த்தமைத்தார்கள்!
உணர்ச்சியை, எழுச்சியை, ஊக்கத்தையெலாம்
கரைத்துக் குடித்துக் கனிந்த கவிஞர்கள்
சுடர்க்கவி தொடங்கினர்! பறந்தது தொழும்பு (அடிமைத்தனம்)
கற்கண்டு மொழியில் கற்கண்டுக் கவிதைகள்
வாழ்க்கையை வானில், உயர்த்தும் நூற்கள்,
தொழில்நூல், அழகாய்த் தொகுத்தனர் விரைவில்!
காற்றிலெலாம் கலந்தது கீதம்!
சங்கீதமெலாம் தகத்தகாயத் தமிழ்!
காதலெலாம் தமிழ் கனிந்த சாறு!

கண்ணெதிர் தமிழ்க் கட்டுடல் வீரர்கள்!
காதல் ததும்பும் கண்ணாளன்றனைக்
கோதை ஒருத்தி கொச்சைத் தமிழால்
புகழ்ந்தாளென்று, பொறாமல் சோர்ந்து
வீழ்ந்தான்! உடனே திடுக்கென விழித்தேன்
அந்தோ! அந்தோ! பழய
நைந்த தமிழரோடு நானிருந்தேனே!'

தமிழர் நிலை ஏற்றம்பெற யதார்த்தத்தை அங்கதமாய்ப் பாடிய இக்கவிஞர், 'தன் பெண்டு தன் பிள்ளை சோறுவீடு சம்பாத்யம் இவையுண்டு தானுண்டென்போன் சின்னதொரு கடுகுபோல் உள்ளங்கொண்டோன் தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்!' என்று இடித்துரைத்துவிட்டு, 'தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம் தொல்லுலக மக்களெலாம் ஒன்றே' என்னும் தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! அங்கே சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்ததாலே' என்று உலக ஒற்றுமை யை எத்தனைக்குச் சுருதி சுத்தமாய் முரசறைந்து முடிக்கிறார்.

'இன்பம் எல்லார்க்கும்' 'செல்வங்கள் யார்க்கும்' என்றெல்லாம் சொல்லிப் பேரிகை தூக்கில் முழக்கிடுவாய்! என்றும் பாடுகிறார்.

தமிழ் நாட்டிற் சினிமா வந்ததையும் கவிஞர் பாடும்பொருளாக்குகிறார்.

என்தமிழர் படமெடுக்க ஆரம்பஞ்செய்தார்.
எடுத்தார்கள் ஒன்றிரண்டு பத்து நூறாக!
ஒன்றேனும் தமிழர் நடையுடை பாவனைகள்
உள்ளதுவாய் அமைக்கவில்லை, உயிர் உள்ளதில்லை!
ஒன்றேனும் தமிழருமை உணர்த்துவதாயில்லை!
ஒன்றேனும் உயர் நடிகர் வாய்ந்தது வாயில்லை!
ஒன்றேனும் வீழ்ந்தவரை எழுப்புவதாயில்லை!
வடநாட்டார் போன்ற உடை, வடநாட்டார் மெட்டு!
மாத்தமிழர் நடுவினிலே தெலுங்கு கீர்த்தனங்கள்!
வடமொழியில் ஸ்லோகங்கள்! ஆங்கிலப்ரசங்கம்!
வாய்க்குவரா இந்துஸ்தான்! ஆபாச நடனம்!
அடையும் இவை அத்தனையும் கழித்துப் பார்க்குங்கால்
அத்திம்பேர் அம்மாமி எனுந்தமிழ்தான் மீதம்!
கடவுளர்கள், அட்டைமுடி, காகிதப் பூஞ்சோலை
கண்ணாடி முத்துவடம் கண்கொள்ளாக் காட்சி!
பரம சிவன் அருள்புரிய வந்து வந்து போவார்!
பதிவிரதைக் கின்னல்வரும் பழையபடி தீரும்!
----- ------- ---- ----
----- ------ ---- ----
படக்கலைதான் வாராதா என நினைந்த நெஞ்சம்
பாழ்படுத்தும் முதலாளி வர்க்கத்தின் செயலால்,
படக் கலையாம் சனியொழிந்தால் போதுமென எண்ணும்
பயன்விளைக்கும் விதத்தினிலே பல செல்வர் கூடி
இடக்ககற்றிச் சுயநலத்தைச் சிறிதேனும் நீக்கி
இதயத்தில் சிறிதேனும் அன்புதனைச் சேர்த்துப்

படமெடுத்தால் செந்தமிழ் நாடென்னும் இளமயிலும்
படமெடுத்தாடும், தமிழர் பங்கமெலாம் போமே!

விமர்சனத்தோடு நிற்கவில்லை, ஆக்க வழியையும் சொல்லித்தான் முடிக்கிறார். `வாசிக்க வருபவரின் வருகை ஏற்றும், மரியாதை காட்டி அவர்க்கிருக்கை தந்தும், ஆசித்த நூல் தந்தும் புதிய நூல்கள் அழைத்திருந்தால் அதையுரைத்தும், நாளும் நூலை நேசித்து வருவோர்கள் பெருகும் வண்ணம் நினைப்பாலும் வாக்காலும் தேகத்தாலும் மாசற்ற தொண்டிழைக்கவும் சமுதாயச் சீர் மறுமலர்ச்சி காணவும்' புத்தக சாலை மூலம் உரைக்கிறார்.

மொத்தத்தில் பாரதிதாசனின் இத்தகைய உள்ளுணர்ச்சி வெளியீட்டு சுதந்திரக் கொள்கையைப் பத்திரிகை கவிதையில் அவரே நேரடியாகப் பிரகடனம் செய்கிறார்.

"அறைதனில் நடந்த வற்றை
அம்பலத்திழுத்துப் போட்டுக்
கறையுளம் தூய்மை செய்வாய்!
களைப்பிலே ஊக்கம் பெய்வாய்!"

**முடிவாக**

இலக்கியத்தில் உள்ளுணர்ச்சி வெளியீட்டுச் சுதந்திரம் (*Freedom of Expression*) என்பது இன்றைய அனைத்துலக பிரச்னை. சாலமன் ரஷ்தி, சப்தர் ஆஸ்மி போன்றவர்கள் மட்டுமல்ல எத்தனை எத்தனையோ எழுத்தாளர்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்கள் நமது மனச்சாட்சியைக் கிளர்ந்தெழச் செய்யும் இந்த யுகத்தின் யாகக் குதிரைகளாய் வலம் வருகின்றன. நமக்கேன் வம்பு என்ற செக்கோஸ்லேவியா கவிஞனின் கூற்றுப்படியுள்ள பொய்யர்களாய் கண்மூடி இருட்டாக்கும் நிலைமையை மீறவே இந்தக் கட்டுரை. துவக்கத்தில் குறிப்பிட்டவாறு, கருத்துக்களின் உடன்பாடோ, இலக்கியச் செறிவோ இங்கே முக்கியமாக்கப்படவில்லை.. மாற்றுக் கருத்துக்களாயினும் காரமேறியிருப்பினும் ஓர் சுதந்திர சமுதாயத்தில் அதை வெளியிடும் உரிமை... அந்த உரிமையின் விலை உயிரோ உதையோ அல்ல., மாறாக கருத்துக்களின் ஆரோக்கியமான மோதலே, விமர்சனங்களே ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும் என்ற பகுத்தறிவே பண்பாடே என்ற அடிப்படை உணர்வு.

பாரதிக்கு இருந்த ஆத்மீக ஞானம் அவர் தாசனுக்கு இல்லாதிருந்ததால் தான் இத்தகைய பச்சையான பகுத்தறிவுவாதங்கள் பிரச்சாரமாய் கவிதையில் இடம் பெற்று இலக்கியச்சுவையைக் குன்றச் செய்வதாய் வாதிடுபவர்கள், இன்றைய சிலி, ஆப்பிரிக்க கவிஞர்களின் உலகப் புகழ் வாய்ந்த, அனைத்து மொழிகளிலும் வந்து கொண்டிருக்கும் சுதந்திர வேட்கை மிக்க கவிதைகள் விளைவிக்கும் மானசீக அதிர்வுகளைப் பற்றி என்ன சொல்வார்களோ தெரியவில்லை.

*சஞ்சீவி பர்வதத்தின் சாரல்* போன்ற காவியத்தில் மாய மகேந்திரங்களை நாடாது மூலிகை மூலம் ஓர் அறிவாராய்ச்சி (*RATIONAL*) அடிப்படைத் தளம் அமைப்பதால் அதன் இலக்கிய நயம், பாரதியின் முப்பெரும் பாடல்களுக்குச் சோடை போய்விடுவதாய் சொல்ல முடியுமா? `புரட்சிக் கவி'யின் `நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து நிலாவென்று காட்டுகின்றாய் ஒளி முகத்தைக் கோல முழுதும் காட்டிவிட்டால் காதற் கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? போன்ற கவித்துவ இனிமைமிக்க வரிகளைப் பாடவல்லமை மிக்க இக்கவிஞர், ஒருபோதும்

தன் உள்ளுணர்ச்சி வெளியீட்டுச் சுதந்திரத்தை வெறும் கற்பனையிலும் வரட்டுத் தத்துவங்களிலும் ரொமான்டிக் ரீதியில் கட்டுப்படுத்தி நிறுத்திவிடவில்லை. வேற்று மொழியினத்தவர் மட்டுமல்ல, நம் மொழி இளைய தலைமுறையினர் கூட இவருடைய கவிதை வரிகளிடம் நேரடி பரிச்சயம் குறைந்திருப்பதை உணர்ந்துதான், சிலருக்கேனும் அதிகம் - என்று தோன்றும் அளவுக்கு அவர் கவிதைகளை இங்கே எடுத்தாண்டிருக்கிறேன். ஓர் கவிஞனின் உள்ளுணர்வு வெளியீடு கூடிய மட்டும் இடைத்தரகர் குறுக்கீடின்றி வாசகர் மனதை எட்டவேண்டும் என்பதே ஓர் விமர்சகன் என்பதை விட `கவிஞன்' என்று அறியப்பட ஆசைப்படும் இந்தக் கட்டுரையாளனின் தாத்பரியம் என்பதும் இதற்கு இன்னொரு காரணமாக இருக்கலாம்.

## . பாவேந்தர் பாரதிதாசனும் இயற்கையும்

-பீ. டாக்டர் நசீம்தீன்

அறிவும் உணர்ச்சியும் இணைந்த மனிதவாழ்வில் இயற்கையை அறிந்து சொன்னவன் அறிஞன்; உணர்ந்து சொன்னவன் கவிஞன். ஒவ்வொரு காலநிலையிலும் இயற்கை மனிதனுக்குப் புதிராய், இறையாய், தாயாய், தோழனாய்ப் பல தோற்றங்கள் காட்டியிருப்பதை அறியமுடிகிறது. காலத்தின் ஓட்டத்தில் அறிவியல் மதிப்பீடுகள் மாற்றம் கொள்வதைப் போலவே கலையிலும் மதிப்பீடுகள் மாற்றங்களை ஏற்கின்றன. க்விஞர்களின் பார்வையிலும் இயற்கை பற்றிய கொள்கைகள் இம்மாற்றங்களை ஏற்கத் தவறவில்லை. மேலை நாட்டுக் கவிஞர்களின் இலக்கியப் படைப்புக்களை ஆராயும்போது ஒவ்வொருவருக்கும் இயற்கை பற்றிய ஒருதனிக் கொள்கை இருப்பதை உணரலாம். வில்லியம் பிளேக் இயற்கையை இறைவனாகிய பரம்பொருளின் முகத்திரையாகக் கண்டான். வேர்ட்ஸ்வொர்த்தோ அழகுணர்ச்சிகாட்டி அறிவையும் புகட்டும் ஒரு தோழியாகக் காண்கின்றான். உணர்வுக் கவிஞர்களாகிய ஷெல்லி, கீட்ஸ், பைரன் போன்றோர் உணர்வைத் தூண்டிப் புலன் இன்பந்தரும் காதலி நிலையில் இயற்கையைக் காண்கின்றனர். ஜப்பானிய `ஹைகூ' கவிதைகளில் உணர்ச்சி பாவத்தை வெளியிடும் முகமாகவே இயற்கை கையாளப்பட்டுள்ளது.

சங்க இலக்கியங்களில் மட்டுமே இயற்கை பற்றிய இலக்கியக் கொள்கை வரையறுக்கப்பட்டதாகவும் பிறநாட்டுக் கொள்கைகளையும் மிஞ்சுவதாகவும் அமைந்திருக்கக் காண்கிறோம். முதல், கருப்பொருளாக உணர்ச்சி வெளிப்பாட்டைக் கூர்மைப்படுத்தித் தெளிவாக்கும் பின்புலமாக *(Settings)* இயற்கை பயன்படுத்தப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்தின் `நடப்பியல் தன்மை'க்கு *(Realism)* இதுவே காரணம். காவிய காலத்தில் இயற்கை வெறும் அழகுக்காக, ஆறு, கடல், நாட்டு வருணனையாகக் கையாளப்படுகிறது. பக்தி இலக்கியம் இயற்கையில் இறைவடிவம் காண்கிறது. இயற்கைபற்றிய சங்க இலக்கியத்தின் ஒப்பற்ற கொள்கை தமிழ் இலக்கியத்திலிருந்து மறைந்திருப்பதையே அறியமுடிகிறது.

தமிழ்க்கவிதை பாரதிக்குப்பின் மறுவாழ்வு பெற்றபோது ஷெல்லி போன்றோரின் கவிதைத்தாக்கம் தமிழில் ஏற்படத் தொடங்கியது. பாரதி தன்னை ஷெல்லிதாசன் என்று கூறிக்கொண்டான். ஆறு, கடல், முதலான வசன கவிதைகள்வழி இயற்கையோடு தனக்குள்ள பிணைப்பை உறுதியாக்கிக் கொண்டான் பாரதி. அப்பாரதியின் தாசன்தான் மேல்நாட்டு இயற்கைக் கவிஞர் போல் தமிழில் இயற்கை தழுவிய ஒரு முழுநூலையே (அழகின் சிரிப்பு) படைத்த முதற் கவிஞராக இருக்கிறார். பிற பாடல்களிலும் அவர் இயற்கையைக் கையாண்ட நிலையை ஆராயும்போது, `பாவேந்தர் பாரதிதாசன்' அதை அழகுணர்வின் நிலையமாகவும், தம் புரட்சிக் கருத்துக்களை ஏற்றி முழங்கும் மேடையாகவுமே பயன்படுத்தி யுள்ளமை தெளிவாகின்றது.

பாரதியார் பராசக்தியின் தோற்றமாக இயற்கை அழகினைக் கொள்கிறார்[1]. இயற்கையை இறையோடு ஒத்துக்காணும் நோக்கிற்கு எதிரானவர் பாரதிதாசன்[2]. கவிஞன் இயற்கையை

1. பாரதியார், பாஞ்சாலிசபதம், பக். 48
2. ஆராய்ச்சி (இதழ்) அக்டோபர் 1972, பாரதிதாசனும் கடவுட் கொள்கையும் பக். 143.

நோக்கும் முறையில் அவனது தனிவாழ்வு வெளிப்படலும் உண்டு. ரூட்ஸ் எனும் ஆங்கிலக் கவிஞர் பாலுணர்ச்சியோடு இயற்கையைக் காண்கிறார். இயற்கையில் இறைமையைக்காணுகின்றனர் ஷெல்லியும் வேர்ட்ஸ்வொர்த்தும். பாரதியும், பாரதிதாசனும் தத்தம் குறிக்கோள்களை இயற்கையில் காணுகின்றனர்.

மேனாட்டில் 18-ஆம் நூற்றாண்டில் நிலவிய தனிப்பட்ட இயற்கை வர்ணனையில் ஒரு குறிப்பிட்ட தத்துவம் உள்ளுறைந்திருந்தது. இயற்கைக் காட்சியின் வாயிலாகத்தான் தத்துவம் விளக்கப்பட்டது[3]. கவிஞன் தனது குறிப்பை இயற்கையின் மேலேற்றிக்கூறும் முறையைச் சிலம்பில் காணலாம்.

"வையை என்னும் பொய்யாக்குலக்கொடி
தையற்கு உறுவது தானறிந்தனள்போல்
புண்ணியநறுமலர் ஆடை போர்த்துக்
கண்ணிறை நெடுநீர் கரந்தனள் அடக்கி"

(சிலப். 13: 170-173)

இயற்கை மனித உயிர்க்காக இரங்குதல் போல் அமையும் குறிப்பு அகப்பொருளில் காமம் மிக்க கழிபடர் கிளவியில் காணலாம். ஆங்கில இலக்கியத்தில் "எலிசபெத்காலத்தின்முற்பகுதியில் வாழ்ந்த சர் தாமஸ்வியர் என்ற கவிஞர் கைக்கிளைக் காதலுக்கேற்ப இயற்கை அரங்கினைப் பயன்படுத்துகிறார்."[4]

"காக்கை குருவி எங்கள் சாதி - நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்"

(ஜயபேரிகை -3)

என மனித இனத்தோடு இயற்கையை இணைத்தான் பாரதி. பாரதியின் இலக்கிய மரபைப் பின்பற்றிய பாவேந்தர் பாரதிதாசன் இயற்கையைப் பாடுவதில் பாரதியை விஞ்சி நிற்கிறார். தமிழிலக்கிய மரபு கண்டிராத புதுமைப் புரட்சியை அழகின் சிரிப்பு மூலம் செய்கிறார் பாவேந்தர். இயற்கைபற்றிய விளக்க வர்ணனை இயக்கமுடையதாகவும் (active) இயக்கமின்றியும் (still) அமைதலுண்டு. இவ்விருநிலைகளையும் பாவேந்தரின் அழகின் சிரிப்பில் காணலாம்.

பாவேந்தர் இயற்கையை ஐந்து நிலைகளில் பயன்படுத்துகின்றார்.

1. இயற்கை அளிக்கும் காட்சியழகில் ஈடுபட்டுச் சித்திரிப்பது.
2. இயற்கையை உவமையில் பயன்படுத்துவது
3. இயற்கையைப் பயன்படுத்திக் குறிப்பாகக் கருத்தைத் தெரிவிப்பது.
4. இயற்கையை மானிடவாழ்வுடன் இணைத்துக் காட்டுவது.
5. இயற்கையின் வாயிலாக அரிய நீதிகளையும் பெரிய உண்மைகளையும் தெரிவிப்பது.

3. ரெனிவெல்லக் ஆஸ்டின் வாரன், 'இலக்கியக் கொள்கை', 1966, பக் 271.
4. திருமதி தரஙி பாஸ்கர், 'ஆண்டாள் பாடல்களில் இயற்கை', ஆய்வுக்கோவை, 1971

பாவேந்தரின் கவியுள்ளத்தில் இயற்கை பற்றிய எண்ணமே குடிகொண்டிருந்தது எனலாம். இதனால்தான் பாரதியிடம் அறிமுகமானபோது பாடிய,

"எங்கெங்குக் காணினும் சக்தியடா - தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா! அங்குத்
தங்கும் வெளியினிற் கோடியண்டம் - அந்தத்
தாயின்கைப் பந்தென ஓடுமடா! - ஒரு
கங்குலில் ஏழு முகிலினமும் - வந்து
கர்ச்சனை செய்வது கண்டதுண்டோ - எனில்
மங்கை நகைத்த ஒலியெனலாம் - அவள்
மந்த நகையங்கு மின்னுதடா!"

என்ற பாட்டிலும் இயற்கையை பௌதிகக் கருத்தாகக் கண்டுரைத்தார். தமிழின் சிறப்புக்கூறித் தமிழரிடம் எழுச்சியூட்டும் பாட்டிலும் இயற்கையை இணைக்கிறார் புரட்சிக்கவிஞர்.

"திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்
விண்ணோடும் உடுக்களோடும்
மங்குல்கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன்
பிறந்தோம் நாங்கள்".

என்று பாடுகின்றார்.

"இளமை தந்தாய் உணர்வு தந்தாய் இன்பங்காணும்
இன்னுயிரும் தந்திட்டாய் இயற்கைத் தேவி"

(பா.தா.க.1. காதலைத் தீர்த்த கட்டுப்பாடு பக்.82)

என்றும் இயற்கையைப் போற்றுகின்றார். இதனால்தான் திரு.வி.க. "எனக்குக் குயிலின் பாடலும் மயிலின் ஆடலும் வண்டின் யாழும், அருவியின் முழவும் இனிக்கும்; பாரதிதாசன் பாட்டும் பிடிக்கும்"[5], என்று பாவேந்தர் பாடலையே இயற்கைப் பொருட்களோடு இணைத்தார்.

**உணர்ச்சி வெளியீட்டில் இயற்கை**

சாதாரண மனிதனின் உணர்ச்சியும் கவிஞனின் உணர்ச்சியும் மாறுபாடானவை. கவிஞன் உலக உயிர்களின் உணர்ச்சிகளைத் தனதாக உணர்ந்து, கற்பனைக் கற்களால் காவியமாளிகை கட்டுகின்றான். இயற்கைக் கவிஞர்களின் உணர்ச்சி வெளியீட்டில் இயற்கையின் பங்கு இன்றியமையாததாக அமைகின்றது. பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகள் இதை நிலைநாட்டுகின்றன.

பாவேந்தர் பாரதிதாசனும் அழகின் சிரிப்பில் இன்பம் கண்டார். அழகினைப் பெண்ணாகக் கண்டின்புறுகின்றார்!

"காலையிளம் பரிதியிலே அவளைக்கண்டேன்!
கடற்பரப்பில், ஒளிப்புனலில் கண்டேன்! அந்தச்
சோலையிலே, மலர்களிலே தளிர்கள் தம்மில்

5. புரட்சிப் பாவலர் பாரதிதாசன், பக்22

தொட்ட இடம் எலாம் கண்ணில் தட்டுப்பட்டாள்!
மாலையிலே மேற்றிசையில் இலகு கின்ற
மாணிக்கச் சுடரில்அவள் இருந்தாள்! ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்
தனில் அந்த அழகென்பாள் கவிதை தந்தாள்"

(அ.சி.அழகு -1)

இயற்கையின் அழகு ஏற்படுத்திய உள்ள உணர்ச்சிகள் கவிதையாகி அழகின் சிரிப்பாய் மின்னுவதை இங்குக் காண்கிறோம்.

பாவேந்தரின் அழகுணர்ச்சி பாரதியாரின் அழகுணர்வினின்றும் மாறுபட்டது; ஆழ்ந்தது; நுண்ணியது; தன்னுணர்வை வெளிப்படுத்துவதோடு இயற்கையின் சிறிய அசைவையும் நுணுகிநோக்கி அதனைப் படம் பிடிக்கின்றார் பாரதிதாசன்.

"வேம்பின் பழம்பூ விரிந்ததைப் போல
ஈயின் கூடும் எறும்பின் கூடும்"

(இருண்ட வீடு பக்22)

எனும் பாடலடியில் ஈயின் கூட்டையும், எறும்பின் கூட்டையும் வரிந்திருக்கும் வேம்பின் பூவிற்கு ஒப்புவமையாகக் காட்சிப்படுத்துகின்றார். பாவேந்தரின் பாடல்களில் உணர்ச்சி வெளியீடு தற்கூற்றாகவும், பாத்திரங்களின் கூற்றாகவும், இயற்கையின் கூற்றாகவும், உணர்வின் நிலைகளாகவும் நிகழ்கிறது.

தாய் என்று தமிழைப் போற்றிவரும் தமிழ்ச் சமுதாயத்தில் தமிழை உயிராகவும், இயற்கைப் பொருள்களையும் விஞ்சிய உறவுடையதாகவும் கண்ட பெருமை பாவேந்தரையே சாரும். தமிழின் இனிமையை,

"நீலச்சுடர் மணிவானம் - ஆங்கே
நிறையக் குளிர்வெண்ணிலவாம்
காலைப் பரிதியின் உதயம் - ஆங்கே
கடல்மேல் எல்லாம் ஒளியாம்,
மாலைச் சுடரினில் மூழ்கும் - நல்ல
மலைகளின் இன்பக் காட்சி
மேலென எழுதுங் கவிஞர் - தமிழின்
விந்தையை எழுதத் தரமோ"

(பா.தா.க 1, தமிழின் இனிமை பக்.88)

இயற்கை அன்னையின் அரவணைப்பில் வளர்ந்ததாம் தமிழ். இதற்குச் சான்றுகூற நிலவை அழைக்கின்றார்.

"இலகு செந்தமிழையும் உன்னையும் கூட்டி
இயற்கை அன்னை வளர்த்த தில்லையோ பாலூட்டி?
ஆரியர் ஆட்சி வாய்ந்த பின்னை
அழகிய தமிழ் நூலாகிய பொன்னை

வேரொடு மாற்றிட வஞ்சம்என் னென்ன
விளைத்தார் அதைத்தான் கேட்டேன் உன்னை"

(இசையமுது. 2, நிலவே. பக்30)

இவ்வண்ணம் தமிழ்ப்புரட்சி செய்த பாவலர், தமது தமிழுணர்ச்சி வெளியீட்டிலும், இயற்கையை இணைத்து இலக்கியப்புரட்சியும் செய்திருக்கிறார்.

உழைப்பவர் வறியராகவும் அவர்மனப் புண்ணிலே அம்பு பாய்ச்சும் புலையர்கள் செல்வராகவும் இருக்கும் ஏற்றத்தாழ்வு தம்மனத்தில் ஏற்படுத்திய வெறுப்பு உணர்ச்சியை வெளியிட இயற்கையின் துணையை நாடுகிறார் கவிஞர். "இதனைக் கண்மீது பகலெல்லாம் கண்டு கண்டந்திக்குப்பின் விண்மீனாய்க் கொப்பளித்த விரிவானம் பாராய் தம்பி", என்று தம் துயரை வெளிப்படுத்தும் போது தமக்கு இயற்கையோடு உள்ள உறவை வெளியிடுவதோடு இம்மாந்தர்மீது இயற்கை கொள்ளும் உறவையும் வெளிப்படுத்துகிறார். (அ.சி.வான். பக்30)

வானம் உலகு முதலியவற்றின் அள்வுகண்டு ஏற்பட்ட வியப்புணர்ச்சியோடு தத்துவார்த்தமான அறிவுரைகளையும் நல்குகிறார்.

"எத்தனை பெரிய வானம்!
எண்ணிப்பார் உனையும் நீயே;
இத்தரை, கொய்யாப் பிஞ்சு,
நீ அதில் சிற்றெறும்பே
அத்தனை பேரும் மெய்யாய்
அப்படித்தானே மானே?
பித்தேறி மேல்கீழ் என்று
மக்கள்தாம் பேசல் என்னே?"

(அ.சி.வான். பக்.33)

பாடல் மாந்தரின் காதல், வீர உணர்ச்சியில் இயற்கையை இணைக்கும் முறையினையும் பாவேந்தர் பாடல்களில் காணலாம்.

(எ.டு) "என்னவியப்பது வானிலே - இருந்
திட்டத்தோர் மாமதி மங்கையாம்
என்னெதி ரேவந்து வாய்த்ததோ - புவிக்
கேதிது போலொரு தண்ணொளி"

(பா. தா. .க. 1. புரட்சிக்கவி பக். 22)

"பருந்தும் கண்மூடாத நரியும் நாயும்
பலபீட வரிசைகளும் கொடுவாள் கட்டுப்
பொருந்தட்டும்...... "

(பா.தா.க.1. புகவி பக்.31)

*பாவேந்தரும் அழகுணர்ச்சியும்*

கடல்காற்று, வானம்பாடி, இராக்குருவி (நைட்டிங்கேல்) முதலியவற்றை முன்னிலையாகப் புகழ்ந்து தமது உணர்ச்சிகளையும் சிந்தனைகளையும் வெளியிடுவதற்கு ஓட் (Ode) என்ற உருவத்தை ஆங்கிலக் கவிஞர் கையாண்டுள்ளனர்[6]. பாவேந்தரும் பல `பா' வகைகளில் இயற்கையின் அழகினைப் பாடியிருக்கிறார். பரிதியை வாழ்த்தும் கவிஞர்,

"எழுந்தது கீழ்க்கடல் மேல்
இளங்கதிர் மூசைத் தங்கம்
பொழிந்தது விண்ணும் மண்ணும்
பொலிந்தது தமிழர் நாடு!"

(பொ.வா.கு.பொங்.வாழ்த்து ப.2)

"உலகமிசை உணர் வெழுப்பிக் கீழ்த்திசையின் மீதில்
உதித்துவிட்டான் செங்கதிரோன், தகத்தகாயம் பார்."

(பா.தா.க. உதயசூரியன் ப.56)

என்றெல்லாம் போற்றுகின்றார். திங்களை,

"நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை
கோலமுழுதும் காட்டி விட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ: வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான்...!"

(பா. தா. க. -1. ப.20)

என்கிறார். கதிரின் காட்சியைப் புலப்படுத்தும் போதெல்லாம். கவிஞருக்குத் `தகத்தகாயக்' காட்சி நினைவுக்கு வருகிறது.

கவிஞரின் நிலவு பற்றிய உருவகங்கள் பிற்கால உருவகக் கவிதைகள் உருவாகக் காரணமாயின எனில் அது மிகையன்று. அழகுநிலா சினம் கொண்டால் எப்படியிருக்கும்? "முத்துச்சுடர்முகம் சிவந்ததும் ஏன்? உனக்கித்தனை கோபம் ஏற்றியதார் நிலவே?" என்று கேட்டுத் "தோணித் தொழிலாளி துன்பங்கண்டு" என்று விடையும் காண்கிறார். (பா. தா. க - 2 மாவலிபுரச் செலவு பக் 24) கவிஞர் தொழிலாளர் மீது கொண்டிருந்தபற்று இயற்கை வழியாகக் காண்கிறோம். `கிளி'யினைப் பாடும்போது சுதந்திரம் உயிர்களின் பிறப்புரிமை என்னும் தத்துவத்தை மிக எளிய நடையில் எடுத்தியம்புகிறார். பாவேந்தர்.

"அக்கா அக்கா என்றுநீ அழைத்தால்
அக்கா வந்து கொடுக்கச்
சுக்கா மிளகா சுதந்திரம் கிளியே"

(பா. தா. க. 1. சுதந்திரம் ப. 180)

---

6. நா.வானமாமலை, `தமிழர் வரலாறும் பண்பாடும்' 1966, பக் 108

என்று வினவுகிறார்.

உழைத்து அலுத்துக்கிடக்கும் மக்களை `இருள்' தன் மணிநீலச் சிறகுகளால் மூடுகின்றதாம். அன்பின் பெருக்கத்தால், நிழலைக் குழந்தை இருளாகக் காண்கிறார் கவிஞர். கயல்விழிக்கடையிலும், தாமரை இதழின் அடிப்புறத்திலும்படுத்திருக்கிறது இருள். இதனால் "எங்கும் அனைத்துள்ளும் அழகு நீயே!" எனப்போற்றும் பாவேந்தரின் பார்வையே தனித்தன்மையுடையதாயிருக்கின்றது. இருளையும் அறிவுரை நல்கும் ஆசிரியனாகப் படைத்துக்காட்டுகிறார் பாவேந்தர் (அ.சி.இருள்.46).

இயற்கை உயிரினங்களின் காதல் பற்றிய கவிஞரின் வர்ணனைகள் ஓவியக்காட்சி போல அமைந்துள்ளன. (Picturesque descritption). அவற்றின் காதலில் உண்மைநிலை பொதிந்திருப்பதையும் மானுடர் காதலில் பல இடையூறுகள் நிகழ்வதையும் ஒப்பிட்டுக்காட்டி காதல் தத்துவத்துக்கே உயிரளிக்கிறார் கவிஞர்.

"மூச்சுடன் ஆணோ - அதன்
முதுகிற் குதிக்கும் - கொல்லர்
காய்ச்சும் இரும்பிடை நீர்த்துளி ஆகக்
கலந்திடும் இன்பத்திலே"

(பா.தா.க.1. மக்கள் நிலை பக்.61-62)

**கவிஞர் அழகினை உணரும் வகை**

இயற்கையின் அழகு விளையாட்டில் சிரிப்பைக் காண்பவர் கவிஞர். புரட்சிக் கவிஞர் இயற்கையின் சிறு அசைவிலும், சிறு பகுதியிலும், அழகின் சிரிப்பைக் காண்கிறார். ஒன்றோடு மற்றொன்றை ஒத்து நோக்கும் உவமை வழியாகவும், பல உருவகங்கள் மூலமாகவும், இயற்கை அழகைத்தாம் உணர்ந்த வகையில் கவிதை மொழியாக்குகின்றார். கவிஞரின் அழகுணர்ச்சி வெளியீட்டில் பெரும்பான்மையும், இவ்வமைப்பே காணப்படுகிறது. இயற்கை அழகும், இயக்கமும் காட்டி அதில் மனிதர் பெறும் பாடம் பற்றிக் குறிப்பிடும்போதும், மனிதர்நிலையை ஏளனம் செய்து கடிந்துரைக்கும்போதும் இயற்கையின் அழகு கவிஞருக்கு உதவுகின்றது.

பாரதியார் இயற்கை அழகினைக் காணும் வகைக்கும் பாவேந்தர் காணும் வகைக்கும் ஓரளவு ஒற்றுமை இருப்பதாகவே தோன்றுகிறது.

"துங்கமணி மின்போலும்
வடிவத்தாள் வந்து
தூங்காதே எழுந்தென்னைப்
பாரென்று சொன்னாள்!
அங்கதனிற் கண் விழித்தேன்
அடடாவோ! அடடா!
அழகென்னுந் தெய்வந்தான்
அதுவென்றே யறிந்தேன்"

(பா.க. அழகுத்தெய்வம், 1968, பக்.194)

என்று மகாகவிபாரதி அழகைத் தெய்வமாகத் காணுகின்றார்.

பாரதிதாசனும்

"திசை கண்டேன் வான் கண்டேன், உட்புறத்துச்
செறிந்தனவாம் பலப்பலவும் கண்டேன், யாண்டும்
அசைவனவும் நின்றனவும் கண்டேன், மற்றும்
அழகுதனைக் கண்டேன்நல் லின்பங் கண்டேன்"

(அ.சி. அழகு. பக்.1)

என்றும்,

"தாமரைப்பூவும் கழனித்
தடங்களும் சோலைக்
கோமகன் மொழியும் பசுவும்
குலவிய திருவே"

(எதிரொலிகள் திருபக். 10)

என்றும் பாடி அழகைத் தெய்வப் பெண்ணாகக் காட்டுகின்றார்.

கவிதையை இயற்றிய கவிஞனின் உணர்ச்சி, அதில்வரும் கற்பனை மாந்தரின் உணர்ச்சி, அதனைப்படிக்கும் நம் உணர்ச்சி ஆகிய மூன்றும் ஒன்றும்பொழுதே கவிதை அனுபவம் ஏற்படுகிறது என்பர். (ந.சுப்புரெட்டியார், கவிதையனுபவம், 1961, பக்.60).

பொருள்களில் அழகு இல்லை; புலன்களின் வாயிலாக மனமே அவற்றில் அழகை அமைத்துக் கொள்கிறது என்றனர். மேனாட்டு அறிஞர்கள் இதனால் `மனத்தின் அனுபவத்தை விட்டுப் பொருள்களிடத்தில் தனியே அழகில்லை' என்றே கொள்கின்றனர். (டாக்டர் மு.வ.இலக்கியத்திறன், 1965, பக்.26-27) ஆனால் பாவேந்தரின் மனத்தில் புறத்தேயுள்ள பொருள்களின் அழகு அனுபவமாய் அழகுருப்பெற்று அழியாக் கவிதைகளைப் படைக்கின்றது என்று துணியலாம். குழந்தைப்பாடலொன்றில்

"வானத் துாரார் - அவர்
மத்தாப்பைப் போல் நின்றார்
மீனுக்கெல்லாம் சொன்னார் - மேல்
மினுக்க வேண்டாம் என்று"

(இ.இ. நிலவு. பக்.34)

என்று கவிஞர் நிலவையும் விண்மீனையும் பாடும்போதே சமுதாயத்திலுள்ள `மேல் மினுக்கி'களுக்கு (பணிசெய்யாது உடல் வளர்ப்போரை `மேல்மினுக்கி' எனும் வழக்குச் சொல் குறிக்கும்) எச்சரிக்கை விடுவதைக் காண்கின்றோம்.

ஆற்றினைப் பெண்ணாக உருவகிப்பது தமிழ்மரபு. இளங்கோவடிகள் `வையையென்னும் பொய்யாக் குலக்கொடி' (சிலம்பு. 13.170) என்கிறார். பாவேந்தர்

"சேய்களின் மகிழ்ச்சி கண்டு
சிலம்படி குலுங்க ஆற்றுத்

தாய்நடக் கின்றாள் வையம்
தழைகவே தழைக என்றே"

(அ.சி.ஆறு.பக். 25)

என்று அழகுணர்வும் அன்புணர்வும் மேலிடப் பாடுகின்றார்.

உவமை உருவகங்களிலும் இயற்கையை இணைத்துப்பாடும் பாங்கைப் பாவேந்தரின் பாடல்களில் காணலாம். பழம்பெரும் கவிஞர்கள்போல் புராணச் செய்திகளுக்கு மதிப்பளிக்காமல் அறிவியல் கருத்துக்களைப்போற்றும் தன்மையையும் காணமுடிகிறது. இயற்கையை அறிவியற்கண்கொண்டு நோக்கியிருப்பது தெரிகிறது. கதிரவன் சிறப்புக் கூறும்போது

"வாழும்நின் ஒளிதான் இன்றேல்
வானிலா உடுக்கள் எல்லாம்
தாழங்காய் கடுக்காய் போலத்
தழைவின்றி அழகிழக்கும்"

(அ.சி. ஞாயிறு, பக்.29)

என்றும், வானவில் கதிரொளியின் சிதறல்தான் என்பதை,

"முதிர்ந்திட்ட கதிரிற் பூத்த
புதுப்புது வண்ணமெல்லாம்
ததும்பிற்றே வானவில்லாய்"

(அ.சி.வான். பக்.32)

என்றும், "வேங்கைப்பூவில் ஈமொய்க்காது" (இசையமுது பக்.13) என்றும் பாடியுள்ளமை இக்கருத்தை வலியுறுத்துகின்றது. இயற்கையின் எழிலால் தம் உணர்ச்சிகளை மட்டுமல்ல, அறிவையும் வளர்த்துக்கொண்டு, உலகம் உயர மனித தத்துவத்தைப் பாடும் கவிஞர் பாவேந்தர் என்பது இதனால் தெளிவாகும்.

அறிஞர் அண்ணா அமெரிக்கக் கவிஞனான வால்ட்விட்மனை "அமெரிக்காவில் ஒரு பாரதிதாசன் எனத் தமிழகத்துக்கு அறிமுகப்படுத்தினார். அமெரிக்கப் புரட்சிக்கவிஞனான வால்ட்விட்மன், "தத்துவ ஏடுகளைவிட என் பால்கனிக்கருகே மலரும் காலைக் கதிரவன் எனக்குக் களிப்பூட்டுகிறது" என்று கூறிக் கற்பனையின் உச்சியில் நின்றிருந்தான்[7]. நமது பாவேந்தரோ `அழகின்சிரிப்பில்' உள்ளம் பறிகொடுத்தவர் என நாம் பெருமை கொள்ளலாம்.

"ஐரோப்பியக் கலைகள் இயற்கைப் பரிணாம விதியோடு ஒட்டியவை எனலாம். ஐரோப்பியக் கலைஞனின் இயற்கை பற்றிய ஓவியம் ஒரு இடத்திலுள்ளதை உள்ளவாறே படியெடுத்துக்காட்டும். ஆனால் சீழை நாட்டானது ஓவியம் மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள தோழமையைச் சித்திரிக்கும் கற்பனை இணைந்த வெளியீடாகவே இருக்கும்" என்பர்[8]. உழைப்பவர் வறியராயும் அவர் மனப்புண்ணில் அம்பு பாய்ச்சுவோர் செல்வராகவும் இருப்பதைப்

7. அண்ணாதுரை, `அமெரிக்காவில் ஒரு பாரதிதாசன்', 1951, பக்.3
8. சிதம்பர ரகுநாதன், `இலக்கியவிமர்சனம்', 1964, பக்12

"பகலெல்லாம் கண்டு கண்டந்திக்குப்பின் விண்மீனாய்க் கொப்பளித்தவிரிவானம்", எனப்பாடும் புரட்சிக்கவிஞரின் கவிதைகளில் மனிதநேயம் இழையோடுவதைக் காண்கிறோம்.

பாவேந்தர் இயற்கைக் கவிஞர் எனப் போற்றப்படுகின்றார். இலக்கியப் பயணத்தில் அவரதுகாலம் மறக்கமுடியாத ஒரு மைல்கல். காப்பியங்கள் நாடகங்கள் என்று பல படைப்புக்களால் அவர்தம்மை நிலை நிறுத்திக் கொள்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாகப் புரட்சிப் படைப்பாய் `அழகின் சிரிப்பால் இயற்கைக் கவிஞர் என்ற பட்டத்தையும் நிலைநிறுத்துகின்றார்.

இயற்கையின் விந்தையிலே இதயத்தையே பறிகொடுத்த இறுமாப்பை இலக்கியக் கோபுரமாக அமைக்கும் ஆற்றல் படைத்தவன் கவிஞன்; கவிஞனின் உள்ளமே இயற்கை எழிலுலகத்தையும் விஞ்சிய கற்பனை உலகம். அழகுத் தெய்வம் நம் பாவேந்தரின் நெஞ்சிலே கற்பனை விந்தையாக - கனவின் எழிலாக மணம் வீசுகிறது.

**பயன்பட்ட நூல்களும் கட்டுரைகளும்**


1. சி.என். அண்ணாதுரை, அமெரிக்காவில் ஒரு பாரதிதாசன், நாவலர் பதிப்பகம் திருச்சி, 1951.
2. கிருஷ்ணமூர்த்தி, `பாரதிதாசனும் கடவுட் கொள்கையும்', **ஆராய்ச்சி**(இதழ்) அக்டோபர் 1972.
3. சிதம்பரரகுநாதன், இலக்கிய விமர்சனம், ஸ்டார்பிரசுரம், சென்னை, 1964
4. ந. சுப்புரெட்டியார், கவிதையனுபவம், கழக வெளியீடு, திருநெல்வேலி, 1961
5. பீ. டாக்டர் நசீம்தின், பாரதிதாசன் பாடல்களில் இயற்கை, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1973.
6. பீ. டாக்டர் நசீம்தின், `பாரதிதாசனும் அவரது சமகாலக்கவிஞர்களும்' தமிழ்த்துறை, கேரளப்பல்கலைக்கழகம் காரியவட்டம், 1988-'89.
7. தாரணி பாஸ்கர், ஆண்டாள் பாடல்களில் இயற்கை, **ஆய்வுக்கோவை**, 1971
8. பாரதியார் `பாஞ்சாலி சபதம்' **பாரதியார் கவிதைகள்**, பூம்புகார் பிரசுரம், சென்னை, 1976.
9. பெருஞ்சித்திரன், புரட்சிப்பாவலர் பாரதிதாசன், தென்மொழி வெளியீடு, கடலூர் 1969.
10. ரெனிவெல்லக் ஆஸ்டின்வாரன் - இலக்கியக் கொள்கை (மொ.பெ.), பாரிநிலையம் சென்னை, 1966.
11. மு. வரதராசன், இலக்கியத்திறன், பாரிநிலையம், சென்னை, 1965
12. நா. வானமாமலை, "தமிழர் வரலாறும் பண்பாடும்". நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1966.

# பாரதிதாசன் நூற்றாண்டில்
# பாரதிதாசன் ஆய்வுகள்

ந. கடிகாசலம்

**இணையற்ற கவிஞர்**

எழுதுகோல் தொட்டால் இயற்கை நதியெனப் பழுதிலாது ஓட்டும் பாவலர்க்கரசன் எனப் பாவேந்தரைப் புகழ்கிறார் கவியரசு கண்ணதாசன். முப்பத்தேழு ஆண்டுகள் தமிழாசிரியராய் விளங்கித் தமிழ்ப் பணி புரிந்தவர் பாரதிதாசன். ஆற்று மணல் போல ஆயிரம் புலவர் இருந்தபோதிலும் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற இரு தமிழ்க் கவிஞர்களில் ஒருவர் பாரதி; அடுத்தவர் பாரதிதாசன். இதில் இருவேறு கருத்துக்கே இடமில்லை.

**புரட்சிக் கவிஞர்**

பாரதி தேசியக் கவி; பாரதிதாசனோ புரட்சிக் கவி. "புரட்சிக் கவிஞர் என்றாலே இந்த நூற்றாண்டிலும் இதற்கு முந்தைய நூற்றாண்டிலும் வேறு யாரையும் குறிக்காமல் பாரதிதாசன் ஒருவரையே குறிக்குமாறு தமிழிலக்கிய வரலாற்றிலே அவர் சிறப்பிடம் பெற்று விட்டார்" என்கிறார் டாக்டர் மு.வ.

**படைப்புகள்**

73 ஆண்டுகள் வாழ்ந்த பாரதிதாசன், கவிதை, கதை, கட்டுரை, நாடகம், இலக்கணம் முதலான துறைகளிலுமாக 72 நூல்களைத்[1] தமிழ்கூறு நல்லுலக மக்களுக்கு வழங்கிச் சென்றிருக்கிறார்.

**இதழாசிரியர்**

தமிழாசிரியரான பாரதிதாசன் இதழாசிரியராகவும் சீரிய பணியாற்றியுள்ளார். தேச சேவகன், ஆத்ம சக்தி, தாய்நாடு, துய்ப்ளேக்சு, புதுவை முரசு, சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம், முல்லை, குயில் முதலான இதழ்களின் ஆசிரியராக விளங்கித் தமிழுக்கு வளம் சேர்த்த பெருமை பாரதிதாசனுக்கு உண்டு.

ஏழு திரைப்படங்களுக்குக் கதை—வசனமும், சுமார் இருபது திரைப்படங்களுக்குப் பாடல்களும் எழுதியிருக்கிறார் பாவேந்தர்.

**பாவேந்தர் கவிதை**

"சிங்கத்தின் முழக்கம், சிறுத்தையின் பாய்ச்சல், வேங்கையின் கம்பீரம், புயலின் வேகம், இடியின் முழக்கம், மின்னலின் வீச்சு, அருவியின் ஓட்டம், தென்றலின் தெம்மாங்கு, நிலவின் குளிர்ச்சி – இத்தனையும் சேர்ந்தது தான் பாரதிதாசன் கவிதை" என்பார் கலைஞர் மு.கருணாநிதி. மந்தத் தமிழனையும் மயங்க வைத்த பெருமை பாவேந்தர்தம் கவிதைக்கு உரியது.

---

1. பாரதிதாசன் ஆய்வுக் கோவை, கங்கை புத்தக நிலையம், ப. 708

மூடப் பழக்க வழக்கங்களைச் சாடுவதற்கும், பெண்மைப் புரட்சிக்கும், சிறுமையைத் தூற்றுவதற்கும் கவிதையை ஆயுதமாகப் பயன்படுத்தினார் பாரதிதாசன். `தமிழிலக்கிய உலகில் முதலும் முடிவுமாய்த் தோன்றிய முத்தமிழ்ப் பகுத்தறிவுப் பாவலன்' பாரதிதாசன் தான் எனலாம்.

**பாரதிதாசன் பற்றிய நூல்கள்**

பாரதிதாசன் குறித்தும் அவர்தம் படைப்புகள் குறித்தும் இதுவரை (1946 முதல் ஏப்ரல் 1991 வரை) 160 நூல்கள் வெளிவந்துள்ளன. அவர்தம் கவித் திறனையும் நாடகப் புலமையையும் பறைசாற்றும் வகையில் அவை அமைந்துள்ளன. பிற மொழி பிற நாட்டுக் கவிஞர்களோடு பாவேந்தரை ஒப்பாய்வு செய்த கருத்தரங்கக் கட்டுரைகளைப் பாரதிதாசன் எனும் தலைப்பில் நூற்றாண்டு வெளியீடாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் கொணர்ந் துள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

பாரதிதாசனார் நூல்களை நல்ல முறையில் பதிப்பித்து வெளியிட்டோரில் முல்லை முத்தையா குறிப்பிடத்தக்கவர். புரட்சிக் கவிஞர் (பாவேந்தர் பாடல்களில்) உவமை நயம் முதலான நூல்களை 1946 ஆம் ஆண்டிலேயே வெளியிட்டவர் முல்லை முத்தையா.

பாரதிதாசன் படைப்புகளை ஆராய்ச்சி செய்து டாக்டர் (பிஎச்.டி.,) பட்டம் பெற்றவர்களும் உண்டு. அவர்களில் ச.சு.இளங்கோ, மா. செல்வராசன், மா. அண்ணாதுரை, இரா.சக்குபாய் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்.

**பாரதிதாசன் நூற்றாண்டில்**

பாரதிதாசன் நூற்றாண்டு விழாவினையொட்டி (1990-91) பாரதிதாசன் குறித்தும் அவர்தம் படைப்புகள் குறித்தும் 50 நூல்கள் வெளிவந்துள்ளன. 4 நூல்கள் மறுபதிப்பாக வெளிவந்துள்ளன. ஒப்பாய்வு உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் பாரதிதாசன் ஆய்வுக்குட் படுத்தப்பட்டிருக்கிறார். தமிழக அரசும் புரட்சிக் கவிஞருக்கு நூற்றாண்டு விழா எடுத்துச் சிறப்பித்தது.

1990-91இல் வெளியான பாரதிதாசன் நூல்கள் விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| அழுத முகம் சிரித்தது குருட்டு வழி திறந்தது† | - | கருவை. பழனிசாமி |
| இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன்† | - | இரா. இளவரசு |
| என் நினைவலைகளில் பாவேந்தர்† | - | பொன்னடியான் |
| எனது பார்வையில் பாவேந்தர்† | - | ம.பொ.சிவஞானம் |
| ஒரு குயிலின் கதை | - | மு.விவேகானந்தன் |
| குடும்ப விளக்கும் இருண்ட வீடும் ஒரு பார்வை | - | சரளா ராசகோபாலன் |
| தமிழ் நாடக வரலாற்றில் பாரதிதாசன்* | - | தா.வே. வீராசாமி |
| தமிழனின் ஒரே கவிஞன் | - | சாலய். இளந்திரையன் |
| பட்டறையிலே பாரதிதாசன்* | - | தா.வே. வீராசாமி |

| | | |
|---|---|---|
| பலகணியில் பாவேந்தர் † | - | கோ. பாரதி, |
| பாட்டருவிப் பாவேந்தர் † | - | அருணா பொன்னுசாமி |
| பாண்டியன் பரிசு தரும் பல்சுவையின்பம் | - | ஆ.வே. இராமசாமி |
| பாரதிதாசன் † | - | ந. கடிகாசலம், |
| பாரதிதாசன் ஆய்வுக் கோவை † | - | மு. சாயபு மரைக்காயர், |
| பாரதிதாசன் ஒரு களஞ்சியம் † | - | கருவை. பழனிசாமி |
| பாரதிதாசன் இதழ்ப் பணிகள் † | - | மா. அண்ணாதுரை |
| பாரதிதாசன் கற்பனை † | - | ந. முருகேசன் |
| பாரதிதாசன் தனித்தன்மை | - | அ. அறிவொளி |
| பாரதிதாசன் நாடகங்கள் ஓர் ஆய்வு | - | ச.சு. இளங்கோ |
| பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு | - | கோ.கிருட்டிணமூர்த்தி |
| பாரதிதாசன் படைப்புகளில் நகைச்சுவை † | - | அரங்க. இராமலிங்கம் |
| பாரதிதாசன் படைப்புகளில் மனித நேயம் † | - | இரா. சக்குபாய் |
| பாரதிதாசனின் இலக்கியப் பெண்கள் † | - | சரளா ராசகோபாலன் |
| பாரதியும்பாரதிதாசனும் † | - | சி.பாலசுப்பிரமணியன் |
| பாவேந்தர் ஒரு விடிவெள்ளி | - | நா.மணிமாறன் |
| பாவேந்தர் கனவு † | - | மு.தமிழ்க்குடிமகன் |
| பாவேந்தர் நவமணிகள் | - | கோ. துரையரசன் |
| பாவேந்தர் நோக்கில் † | - | சு. சுப்பிரமணியம் |
| பாவேந்தர் படைத்த ஒளியும் இருளும் † | | இரா. இளங்குமரன் |
| பாவேந்தர் படைப்பும் வாழ்க்கையும் † | - | மா. அண்ணாதுரை |
| பாவேந்தர் பாதை † | - | இலக்கியன் |
| பாவேந்தர் பாரதிதாசன் (வாழ்க்கை வரலாறு) † | - | அரசுதாசன் |
| பாவேந்தர் பாரதிதாசன் ஒரு கண்ணோட்டம் † | : | ந. சுப்பு ரெட்டியார் |
| பாவேந்தர் பாரதிதாசனின் அமைதியை நோக்கி (நாடகம்) † | - | காசி வில்லவன் |
| பாவேந்தர் வழி பாரதி வழியா ? † | - | இரா. திருமுருகன் |
| பாவேந்தரின் இசைத்தமிழ் | - | இரா. திருமுருகன் |
| பாவேந்தருடன் பயின்ற நாள்கள் | - | மணிசித்தன் |
| பாவேந்தரும் தனித்தமிழும் † | - | க. தமிழமல்லன் |
| பாவேந்தரும் புதுவைச் சித்தரும் | - | சிவ. இளங்கோ |
| புரட்சிக் கவிஞர் † | - | இராசேந்திரன் |

---

* இரண்டாம் பதிப்பு

† மதிப்புரை இணைக்கப்பட்டுள்ளது

@ பதிப்பாசிரியர்/தொகுப்பாசிரியர்

| | | |
|---|---|---|
| புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் † | - | லியோ. இராமலிங்கம் |
| புரட்சிக் கவிஞரும் பெண்மையும் † | - | சரளா இராசகோபாலன் |
| புரட்சிக் கவிஞருக்குப் புகழ் அஞ்சலி † | - | முல்லை முத்தையா |
| புரட்சிக் கவிஞருக்குப் புகழ் மாலை † | - | |
| புரட்சிக் குயில் பாரதிதாசன் † | - | பூவை. அமுதன் |
| புரட்சிக்கு வித்திடும் பாவேந்தர் பாட்டு * | - | மயிலைநாதன் |
| புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா நினைவு மலர் † | - | பா. வளன்அரசு |
| பெண்களின் வழக்கறிஞர் பாவேந்தர் | - | சரோஜினி |
| மாணவர்களுக்குப் பாரதிதாசன் | - | ஜி. பெரியண்ணன் |
| *Bharatidasan – Life, works and views.* part-I Life② | - | P. Parameswaran |

பாரதிதாசன் நூற்றாண்டில் வெளியான இந்நூல்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

| | | |
|---|---|---|
| வரலாறு | - | பாவேந்தர் பாரதிதாசன்<br>பாரதிதாசன் வாழ்க்கை வலராறு |
| திறனாய்வு | - | பாவேந்தர் பாரதிதாசன் ஒரு கண்ணோட்டம்<br>பாரதிதாசன் ஆய்வுக் கோவை |
| ஒப்பாய்வு | - | பாரதிதாசன், பாரதியும் பாரதிதாசனும் |
| கவிதை நூல் | - | பாட்டருவிப் பாவேந்தர் |
| விழா மலர் | - | புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு நினைவு மலர் |
| தொகுப்பு | - | |
| (அ) வினா விடை | - | பாரதிதாசன் ஒரு களஞ்சியம் |
| (ஆ) புகழுரை | - | பாவேந்தருக்குப் புகழ் அஞ்சலி |
| (இ) கட்டுரை | - | பாரதிதாசன் ஆய்வுக் கோவை |
| புத்தாக்கம் | - | பாரதிதாசனின் அமைதியை நோக்கி |
| ஆங்கில நூல் | - | *Bharatidasan – Life, works, and views: Part I – Life.* |

பாரதிதாசனைப் பற்றி ஒரு நூலேனும் வெளியிட வேண்டும் என்ற பல ஆசிரியரின் ஆர்வமே, அவருடைய நூற்றாண்டில் 50 நூல்கள் வெளிவர அடிப்படைக் காரணமாகிறது. இந்நூல்களில் தனி நூல்கள் (எனது பார்வையில் பாரதிதாசன்), கட்டுரைத் தொகுப்புகள் (பாரதிதாசன் ஆய்வுக் கோவை), ஒரு நூல் ஆய்வு (பாண்டியன் பரிசு தரும் பல்சுவையின்பம்), மொத்தப் பார்வை தரும் நூல்கள் (பாவேந்தர் பாரதிதாசன் ஒரு கண்ணோட்டம்) என்று காணக்கிடப்பது குறிப்பிடத்தக்கது.

**பாரதிதாசன் ஆய்வு**

**வரலாறு**

- ஒரு குயிலின் கதை
- பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு
- பாவேந்தர்.
- *Bharathidasan – Life, works and views: Part I – Life*

**திறனாய்வு**

- தமிழ் நாடக வரலாற்றில் பாரதிதாசன்
- பட்டறையிலே பாரதிதாசன்
- பாண்டியன் பரிசு தரும் பல்சுவையின்பம்
- பாரதிதாசன் ஆய்வுக்கோவை
- பாரதிதாசன் இதழ்ப்பணிகள்
- பாரதிதாசன் கற்பனை
- பாரதிதாசன் நாடகங்கள் ஓர் ஆய்வு
- பாரதிதாசன் படைப்புகளில் நகைச்சுவை *
- பாரதிதாசன் படைப்புகளில் மனிதநேயம்
- பாரதிதாசனின் இலக்கியப் பெண்கள்
- பாவேந்தர் படைத்த ஒளியும் இருளும்
- பாவேந்தர் பாரதிதாசன் ஒரு கண்ணோட்டம்
- பாவேந்தரின் இசைத்தமிழ்
- பாவேந்தரும் தனித்தமிழும்
- புரட்சிக்கவிஞரும் பெண்மையும்
- புரட்சிக்கு வித்திடும் பாவேந்தர் பாட்டு

**ஒப்பாய்வு**

- பாரதிதசான
- பாரதியும் பாரதிதாசனும்
- பாவேந்தரும் புதுவைச் சித்தரும்
- குடும்ப விளக்கும் இருண்ட வீடும் - ஒரு பார்வை

**பொது**

- அழுத முகம் சிரித்தது.
- இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன்
- என்நினைவலைகளில் பாவேந்தர்
- எனது பார்வையில் பாவேந்தர்
- தமிழனின் ஒரே கவிஞன்
- பலகணியில் பாவேந்தர்
- பாரதிதாசன் ஒரு களஞ்சியம்
- பாரதிதாசன் தனித்தன்மை
- பாவேந்தர் ஒரு விடிவெள்ளி
- பாவேந்தர் கனவு
- பாவேந்தர் நவமணிகள்
- பாவேந்தர் நோக்கில்
- பாவேந்தர் பாதை
- பாவேந்தர் வழி பாரதி வழியா?
- பாவேந்தருக்குப் புகழ் அஞ்சலி
- பாவேந்தருடன் பயின்ற நாள்கள்
- பெண்களின் வழக்கறிஞர் பாவேந்தர்
- மாணவர்களுக்குப் பாவேந்தர்

ஆசை பற்றும் தமிழின் தொண்டில்
ஒட்டிய என்உளம் வெட்டினும் பிரியாது

எனப் பாடியவர் பாவேந்தர். அவர்தம் நூற்றாண்டு விழா சோவியத் யூனியனிலும் கொண்டாடப்பட்டதாக அறிகிறோம். தமக்குப் பின்னர் பரம்பரை பெற்ற ஓரே தமிழ்க் கவிஞர் எனும் பெருமை பாரதிதாசனுக்கு மட்டுமே உண்டு.

"தமிழ்ப் புத்துலகத்திற்குப் பாரதியார் அடித்தளம் அமைத்தவர்; பாரதிதாசன், மேல் கட்டடத்தை அழகுற எழுப்பியவர். கவிதைப் பூங்காவிலே புத்தம் புதிய கருத்துக்களை ஊன்றியவர் பாரதியார்; அவற்றைச் செடிகளாக்கிப் பூக்கச் செய்து மணம் கமழும்படிச் செய்தவர் பாரதிதாசன்" என்கிறார் நாவலர் இரா. நெடுஞ்செழியன்.

பாரதிதாசன் பற்றிய நூல்கள் பல ஆங்கில மொழியிலும் வெளிவருதல் இன்றியமையாதது. தமிழகப் பல்கலைக் கழகங்களும் தமிழக அரசும் இதற்கு ஆவன செய்திட வேண்டும். பாரதிதாசன் கவிதை உலகமெல்லாம் பரவும் நாள் எந்நாளோ?

பாரதிதாசன் நூற்றாண்டில் (1990-91) வெளிவந்த 50 நூல்களில், முப்பத்தைந்து நூல்களின் மதிப்புரைகள் இங்கு இணைக்கப்பட்டுள்ளன. 1990-91 க்கு முன்னர் வெளிவந்த இரு நூல்களின் மதிப்புரையும் இடம்பெற்றுள்ளது.

நூல், ஆசிரியர்/பதிப்பாசிரியர்/தொகுப்பாசிரியர், பதிப்பகம், இடம், ஆண்டு (முதற்பதிப்பு), மொத்தப் பக்கம், விலை என்ற முறையில் நூல்களைப் பற்றிய விவரங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

### 1. அழுத முகம் சிரித்தது குருட்டு விழி திறந்தது

கருவை பழனிசாமி, திருமொழிப் பதிப்பகம், கரூர், 1991, 95, ரூ7

பாவேந்தர் நூற்றாண்டு நினைவாக வெளிவந்துள்ள இந்நூல், 1. நெஞ்சுக்கு நீதியில் பாரதிதாசன் - ஒரு சிந்தனை. 2.புரட்சிக் கவிஞரின் உளவியல் அணுகுமுறை ஒரு சிந்தனை. 3. பாரதிதாசன் ஆளுமை-ஒரு சிந்தனை. 4. பாரதிதாசன் இயற்கை அணுகுமுறை - ஒரு சிந்தனை. 5. அன்னம் - சீதை - போர்ஷியா ஓர் ஒப்பியல் பார்வை. 6. சுற்றுச்சூழல் விழிப்புணர்வூட்டும் இசையமுது - ஒரு சிந்தனை. 7. மதுரை ஆராய்ச்சிப்போக்கு - ஒரு சிந்தனை 8. பாரதிதாசனின் புரட்சிக் கொள்கை என எட்டு ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது.

முதல் கட்டுரை, கலைஞரின் தன் வரலாற்று நூலான 'நெஞ்சுக்கு நீதி'யில் 12 இடங்களில் பாரதிதாசன் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளமையை விளக்குகிறது. "தமிழ் மொழி இலக்கிய வாழ்வில் மட்டுமல்லாமல் தமிழர் மேம்பாடு கருதும் அரசியல் பொருளாதாரச் சமூகக் கோட்பாடுகளிலும் கலைஞருக்கும் பாரதிதாசனுக்கும் இலட்சிய ஒருமைப்பாடு உண்டு" (ப.7) என்பதை ஆய்வு முடிவாக வெளிப்படுத்துகிறது. இரண்டாம் கட்டுரை, பாவேந்தரின், "சஞ்சீவி பர்வதத்தின் சாரலை", கல்வி உளவியல், குழந்தை உளவியல் - அடிப்படையில் ஆராய்கிறது. மூன்றாம் கட்டுரை "தமிழியக்கம்' பற்றியது. பாவேந்தர், தமிழைப் போற்றுவதும், தமிழினைப் போற்றாதோரைக் கண்டிப்பதும் இதில் விளக்கப்படுகிறது. "ஆயிரம் நக்கீரர்கள் கூடினாலும் ஒரு பாரதிதாசனுக்கு ஈடாகமாட்டார்கள்" (ப.29) என்ற ஆசிரியரின் கருத்து சிந்திக்கத்தக்கது

அடுத்த கட்டுரை, பாரதிதாசன் பாடல்களில் இயற்கை இடம் பெற்றுள்ள பாங்கினை ஆராய்கிறது.

அய்ந்தாம் கட்டுரை, பாரதிதாசனின் பாண்டியன் பரிசு-அன்னம், `கம்பராமாயணம்' சீதை, ஷேக்ஸ்பியரின் `வெனிஸ் வணிகன்' - போர்ஷியா ஆகியோரின் காதல் நெறிகளை ஒப்பிட்டு ஆராய்கிறது. ஆசிரியரின் இவ்வரிய முயற்சி பாராட்டத்தக்கது. ஆறாம் கட்டுரை, இசையமுது காட்டும் சுற்றுச் சூழல் விழிப்புணர்வுப் பாடல்களை நோக்குகிறது. ஏழாம் கட்டுரையாக அமைந்திருப்பது மதுரை காமராசர் பல்கலைக் கழக ஆராய்ச்சிப் போக்கு பற்றியது. பாவேந்தரைப் பற்றிய இந்நூலில் இக்கட்டுரை தேவையற்றது. இதனைத் தவிர்த்திருந்தால் நல்லது. இறுதிக் கட்டுரையில் பாவேந்தரின் சமூக - பொருளாதாரப் புரட்சிக் கொள்கைகளை ஆய்ந்து வெளிப்படுத்துகிறார் ஆசிரியர்.

"பாரதிதாசன் புரட்சிக் கொள்கைக்கு, பாரதிதாசன் என்ற பெயரும், அவருக்கு வழங்கப்பட்ட இன்னொரு பெயரான பாவேந்தர் என்ற பெயரும் முரணானவை. தாசனும் வேந்தனும் இல்லாத கொள்கையே புரட்சிக் கொள்கை. அதனால்தான் அவர் புரட்சிக் கவி என்றே போற்றி அழைக்கப் பட்டு வருகிறார்" (பக்:79-80) என்ற இந்நூலாசிரியரின் சிந்தனை போற்றத்தக்கது. மொத்தத்தில் இந்நூல், புரட்சிக் கவிஞரின் உள்ளத்தை உணராதோரின் விழிகளைத் திறக்கச் செய்யும் எனலாம்.

சா. இராசசேகரன்.

## 2. இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன்.

இரா. இளவரசு, மருதம், திருச்சி - 21, 1990, 124, ரூ 20

புதுவையைக் களமாகக் கொண்டு நிகழ்ந்த பாவேந்தரின் விடுதலை இயக்கப் பணி பலரும் அறியும் வகையில் வெளிக் கொணரப்படவில்லை. இப்படியும் அவர் பணியாற்றியிருப்பாரா என எண்ணிப் பார்க்கும் தேவையே ஏற்பட முடியாத அளவிற்குத் தமிழ்த் தேசிய இனத்தின் தன்னிகரற்ற பாவலராகவே நாடு அவரை இனங்கண்டு கொண்டிருக்கிறது. இச் சூழலில் பாரதிதாசனின் மறுபக்கத்தை, இந்திய விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டு ஆழமாகச் செயல்பட்டதைத் தமிழுலகிற்குத் தெளிவாக விளக்கிக் காட்டும் நூலாக இஃதமைகிறது.

பாவேந்தரின் முன்பகுதி வாழ்க்கையில் 1911 முதல் 1937 முடியவுள்ள காலக்கட்டத்தை இந்திய விடுதலை இயக்கச் சார்புக் காலம் எனலாம். 1911 இல் மாடசாமி முதலிய விடுதலை இயக்கத்தாரைப் பாதுகாப்பதில் தொடங்கி 1938இல் இந்தித்திணிப்பையொட்டித் தன்மான இயக்கத்தாரால் "தமிழ் நாடு" கோரிக்கை முன் வைக்கப்படும் வரை விடுதலை இயக்கப் பணிகளில் பாவேந்தர் பெற்ற பங்கினை, மேற்கொண்ட முயற்சிகளை நூலாசிரியர் நன்கு வெளிப்படுத்தியுள்ளார். தன் கருத்திற்கு அரணாகவும் வலிமை சேர்க்கவும் "பாரதிதாசனின் கதர் இராட்டினப் பாட்டு" எனும் கட்டுரையை இணைப்பாகத் தந்துள்ளார்.

"பாரதியாரைக் கண்டறிவதற்கு முன்பே..." என்பது தொடங்கி "தொகுப்பும் முடிப்பும்" ஈறாக 24 தலைப்புகளில் செய்திகள் நிரல்பட விளக்கம் பெற்றுள்ளன. புதிய பாரதத்தைப்

படைக்கும் வேட்கையுடன், பாரதிதாசன், `காளியே உன் அருளின் ஒரு துளியிருந்தால் அதன் ஆற்றலால் நான் பாரத தேசத்தை விடுவிப்பேன். பண்டைநாள் ஆரியரை உற்பத்தியாக்குவேன். பாரதத்தைப் புவிக்குத் தலையாக்கிக் காட்டுவேன். வாணிபத்தைப் பெருக்குவேன். வறுமையை மாய்ப்பேன். வலியோர் எளியோரை வாட்டுவதைத் தொலைப்பேன். எல்லோரும் சமமென்று சட்டம் நடத்துவிப்பேன். எல்லோரும் தெய்வப் பிறவிகள், ஈசன் பெற்ற பேர்கள், உறவினர்கள் என்ற உணர்வை எழுப்பிடுவேன்' என உரைப்பதன் வழி அவரின் நாட்டுப்பற்றைப் புலப்படுத்துகிறார்.

பாரதியாரோடு தொடர்பு கொள்வதற்கு முன்பே பேராயக் கட்சியில் தன்னைப் பிணைத்துக் கொண்ட பாரதிதாசன் அதனை வலுப்படுத்தும் வகையில் பல பாடல்களைப் புதுவையிலிருந்து வெளிவந்த "தேசசேவகன்", "ஆத்ம சக்தி" முதலிய இதழ்களில் எழுதியதை இந்நூல் வெளிக்காட்டுகிறது.

நூலின் முடிவுரையில், தன்னை ஓர் இந்தியன் என்ற அகம்பாவத்தோடு எண்ணத் தொடங்கிய பாரதிதாசன் பேராயக் கட்சியில் இணைந்து; பாரதநாட்டைப் பலவாறு போற்றி; விடுதலையின் மேன்மையை வெளிப்படுத்தி; தெய்வங்களிடம் விடுதலைக் குரல் கொடுத்து; தலைவர்களின் தொண்டைப் புகழ்ந்து; புலனாய்வுத் துறையினரிடமிருந்து விடுதலை மறவர்களைப் பாதுகாத்து; ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு; கதரியக்கம் மதுவிலக்கு முதலியவற்றைப் பாடி, பண்பாட்டுச் சீர் குலைவுகளைக் கண்டித்து, தாயின் மணிக்கொடியை வணங்கி; தன்மான இயக்கம் சார்ந்த நிலையிலும் நாட்டு விடுதலைபால் நாட்டம் குறையாமல் காந்தியடிகளின் கட்டுமானத் திட்டங்கள் பலவற்றை வலியுறுத்திப் பாரத விடுதலைக்குப் பலவகையாகப் பாடுபட்டவர், என நவின்றிருப்பது, உட்பகுதிகளில் பிறர் மறுக்க வியலாவாறு மிகத் தெளிவாக விளக்கம் பெற்றுள்ளது.

விடுதலை இயக்கத்திற்குத் துணைபுரியும் நோக்கில் பாரதிதாசன் இயற்றி அச்சான நூல்களாக இன்று தெரிய வருவன மூன்று. அவை சிறுவர் சிறுமியர் தேசிய கீதம், தொண்டர் படைப்பாட்டு, கதர் இராட்டினப் பாட்டு ஆகியன, இவற்றுள் மூன்றாவது நூலே இன்று பார்வைக்குக் கிடைக்கிறது. ஏனை இரண்டும் இந்நூலுக்கு முன்பே வெளியிடப்பட்டனவாகத் தெரிகின்றன. தேசிய விடுகவிகளாகச் சில, புதிர்ப்பண்போடு சுவையான முறையில் "பிள்ளைப்பாட்டு' எனும் குறிப்போடு இளைஞரிடை நாட்டுப்பற்றை விதைப்பனவாக அமைந்துள்ளன. "மிதவாதியை எழுப்பல்" எனும் தலைப்பில் ஒரு பாடல் இடம் பெற்றிருப்பதிலிருந்து பாரதிதாசன் தீவிரவாத அணிச்சார்பினர் எனக் கொள்ளலாம்- என்பன போன்ற பல புதிய செய்திகள் இடங்கொண்டுள்ளன.

பாவேந்தரின் பிற்காலத்திய மன மாற்றத்திற்கு "மக்களிடம் மண்டியிருக்கும் மடமையைப் போக்குவதற்கு முன் மண்ணடிமையை நீக்க வேண்டுமென்னும் பாரதிதாசனின் நிலைப்பாட்டில் மாற்றும் ஏற்படுகின்றது. மடமை ஒழிப்பே மண்ணடிமையைத் தீர்ப்பதற்கான முதற்பணி என மாற்றம் பெறுவதாகக்" காரணம் காட்டுவர். மற்றும் பாரதி நினைவு மேலோங்கியமை, தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளில் நம்பிக்கையிழப்பு, இவற்றிற்கு மேலாகச் சீனப்படையெடுப்பு

முதலியவற்றின் பின் புலத்தில் பாவேந்தரின் "ஒரே இந்தியா" உணர்வு நோக்கத்தக்கது, என்பதும் குறிப்பிடற்பாலது.

பின்னிணைப்புக் கட்டுரை தரும் செய்திகளில் ஒத்துழையாமை இயக்கக் கருத்துகளை வலியுறுத்தி பாரதிதாசன் வரைந்த 20 சிறு சிறு நூல்களில் இன்று கிடைப்பது கதர் இராட்டினப் பாட்டு ஒன்று மட்டுமே; அதன் பதிப்புக் குறிப்புகள்; பாரதிதாசன் கதர் விற்பனையிலும் ஈடுபட்டிருந்தார்; பாரதியின் மறைவிற்குப் பிறகே கதரியக்கம் எழுச்சி பெற்றதால் அதனைப் பாடும் வாய்ப்புப் பாரதிதாசனுக்கு ஏற்புடையதாயிற்று போன்றன குறிக்கத்தக்கன.

பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் இடையே நிலவிய நீண்டகால (10 ஆண்டுகள்) நல் உறவினை மிகத் தெளிவாக விளக்கிச் செல்வதாகவும் இந்நூல் அமைந்துள்ளது. பாரதிதாசன் ஆய்வாளருக்குப் பல புதிய எண்ணங்களைப் பொருத்தமான சான்றுகளுடன் நடுநின்று தந்துள்ள இந்நூல் போற்றி வரவேற்கப் பட வேண்டிய ஒன்று. பாரதிதாசனின் இந்திய விடுதலை வேட்கையை, முனைப்பை வெளிப்படுத்தும் அவர்தம் பாடல்களுள் இன்று கிடைக்காதனவற்றையும் பட்டியலிட்டுத் தந்திருப்பது ஆசிரியரின் ஆய்வு ஆழத்தையும் சீரிய முயற்சியையும் புலனாக்குகிறது. படைப்பாளர் பற்றிய முழுமையான பார்வைக்கு இத்தகு மறுபக்க ஆய்வும் மிகத் தேவையானதொன்று என்பதைத் தன் நூல் வழி நிறுவியுள்ள ஆசிரியர் பணி பாராட்டற் குரியது.

ச. சிவகாமி

## 3. எனது பார்வையில் பாவேந்தர்

ம.பொ. சிவஞானம், பூங்கொடி பதிப்பகம்,
சென்னை- 4., 1991, 164, ரூ.20

"தேசிய பாரம்பர்யத்தைச் சார்ந்தவனான எனது பார்வையில் பாவேந்தர் பாரதிதாசன் எப்படி காட்சியளிக்கிறார் என்பதை இந்நூலில் காட்டியுள்ளேன்" என்று டாக்டர் ம.பொ. சிவஞானம் `என்னுரை'யில் கூறுகிறார்.

17 தலைப்புகளில் அவர் இந்நூலைப் படைத்திருக்கிறார். "புதுவைக் கவிஞர் தேசிய விரோத வட்டாரத்தைச் சார்ந்தவர் என்பதற்காக அவரது தமிழ்த் தொண்டைத் தேசியவாதிகள் போற்றத் தவறியதே இல்லை" (ப.17) என்று முதல் சந்திப்பு எனும் அத்தியாயத்தில் ம.பொ.சி. தெரிவிக்கிறார்.

பாவேந்தரிடம் ம.பொ.சி. கையேந்தியிருக்கிறார். அவரே கூறுவதாவது: பாவேந்தருடன் 1944இல் எனக்கேற்பட்ட நட்பு வலுப்பெற்றதாகையால், அவரிடம் என் இரு கைகளை ஏந்தித் தானம் கேட்டேன். அவர் பெற்ற பொற்கிழியில் பங்கு தரும்படியல்ல! யான் அப்போது நடத்தி வந்த "தமிழ் முரசு" மாதப் புத்தகத்துக்குக் கவிதைத் தானம் வழங்கும்படி கேட்டுத்தான் கவிஞரிடம் கையேந்தினேன், (ப.19)

வரலாற்று நிகழ்ச்சிகளை மிகவும் சிறப்பாகச் சுட்டிச் செல்லும் ம.பொ.சி தம் நெஞ்சில் பட்ட கருத்துகளையும் ஆங்காங்கே வெளியிடுகிறார். இன்றைய பல்கலைக் கழகங்களின் நிலை

பற்றி அவர் குறிப்படுவதாவது: `இங்கு அன்னிய மொழியில் அன்னியருக்குத் தொண்டு செய்வோரைத் தோற்றுவிக்கத்தானே பல்கலைக் கழகங்கள் பரங்கியர் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டன. இன்றளவும் பல்கலைக் கழகங்களின் நிலை அதுதான்!' (ப. 73)

பாரதியார் காந்தீயத்திற்கு வரவு கூறிவிட்டு மறைந்தார். அதனை வாழ்த்தி வலுப்படுத்தும் பணியைப் பாவேந்தர் தொடர்ந்தார்'(ப. 88) எனவும்; `பாவேந்தர் மேலும் மேலும் தொடர்ந்து பக்திப் பாடல்களைப் புனையத் தொடங்கியிருப்பாரானால் பாரதியாரையும் விஞ்சியிருக்கக்கூடும் (ப. 91) எனவும் ம.பொ.சி. கருத்துத் தெரிவிக்கிறார்.

சமுதாயப் புரட்சியைப் பொறுத்தவரை பாரதியாரின் இதயத்தை மிகச் சரியாக எதிரொலித்து, பாரதியின் வாரிசாக நிற்கும் ஒரே கவிஞர் பாரதிதாசன்தான் (ப. 100) என்று ம.பொ.சி. ஆணித்தரமாகக் கூறுகிறார். பாரதிதாசன் எரிப்புத் தொண்டில் ஈடுபட்டதில்லை; கம்பராமாயணத்தை எரிப்பது தமிழை எரிப்பதாகும் என்பது அவருக்குத் தெரிந்திருந்தது (ப. 129) என்று ம.பொ.சி. கருதுகிறார்.

`கதர் இராட்டினம் பற்றிய பாடல்களை என்ன காரணத்தாலோ அவரும் அவருடைய பாரம்பரியத்தினரும் அடியோடு மக்கள் பார்வையிலிருந்து மறைத்து விட்டனர்' (ப. 163) என்று ம.பொ.சி. வேதனைப்படுகிறார். பாரதிதாசன் இன்னும் கொஞ்சகாலம் வாழ்ந்திருப்பாராயின் பாரதியின் தேசிய பாதைக்கே பழையபடி அவர் திரும்பியிருக்கக்கூடும் (ப.164) என்று அவர் அனுமானிக்கிறார்.

ஒரு தேசியவாதியின் பார்வையில் பாரதிதாசனை எவ்வாறெல்லாம் காணமுடியும் என்பதற்கு இந்நூல் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும். பாவேந்தர் பற்றிய ம.பொ.சி.யின் பார்வை சிறப்பானது சீரானது.

கவிஞரைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால் அவரைச் சுயமரியாதை திராவிட இயக்கங்களிலிருந்து பிரித்தெடுத்துப் பார்க்க வேண்டும்' (ப.164) என்ற ம.பொ.சி.யின் கூற்றில் உண்மை இருப்பதாகவே தோன்றுகிறது.

ஆர்வமுடைய தேசியவாதிகளும் பாரதிதாசனை மதித்துப் போற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் ம.பொ.சி. எழுதிய இந்நூல், பாவேந்தர் நூற்றாண்டில் நமக்குக் கிடைத்துள்ள அரிய நூலாகும். சீரான நடை, தெளிவான கருத்து வெளிப்பாடு, கூர்மையான சிந்தனைப் போக்கு ஆகியவற்றால் இந்நூல் பெருமை பெற்று விளங்கும் எனலாம்.

ந. கடிகாசலம்

### 4. குடும்ப விளக்கும் இருண்ட வீடும் - ஒரு பார்வை

சரளா ராசகோபாலன், ஒளிப் பதிப்பகம், சென்னை- 18, 288, ரூ.33

ஒளிமயமான குடும்பத்தைக் காட்ட குடும்பவிளக்கு; இருள் நிறைந்த குடும்பத்தைக் காட்ட இருண்ட வீடு என்பது பாரதிதாசனின் நோக்கம். இவ்விரண்டு படைப்புகளையும் ஒப்பாய்வு செய்துள்ளார் டாக்டர் சரளா ராசகோபாலன்.

மொத்தம் 18 தலைப்புகளாக இந்நூல் பகுக்கப்பட்டுள்ளது. குடும்ப விளக்கு பற்றி 13 தலைப்புகள்; இருண்ட வீடு பற்றி 4 தலைப்புகள்; ஒரே ஒரு கட்டுரையில் மட்டுமே இவ்விரு நூல்களும் ஒப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. நூலின் தலைப்பு, இதனால் நம்மை ஏமாறவைக்கிறது.

முதலில் குடும்ப விளக்கை அறிமுகம் செய்கிறார் ஆசிரியர். `குடும்ப விளக்கு ஒரு நடுத்தரக் குடும்பத்தின் பிரதிபலிப்பு. வள்ளுவரின் வாழ்க்கை விளக்கமாக விளங்கும் நூல். கற்பவரும் அவ்வழியைப் பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்தும் காப்பியம்' (ப. 18) என்று ஆசிரியர் கூறுகிறார்.

குடும்ப விளக்கு வாழ்வியல் இலக்கியமாகத் திகழ்வதை ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார். பாவேந்தர் பெண்ணுரிமையை வேண்டியவர். அதனால் அவருடைய படைப்புகள் எல்லாவற்றிலும் ஆணை விடப் பெண்ணை உயர்ந்தவளாக - சிறந்தவளாக - அறிவுடையவளாக - ஆற்றலுள்ளவளாகப் படைத்துள்ளார்' (ப. 62) என்று நூலாசிரியர் மதிப்பீடு செய்கிறார்.

குடும்ப விளக்கு - காதல் இலக்கியம், புரட்சி இலக்கியம், நான்கு தலைமுறை இலக்கியம், தன்வரலாற்று இலக்கியம், தமிழ் இலக்கியம் என நூலாசிரியர் பலபடப் புகழ்கிறார்; ஏற்றவிடங்களில் ஏற்ற கவிதை வரிகளைச் சான்றாக்கிக் காட்டுகிறார்.

`குடும்ப விளக்கில் வள்ளுவம்' எனும் பகுதியில், வாழ்க்கைத் துணைநலம், விருந்தோம்பல், மக்கட்பேறு ஆகியவை குறித்த வள்ளுவரின் சட்டம் குடும்ப விளக்கில் பாரதிதாசனால் எவ்வாறு பின்பற்றப்பட்டுள்ளது என்பது விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

`கவின் இலக்கியம்' எனும் பகுதி, குடும்ப விளக்கில் பாரதிதாசன் கையாண்டுள்ள புது உவமைகளையும் உருவகங்களையும் திறனாய்வு செய்கிறது. `பாவேந்தர் குடும்ப விளக்கில் கலையுணர்வோடு உவமையைக் கையாண்டுள்ளார். இதுவரை யாரும் கையாளாத உவமைகள் அவருடைய படைப்பில் பளிச்சிடுகின்றன' (ப. 176) என்பது இந்நூலாசிரியரின் மதிப்பீடாகும். குடும்பத் தலைவி உண்ட மாம்பழத்தின் சுவை, தமிழ் மொழியின் இனிமை போல் இருக்கிறதாம் (ப. 177). பள்ளியிலிருந்து வீடு திரும்பிய பிள்ளைகள், `பழந்தமிழ்ப் பொருளை அள்ளிப் படித்தவர் விழுங்குதல் போல்' உணவு உண்டனராம். (ப. 178).

இருண்ட வீட்டை நூலாசிரியர் வாசகர்களுக்கு அறிமுகம் செய்கிறார். இருண்ட வீட்டில் வள்ளுவம் இடம் பெற்றிருப்பதையும், அதன் பாத்திரப்படைப்பு - வளர்ச்சி நிலை ஆகியவற்றையும் அலசுகிறார்.

குடும்ப விளக்கும் இருண்ட வீடும் முரண்நிலையில் அமைந்தவை (ப. 257). நூலின் தலைப்பு, நோக்கம், இரு தலைவியரின் அன்பு நெஞ்சம், விருந்தோம்பும் திறம், அறிவுடைமை, தாய்மை உணர்வு, சோர்வின்மை, தூய்மை உணர்வு, இரு தலைவர்கள், அருமை மக்கள் எனும் தலைப்புகளில் இவ்விரு படைப்புகளையும் ஆசிரியர் ஒப்பிட்டாராய்கிறார்.

வேலைக்காரர் இல்லாத குடும்பம் சிறக்கும் என்பதைக் காட்டவும், வேலைக்காரி உள்ள குடும்பம் சிறக்காது என்பதைக் காட்டவும் இருநூல்களையும் அவர் படைத்துள்ளார் (ப. 259) என்கிறார் இந்நூலாசிரியர்.

`குடும்ப விளக்கும் குண்டுக்கல்லும்' எனும் பாவேந்தரின் குறுநாடகத்தையும் குடும்பவிளக்குடன் ஆசிரியர் ஒப்பாய்வு செய்திருக்கிறார். ஆண்கள் ஆற்ற வேண்டிய கடமைப் பொறுப்புகளை எடுத்தியம்பும் படப்பிடிப்பாகக் `குடும்ப விளக்கும் குண்டுக்கல்லும்' விளங்குகிறது எனும் மன்னர்மன்னனின் கூற்றை இந்நூலாசிரியர் பொருத்தமுடையது (ப. 278) என்கிறார்.

நூலின் இறுதியில், குடும்ப விளக்கையும் படித்த பெண்கள் எனும் உரைநடை நாடகத்தையும் ஆசிரியர் ஒப்பிட்டுப் பார்க்கிறார். `பெண் கல்வியின் உயர்வை விளக்கக் குடும்ப விளக்கைக் கவிஞர் படைத்தார், பெண்கல்வியின்மையின் இழிவை விளக்க இருண்ட வீட்டைப் படைத்தார், பெண்கல்வியின் இன்றியமையாமையை விளக்கப் படித்த பெண்கள் நாடகத்தை உருவாக்கினார்' (ப. 278) என்பது இந்நூலாசிரியர் கருத்து.

பெண்ணின் பெருமை வேண்டிப் பாடித் தீர்த்திட்ட பாவேந்தரின் குடும்ப விளக்கையும் இருண்ட வீட்டையும் வாசகர்களுக்குத் திறம்பட அறிமுகம் செய்வதில் சரளா ராசகோபாலன் வெற்றிபெற்றிருக்கிறார் என்பதற்கு இந்நூல் சான்றாகிறது. பொருளடக்கத்தில் நிலவும் அச்சுக் குழப்பத்தை ஆசிரியர் தவிர்த்திருக்கலாம்.

ந. கடிகாசலம்.

## 5. பலகணியில் பாவேந்தர்

கோ.பாரதி, பூங்கொடி பதிப்பகம்,
சென்னை-4, 1990, 208, ரூ.20

"ஏற்றமுறச் செய்வதும்
மாற்றமுற வைப்பதுவும்
ஏடேயாகும்"

என்று பாவேந்தர் இதழ்களைப் பற்றிப் பாடியுள்ளார். நாட்டின் நான்காவது தூணாக விளங்கும் இதழியல் துறை செய்திகளை மட்டும் வெளியிட்டுத் தன் பணி முடிந்தது என்று இருப்பதில்லை; சிறப்புப் பகுதிகளாகப் பல செய்திகளை வெளியிடுகின்றது. பல அறிஞர்களைப் பற்றிய கருத்துக்களை வெளியிட்டும் வாசகர்களைக் கவர்கின்றது. அந்த நிலையில் பாவேந்தர் பாரதிதாசனைப் பற்றி வெளியிட்ட கருத்துக்களைத் தொகுத்து `பலகணியில் பாவேந்தர்' என்ற நூலாகத் தந்துள்ளார், கோ. பாரதி. பாவேந்தர் இதழ்கள் என்னும் பலகணிவழியாட் காணும்போது சிறப்பாக இருக்கின்றது. திறமைகளை யாரும் மூடி மறைக்க முடியாது என்பதை இதழ்களில் பாவேந்தர் பற்றிச் சொல்லியிருக்கின்ற கருத்துக்கள் எடுத்துக்காட்டுகின்றன. பாவேந்தர் பாரதிதாசனார் நூற்றாண்டு மகிழ்ச்சி வெளியீடாக இந்நூல் வருவது பெருமைக்குரியது.

பல்வேறு இதழ்களில் வெளிவந்த செய்திகளைப் பாரதி தொகுத்தளிக்க, ஒவ்வொரு செய்தியின் கீழும் பாவேந்தரின் புதல்வர் மன்னர்மன்னன் விளக்கம் கொடுத்துள்ளார். தினமலர், தினசரி, தினகரன், மாலைமலர், ஆனந்த விகடன், குமுதம், தினமணிக்கதிர், முத்தாரம், கல்கி, சினிமா எக்ஸ்பிரஸ், சுமங்கலி, செங்குந்த மித்திரன், புதியராகம், சிறுகதைக் களஞ்சியம், மின்மினி, போன்ற பல இதழ்கள் பாவேந்தரைப் பற்றிய செய்திகளை வெளியிட்டுள்ளன; வெளியிட்டு வருகின்றன.

இந்நூல் நாளேடுகள், கிழமை ஏடுகள், திங்கள் ஏடுகள், பல்வகை ஏடுகள், எண்ணம் ஒன்று ஏடுகள் பல, என்று ஐந்து பகுதிகளாக அமைந்துள்ளது.

`பெண்ணே கேள்' என்ற தினகரன் நாளிதழ் வெளியிட்ட செய்திக்கு ஆசிரியர் கருத்து கூறும்போது "பாவேந்தர் குடும்ப விளக்கில் எல்லா பொறுப்புகளும் தலைவியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறிவிட்டு `குடும்ப விளக்கும் குண்டுக்கல்லும்' என்ற நூலில் தலைவிக்கு உதவியாக கணவன் எல்லாப் பொறுப்புகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்பதையும் கூறுகிறார். இவ்வாறு பாவேந்தரின் இருவேறுபட்ட கருத்துக்களை ஒப்பிட்டுச் சொல்லும் முறை சிறந்துள்ளது. துணுக்கு என்பது பத்திரிக்கையில் ஏதேனும் ஒரு மூலையில் இடம் பெறும். இவற்றிலும் பாவேந்தரைப் பற்றிய நிகழ்ச்சி வந்துள்ளதைத் தொகுத்து "சிந்தை அணு ஒவ்வொன்றும் தமிழாக வாழ்ந்த பாவேந்தர் செந்தமிழ் அறிஞர்களைக் கண்டதும் தமிழ்மணம் வீசிற்று போலும்" என்று அதற்கு விளக்கம் கொடுத்துள்ளது நன்கு அமைந்துள்ளது.

இவையேயன்றி பிரசுரமாகாத பாடல்களையும் விளக்குகிறார் ஆசிரியர். சாவி வார இதழில் (07-12-86) `ராஜா நலங்கிடவா, நடராஜா நலங்கிடவா' (பக் - 85) என்ற பாடலைக் கொடுத்து இந்நூலின் மூலம் பாவேந்தரின் பாடல்களை உலகிற்கு வெளிப்படுத்துகிறார். பிரயாணம் என்ற தலைப்பில் யாத்திரை செல்பவர்கள் என்னென்ன எடுத்துச் செல்வார்கள் என்பதை ஒரு பாடலாகப் பாடியுள்ளார். அதில் சில விடுபட்டுள்ளன என்று பேராசிரியர் மா. வைத்தியலிங்கன் பாடலைத் தொடர்ந்து தற்காலத்தில் உபயோகிக்கும் பொருட்களான பேஸ்ட், பிரஷ், ஷேவிங் செட் போன்றவற்றைப் பற்றி நான்கு வரிகள் சேர்த்துள்ளார்.

"ஜெட்டி, பனியன்கள், ஷேவிங்செட், நற்பூசைப்
பெட்டி, தீதும் மருந்து, பேஸ்ட், ப்ரஷ் திட்டமுடன்
துண்டு கைக்குட்டைகள் தோதாய் மறவாய்
கொண்டுபோ யாத்திரைக்கு" (பக் 101).

இதையும் பிரசுரித்து 60 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்ததற்கும் இன்றைக்கும் தேவைகள் நீண்டு கொண்டே போகலாம் என்று விவரிக்கும் பாங்கு நன்றாய் உள்ளது.

இதுபோன்று பல கருத்துக்களைப் பாவேந்தர் செய்திகளைக் கொண்டு விளக்கும் முறை இந்நூலில் சிறந்துள்ளது. பாவேந்தர் நூற்றாண்டு விழாவில் இதுபோன்ற அவரது கருத்துக்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளது இந்நூல் பலரும் பாவேந்தர் பற்றிய செய்தியினை அறியும் வகையில் நன்கு அமைந்துள்ளது.

மே. ஜான்சன்.

## 6. பாட்டருவிப் பாவேந்தர்

அருணா பொன்னுசாமி, கல்வி வெளியீடு,
சென்னை -13, 1991, 96, ரூ.15

பாவேந்தர் பாரதிதாசனின் வாழ்க்கை வரலாற்றை மிகச் சிறப்பான மரபு வழிக் கவிதைகள் மூலம் அருணா பொன்னுசாமி ஆக்கியளித்திருக்கிறார். `நூற்றாண்டு விழா நாளில் பாவேந்தர்க்கு வழங்கப்படும் கவிதை அணிவகுப்பு மரியாதைதான் இந்நூல்' (ப.14) என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

`மணக்கிறது புதுவை மண்' என்று நூலைத் தொடங்குகிறார். `மேவிய கவிதை வேந்தன் மேன்மையால் புதுவை மண் மணந்ததம்மா!' (ப.17) என்கிறார். இதோ! ஒரு இளஞ்சூரியன் என்று பாவேந்தரை அறிமுகம் செய்கிறார்.

பாவேந்தர் கல்வி கற்ற திறைமையைக் குறிப்பிடுகையில்

நற்றமிழ்க் கடலில் தாசன்
நளினமாய்க் கற்றுத் தென்னை
நெற்றென விளங்கி நின்றான் (ப.29)

என்கிறார் ஆசிரியர்.

யானையென நடந்துவரும் தாசன் போல
யார்நடக்க முயன்றாலும் தோற்றுப்போவார் (ப.46)

எனப் பெருமிதத்துடன் பாடுகிறார்.

புதுப்புனலின் ஆறேபா ரதியாம் என்றால்
புயல்காற்றுப் பெருமழைதான் தாசன் பாட்டு (ப.74)

என்று பாரதியையும் பாரதிதாசனையும் பாராட்டுகிறார்.

நல்ல உவமைகளை ஆங்காங்கே ஆசிரியர் பயன்படுத்தியிருக்கிறார். சில வருமாறு:

நீரோட்டம் குன்றாத ஆற்றைப் போல
நெய்மணக்கும் பண்ணியங்கள் சுவையைப் போல (ப.65)

மதியொளியும் நண்பர்தம் விருந்தும் போல
மாவிலையும் தமிழர்தம் இல்லம் போலும் (ப.50)

காற்றாலே கருமேகம் கலைந்த போலும்
குளிர்ந்தங்கே மழைபொழியும் பான்மை போல (ப.44)

பாவேந்தர் நூற்றாண்டு விழாவில்,

உமியளவும் இல்லாமல் சாதி தன்னை
ஒழித்திடுக! உயர்ந்திடுக! (ப.94)

என்றும்,

தமிழனாய்நீ வாழ்ந்திடுவாய்! அதுவே இந்நாள்
தமிழ்க்கவிஞன் தாசனுக்குச் செய்யும் தொண்டு (ப.92)

என்றும் ஆசிரியர் விரும்புகிறார்.

நிதமும் வள்ளல்போல் தமிழைக் காத்த
நீர்மையனாம் தாசன்தான் தமிழின் தூதன் (ப.82)

என்று முத்தாய்ப்பாகக் குறிப்பிடுகிறார்.

பாவேந்தரின் வாழ்க்கை வரலாற்றைச் சுருங்கச் சொல்லும் இக்கவிதை நூல் ஆசிரியரின் புலமைக்கும், கற்பனை வளத்துக்கும் சான்று பகர்கின்றது.

ந. கடிகாசலம்.

## 7. பாரதிதாசன்

ந: கடிகாசலம் (பதி.), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை- 113, 1991, 190, ரூ.27

பாரதிதாசனைப் பிற நாட்டு, பிற மொழிக் கவிஞர் பலரோடு ஒப்பிட்டு ஆராயும் வகையில் அமைந்த முதல் நூல் எனும் பெருமை இந்நூலுக்கு உண்டு. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பாரதிதாசன் நூற்றாண்டு விழாவைப் பயன்மிக்க வகையில் ஒப்பாய்வுக் கருத்தரங்கமாக நடத்தியதன் விளைவே இந்நூல்.

ஏப்ரல் 1990 முதல் ஏப்ரல் 1991 வரை நடைபெற்ற பாரதிதாசன் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கில் படிக்கப் பெற்ற 13 கட்டுரைகளில் எழுத்துருவில் வழங்கப்பெற்ற 10 கட்டுரைகளும், பெங்களூரில் நடைபெற்ற பாரதிதாசன் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கில் படிக்கப் பெற்ற"பாரதிதாசனும் வோர்ட்ஸ்வொர்த்தும்" எனும் கட்டுரையும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன:

கிளாட் மெக்கே, பைரன், வால்ட் விட்மன், வில்லியம் பட்லர் யேட்சு, இராபர்ட் ஃபிராஸ்ட்டு, தாராசு செவ்சென்கோ, கீட்சு, வோர்ட்ஸ்வொர்த் ஆகிய வெளிநாட்டுக் கவிஞர்களுடன் மட்டுமல்லாது, இந்திய, பிறமொழிக் கவிஞர்களுடனும் பாரதிதாசனின் கவிதைகள் ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் தோன்றிய ஹார்லம் மறுமலர்ச்சியின் முன்னோடிகளில் கறுப்பு கவிஞர் கிளாட் மெக்கே ஒருவர். தமிழ் மறுமலர்ச்சியின் முன்னோடிகளில் பாரதிதாசன் ஒருவர். இவ்விருவருமே புரட்சிக்கவிஞர்கள்; சினத்தைக் கவிதையாக்கியவர்கள். முற்போக்குக் கருத்துக்களைக் கொண்ட இவ்விருவருமே இயற்கையைப் பாடியிருக்கின்றனர். 'மெக்கேயும் பாரதிதாசனும் இனம், சினம் மீறிய கவிஞர்களாக, மானுட நேயத்திற்குக் கலங்கரை விளக்குகளாக ஒளி வீசுகின்றனர்' (ப.21) என்று தெரியவருகிறது.

பாரதிதாசனும் பைரனும் 'தாக்கத்தினால்' ஒப்பிடத் தக்கவர்கள் அல்ல. கருத்துக்களால் - அவற்றில் எவ்வளவு ஒற்றுமை இருக்கிறதோ அவ்வளவு வேற்றுமையும் இருத்தல் கண்டு - ஒப்பிடத்தக்கவர்கள் (ப.28) என்கிறார் கட்டுரையாசிரியர். 'பாரதிதாசனும் பைரனும் எழுதுவதில்

எழுச்சி காட்டினர்.... போர்வீரன் கையில் உள்ள வாள்போல் தங்கள் எழுதுகோல் பயனுற உழைக்க வேண்டும் என்ற வேட்கை இருந்தது' (ப.35) என்பது சான்றுகளுடன் புலப்படுத்தப்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் உழைப்பினைப் பாராட்டிப் போற்றிய கவிஞர்களாக விட்மனும் பாரதிதாசனும் விளங்குகின்றனர் (ப.59). தாய்மொழிப் பற்று, நாட்டுப்பற்று, பொதுவுடைமைக் கொள்கை, பெண்மைப் புரட்சி, சிறுமையைத் தூற்றுதல், இயற்கையைப் பாடுதல், குறியீடுகள் எனும் தலைப்புகளில் பாரதிதாசனும் வில்லியம் பட்லர் யேட்சும் எவ்வாறு ஒன்றுபடுகின்றனர் என்பது `பாரதிதாசனும் வில்லியம் பட்லர் யேட்சும்' எனும் கட்டுரை வெளிப்படுத்துகிறது.

`பாரதிதாசனும் ஃபிராஸ்ட்டும் கிட்டதட்ட ஒரே கோட்டில் உலா வந்த பெருங்கவிஞர்கள்.... இவர்கள் உணர்த்தும் பல்வேறு சிந்தனைகளில் ஒற்றுமை காணப்படுவது இயல்பே' (ப.77) என்கிறார் கட்டுரையாசிரியர். `மனிதருக்குள் வேற்றுமை கூடாது; அவர்களுக்குள்ளே குறுக்குச் சுவர்களோ, தடுப்பு வேலிகளோ, எல்லைக் கோடோ இருக்கக் கூடாது என்பது ஃபிராஸ்ட் கொள்கை.... மனிதன் எழுப்பியுள்ள சுவர்களைக் கடந்து உலக மக்களை ஒருங்கிணைக்க வேண்டும் எனப் பாரதிதாசன் எண்ணுவதைக் காண முடிகிறது' (ப.87) என்பதன் மூலம் இவ்விரு கவிஞர்தம் எண்ண ஒற்றுமை புலனாகிறது.

`பாரதிதாசன் -ஜீவனானந்ததாஸ் , இருவரும் காண விரும்பியது புரட்சி. தத்தம் குருநாதர்களுக்கு அவமானம் வந்த போது, துடித்தெழுந்தனர்.' (ப.101) இருவரும் இயற்கையைக் கவிதையாக்கினர். அவர்கள் பல நேரங்களில் ஒட்டிச் செல்வதைப் போலவே, சில நேரங்களில் ஒதுங்கியும் நடக்கின்றனர் (ப105) என்பதன் வாயிலாக அவர்களுக்கிடையிலான வேற்றுமை வெளிப்படுத்தப்படுகிறது.

பாரதிதாசனும் இந்திக் கவிஞர்களும் எனும் கட்டுரையில், நிராலா, ஜயசங்கர் பிரசாத், ஹரிவம்சராய் பச்சன், சுமித்ரானந்தன், சச்சிதானந்த ஹீராநன், ராம்தாரி சிங் தினகர், மைதிலி சரண்குப்தா, பீகாரி ஆகிய இந்திக் கவிஞர்களின் கவிதைகளோடு பாரதிதாசனின் கவிதைகள் ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளன. எண்ணத்தால் இக்கவிஞர்களோடு பாரதிதாசன் ஒன்றுபடுவதாகக் கட்டுரையாசிரியர் தெரிவிக்கிறார்.

பாரதிதாசனும் உக்ரேனியக் கவிஞர் செவ்சென்கோவும் மக்கள் கவிஞர்களாவர். தங்கள் காலத்திலிருந்த கொடுமை தீர்க்கப் போராடிய கவிதைப் பேராளிகளாக இவ்விருவரும் விளங்கியிருக்கின்றனர். பாரதிதாசனும் கீட்சும் புனைவியல் கவிஞர்கள். அழகுத் தத்துவத்தைப் பாடிய மாபெருங் கவிஞர்கள். இயற்கையைப் பாடிய கவிஞர்கள் என்ற நிலையில் பாரதிதாசனும் வோர்ட்ஸ்வொர்த்தும் ஒப்பிடத்தக்கவர்கள். சங்கம்புழ, உள்ளூர், குமாரன் ஆசான் ஆகிய மலையாள முப்பெருங் கவிஞர்தம் படைப்புகள் பாரதிதாசன் படைப்புகளோடு ஒப்பிடத்தக்கவை என்பது தெரிய வருகிறது.

இந்நூலின் தொடக்கத்தில் இடம்பெற்றுள்ள `பாரதிதாசன்' எனும் புதுக்கவிதை,

மரபுக் கவிதைக்கு
மயிலாசனம் இட்டவனே!

இலக்கிய நீலகிரி
இலட்சிய ஏலகிரி

என்றெல்லாம் பாவேந்தரின் புகழ்பாடுகிறது.

பாவேந்தரின் படைப்புகளை மட்டுமல்லாது, பல்வேறு நாட்டு மொழிக் கவிஞர்களின் படைப்புகளையும் எண்ணங்களையும் அறிந்து கொள்வதற்கு இந்நூல் பெரிதும் துணை நிற்கும். ஒப்பாய்வில் ஈடுபட்டுள்ளோர் பாரதிதாசனை மேலும் பல கவிஞர்களோடு ஒப்பிட்டு ஆராய்வதற்கு இந்நூல் உந்து சக்தியாக விளங்குகிறது.

பாரதிதாசன் நூற்றாண்டை ஒட்டி வெளியிடப்பட்ட **பாரதிதாசன்** எனும் இந்நூல் தமிழிலக்கிய உலகத்திற்குக் கிடைத்துள்ள சிறப்பானதோர் நூலாகும் எனலாம்.

## 8. பாரதிதாசன் ஆய்வுக் கோவை

மு. சாயபு மரைக்காயர் (தொ.), கங்கை புத்தக நிலையம், சென்னை- 17, 1990, 782, ரூ.100

நூறு தமிழறிஞரிடம் கட்டுரை கேட்டு வாங்கித் தொகுத்து நூலாக்குவது என்பது அவ்வளவு எளிதல்ல. நூறு தமிழறிஞரின் கட்டுரைகளைத் தொகுத்து, `பாரதிதாசன் ஆய்வுக் கோவை' எனும் பெரிய நூலை அளித்திருக்கும் மு. சாயபு மரைக்காயரும், கங்கை புத்தக நிலைய உரிமையாளர் டி.ஆர்.இராமநாதனும் உண்மையிலேயே மிக்க பாராட்டுக்கு உரியவர். பாரதிதாசன் நூற்றாண்டு விழாவில் அவர்களின் காணிக்கை இது எனவும் கருதலாம்.

பாரதிதாசன் படைப்புகளை ஆராயும் வகையில் நூறு தலைப்புகளில் கட்டுரைகள் தரப்பெற்றுள்ளன. பாவேந்தரோடு நெருங்கிப் பழகியோர்தம் உணர்வலைகளைச் சில கட்டுரைகள் உள்ளடக்கமாகக் கொண்டுள்ளன. சில கட்டுரைகள் பாரதிதாசன் கவிதைகளின் சிறப்பைப் பேசுகின்றன; புரட்சிக் கவிஞரின் படைப்புத் திறமையைப் போற்றுகின்றன; பிற கவிஞரோடு பாவேந்தரை ஒப்பீடு செய்கின்றன. அனைத்துக் கட்டுரைகளும் பொது நிலையில் சிறப்பாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஊழ் பற்றிய திருவள்ளுவரின் பத்துக் குறட்பாவுக்கும் அது சட்டம், முறை, விதி என்று பொருள் கொள்வதே சால்புடையது (ப21) என்னும் கருத்து, பாரதிதாசனின் பார்வையில் ஊழ்க் கொள்கையைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

மொழிவழியாக மனத்தில் ஏற்படுத்தப்பெறும் ஓவியம் எனக் கருதப்பெறும் படிமம் பாரதிதாசன் கவிதைகளில் இடம் பெற்றுள்ள போக்கைப் `பாவேந்தரின் படிம ஆக்கம்' எனும் கட்டுரை ஆராய்கிறது.

`அசைவுகளோ சலனங்களோ அற்ற ஓவியத் தன்மையுடைய படிம ஆக்கம் இவர் இலக்கிய உத்தியின் ஒரு வகை' (ப38) என ஆய்வாளர் துணிந்து கூறுகிறார்.

ஆத்திகவாதிகளிடம் உள்ள குற்றங்குறைகளைச் சாடிய பாவேந்தர், அவர்களிடம் நல்ல இயல்புகள் தென்பட்டால் பாராட்டவும் தயங்கியதில்லை(ப79) என்பதைப் `புரட்சிக் கவிஞர் போற்றிய இராமனுசர்' எனும் கட்டுரை வெளிப்படுத்துகிறது.

பாரதிதாசனும் இராபர்ட் பிராஸ்ட்டும் இயற்கையை மனித வாழ்வோடு இணைத்துப் பாடிய போக்கினை, `பாரதிதாசனும் பிராஸ்ட்டும்' எனும் கட்டுரை (ப169-174) ஒப்பிட்டுக் காண்கிறது.

பாரதிதாசனின் நாட்டுப்புறவியல் நாட்டத்தை ரசனை, பதிவு, படைப்பு, புரட்சி என நான்கு வகையாகப் பகுத்துக் கொண்டு ஆராய்கிறது `பாரதிதாசனின் நாட்டுப்புறவியல் நாட்டங்கள் எனும் கட்டுரை.

`பாவேந்தரின் வருணனைத் திறன்' எனும் கட்டுரை, இலக்கியத்துள் சிறப்பிடம் கொள்ளும் வருணனையைப் பாரதிதாசன் பயன்கொண்டுள்ளமையை அடிப்படையாகக் கொண்டு அவரியல்பை, பெருமையை, உள்ளத்தைக் காண்கிறது.

வானொலியும் தொலைக்காட்சியும் மின்னணுவியல் சகோதரிகள். அவர்களுள் ஒருவர் செவிமடுத்தியார், மற்றொருவர் கண்ணம்மையார்' (ப288) எனப் புதுமை விளக்கம் தந்து, இந்த இரண்டு சகோதரிகளின் பிறப்பைப் பற்றிப் பாவேந்தர் கண்ட கனவைப் `பாவேந்தர் படைப்பில் வானொலியும் தொலைக்காட்சியும்' எனும் கட்டுரை சுவையாக வெளிப்படுத்துகின்றது.

பாரதிதாசன் படைத்த நாடகங்களில் சங்ககாலப் புலவராகிய பிசிராந்தையாரின் வரலாற்றைக் கருப்பொருளாகக் கொண்ட நாடகம் சிறப்பிற்குரியதாக விளங்குகிறது(ப643) நிகழ்ச்சிச் சூழலில் பெரிதும் மனம் செலுத்தாமல் உணர்ச்சிகளின் வடிவிலேயே பிசிராந்தையார் விளங்கி நிற்கிறது' (ப652) என்று `பாவேந்தரின் பிசிராந்தையார்' எனும் கட்டுரை தெளிவுபடுத்துகிறது.

`பாரதிதாசன் படைப்புகளில் தற்கொலை என்பது நிகழ்வுகளாகவும், அச்சுறுத்தல்களாகவும், முயற்சிகள் என்ற அளவிலும் முப்பத்தெட்டு இடங்களிலாவது சுட்டப்படுகின்றன' (ப670) ; ஆயினும் `தற்கொலை என்பது அவரிடம் ஒரு முக்கியமான பொருட் கூறாக இருந்ததில்லை' (ப680), என்கிறது `பாரதிதாசன் பார்வையில் தற்கொலை' எனும் கட்டுரை.

நூறு கட்டுரைகளும் நூறு முத்துக்கள் என்பதில் ஐயமில்லை..தமிழன்னைக்குச் சூட்டப்பட்ட முத்தாரமாக `பாரதிதாசன் ஆய்வுக் கோவை' மிளிர்கிறது. ஆய்வுக் கட்டுரைகளை வழங்கிச் சிறப்பித்திட்ட தமிழறிஞர் பாராட்டுக்குரியவர். பாவேந்தர் நூற்றாண்டு விழாவில் தமிழுக்குச் கிடைத்திட்டதோர் நல்ல வரவு இந்நூல்.

ந. கடிகாசலம்.

## 9. பாரதிதாசன் இதழ்ப்பணிகள்

மா. அண்ணாதுரை, பூங்கொடி வெளியீடு, ஈரோடு-2, 1990, 570, ரூ.125

கலைஞன் பிறக்கின்றானா? அல்லது உருவாக்கப்படுகின்றானா? இன்னும் முடிவாகவில்லை. எனினும் அவன் தன் காலச் சமுதாயத்தைத் தன் படைப்புகளில் பிரதிபலிக்கிறான். படைப்பாளர் தம் படைப்பை வெளிப்படுத்த இதழ்களைப் பயன்படுத்தி வந்தமை வரலாற்றால் அறியும் உண்மையாகும். "ஊரினை, நாட்டினை, இந்த உலகினை ஒன்று சேர்க்கப் பேரறிவாளர் நெஞ்சிற் பிறந்த பத்திரிக்கைப் பெண்ணே உன் நலம் காணார் ஞாலம் காணார்" என்றார் பாவேந்தர். அவரும் ஒரு இதழாளர் தான். அவரும் இதழ்கள் பல நடத்தி வெற்றி கண்டவர்தான். அவருடைய இதழ்களை ஈரோடு கலைக்கல்லூரி (தன்னாட்சி) நூலகர் மா. அண்ணாதுரை டாக்டர் பட்டத்திற்காக 1986-இல் ஆய்வு செய்து சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளித்துள்ளார். பாவேந்தர் நூற்றாண்டில் அவருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் ஆய்வேட்டை நூலாக்கி அரிய செய்திகளை அனைவரும் அறிய வழி செய்திருக்கிறார்.

முன்னுரை, நிறைவுரை நீங்கலாக இந்நூல் ஏழு இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பாரதிதாசனும் இதழ்களும், இதழ்களின் அமைப்பும் குறிக்கோளும், பாவேந்தரின் இதழியல் கண்ணோட்டம், தலையங்கம், இதழ்ப்பணிகள், பாவேந்தரின் இதழியல் நடை, கையெழுத்துப்படிகளும் அச்சுப்படிகளும் ஆகிய தலைப்புகளில் நூல் அமைந்துள்ளது.

தமிழகத்தின் பெரும் அரசியல் தலைவர்களும் கவிஞரும் எழுத்தாளர்களும் தங்கள் கருத்துக்களை மக்களுக்குச் சொல்ல இதழ்களையே நம்பியிருக்கின்றனர். தொடக்க காலங்களில் பாரதியார், திரு.வி.க, வ.வே.சு ஐயர், சுப்ரமணிய சிவா போன்ற பலர் இதழ்களுக்கு ஆசிரியராக இருந்தமையையும், அவர்களே சொந்தமாக இதழ்கள் நடத்திச் சமுதாய மாற்றத்திற்குப் பாடுபட்டதையும் வரலாறு உணர்த்தும். பாவேந்தரும் புதுவை முரசு (வார இதழ்), ஸ்ரீ சுப்ரமணிய பாரதி கவிதாமண்டலம் (மாத இதழ்), முல்லை (மாத இதழ்), குயில் (புத்தகம்), குயில் (பெயர்ப்பன்னூல்), குயில் (திங்கள்), குயில் (தினசரி), குயில் (கிழமை), குயில் (திங்களிருமுறை) ஆகிய இதழ்களுக்கு ஆசிரியராக, ஆதரவாளராக, உரிமையாளராக இருந்து தம் புரட்சிக் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார். இவ்விதழ்களை ஆய்வுக்களனாகக் கொண்டு கிடைத்தற்கரிய செய்திகளைத் திரட்டி ஆய்வு செய்துள்ளார் ஆசிரியர்.

"Today's Newspaper Tomorrow's Waste Paper" என்பர். யாரும் செய்தித்தாள்களையோ இதழ்களையோ பாதுகாப்பதில்லை. நூலகங்கள், அறிஞர் இதற்கு விதிவிலக்காக இருப்பர். பழைய இதழ்கள் கிடைக்காது. எனினும் முயன்று சேகரித்து இந்நூலை உருவாக்கிய அவரது உழைப்பு இந்நூலில் கொட்டிக் கிடப்பதைக் காணலாம். பாரதியார் பாவேந்தருக்குக் குருவாக இருந்ததை நாடறியும். பாவேந்தரின் இதழ்ப் பணிக்குக் காரணம் பாரதியாரின் 'இந்தியா' இதழின் கட்டுரையும், கருத்துப்படமும், தலையங்கமும்தான் என்பதைப் பாரதிதாசனும் இதழ்களும் என்ற முதல் இயலில் கூறுகிறார். பாவேந்தரை அறிமுகப்படுத்தியவர் பாரதியார். பாரதியாரைப் பின்பற்றி, கனக சுப்புரத்தினம் தனது பெயரை, 'பாரதிதாசன்' என்று மாற்றிக்கொண்ட வரலாறு,

கனக சுப்புரத்தினத்தின் புனை பெயர்கள், அவரை வளர்த்துவிட்ட இதழ்கள் போன்ற பாவேந்தரின் தொடக்கக்கால வாழ்க்கையை முதல் இயல் விரிவாக எடுத்துரைக்கிறது.

குடியரசு இதழின் தாக்கத்தால் பாவேந்தர் நாத்திகரானதும், அதனைத் தொடர்ந்து 1930-இல் `புதுவை முரசு' தோன்றியதும் பாவேந்தர் வாழ்க்கையில் / படைப்புகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றமாகும். இதற்குக் காரணமாக இருந்தவர், குஞ்சிதம் குருசாமி தம்பதி ஆவர்.

இதழ்ப்பணிக்கு உறுதுணையாகப் பாவேந்தர், கழகங்கள் தோற்றுவித்துத் தமிழ்ப் பாடல்களைப் பரப்ப முனைந்தது; 1946-இல் பாவேந்தருக்கு அண்ணா பொற்கிழி வழங்கிய வரலாறு போன்றவற்றைத் தகுந்த சான்றுகளுடன் ஆய்வு செய்துள்ளார். குயில் மேல் பாவேந்தருக்கு அளவற்ற ஈடுபாடு. தன் இதழின் பெயரைக் கூட குயில் என்றே வைத்தமை இதற்குச் சான்று. குயில் இதழின் வரலாற்றையும் அதன் கொள்கைகளையும் பலரின் குறிப்புகளோடு சிறந்த முறையில் விளக்கியுள்ளார்.

பாவேந்தரின் அரசியல் ஈடுபாடு, அவரின் கொள்கைப் பற்றால் நேர்ந்த நன்மை தீமைகள்; பாவேந்தரே நடத்திய இதழ்கள் அன்றிப்பிற இதழ்களிலும் அவர் செய்த எழுத்துப் பணிகள் போன்றவை விளக்கப்படுகின்றன. `இதழ்களின் அமைப்பும் குறிக்கோள்களும்' என்ற தலைப்பில் புதுவைமுரசு, ஸ்ரீசுப்ரமணிய பாரதி கவிதா மண்டலம், குயில் (புத்தகம், பெயர்ப்பன்னூல், திங்கள், கிழமை, திங்களிருமுறை) போன்ற இதழ்களின் அமைப்பு, சந்தாவிவரம், விளம்பரக் கட்டணம், நோக்கம், இதழ்களில் இடம் பெற்ற செய்திகள், மதிப்புரைகள், தலையங்கம், துணுக்குகள், மொழிபெயர்ப்புகள் போன்றவற்றை முறைப்படித் தொகுத்துத் தந்திருக்கிறார். குயில் தினசரி மூன்று குறிக்கோள்களைக் கொண்டு வெளிவந்துள்ளது. அதில் ஒன்று இந்திய யூனியனிலிருந்து திராவிடநாடு விடுதலை பெற வேண்டும் என்பது. குயில் புத்தகத்தின் நோக்கமாகப் பாவேந்தர் எழுதிய பாடலொன்றில் பல நோக்கங்கள் தென்படுகின்றன.

> "செந்தமிழ் நாடு சிறப்புறுதல் வேண்டுமெனில்
> நந்தமிழ் நாம்மீட்ட வேண்டுமன்றோ? முந்தாத
> நெஞ்சும் விழியும், நிலைகண்டெழும் வண்ணம்
> கொஞ்சும் நமது குயில்."

என்கிறார் பாவேந்தர்.

ஒவ்வொரு இதழாசிரியருக்கும் ஒரு இதழியல் கண்ணோட்டம் இருக்கும். தாம் சார்ந்திருக்கும் சாதி, மத, அரசியல் தாக்கம் உறுதியாக இதழ்களில் படிந்திருக்கும். "பாவேந்தர் இதழியல் கண்ணோட்டம்" என்ற இயலில் இதழியலின் அடிப்படைக் கோட்பாடுகள், பண்புகள், சமுதாயப் பொறுப்புகள், பாவேந்தரின் இதழ்கள், அவரின் இதழியல் கண்ணோட்டம், குறிக்கோள், அவரின் இதழியல் திறன்கள் போன்ற பல செய்திகள் உள்ளன.

தலையங்கம் பற்றிய பாவேந்தரின் கருத்துக்களையும் அவரின் கவிதைத் தலையங்கங்களையும் ஆசிரியர் எடுத்துக்காட்டுகின்றார்.

இதழ்ப்பணிகள் என்ற தலைப்பில் பாவேந்தரின் மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று போன்றவற்றைக் காணலாம்.

தமிழும் உயிரும் உடம்பும் தமிழன்
இந்த மூன்றில் எது குறைந்தாலும்
தமிழன் இருப்பினும் செத்தவன்தானே

தமிழில் பேசுதல், தமிழில் பாடல், தமிழில் தெருப்பெயர்கள், தமிழில் வழிபாடு, தமிழில் திருமணம் போன்றவை அவருடைய இதழ்ப்பணிகளில் குறிப்பிடத்தக்கவையாகும். பாவேந்தரின் இதழ்களில் இடம் பெற்ற திராவிடக் கொள்கை, தேசியக் கொள்கை, உலகக்கொள்கை, பிற கட்டுரையாளர் எழுத்துச்சீர்திருத்தம் போன்றவற்றை டாக்டர் மா. அண்ணாதுரை எடுத்துக்காட்டுகின்றார். `விசிறி என்பதை `வ்இச்இற்இ' என்றும் `அஃது பெரிது ஆயினும் எளிது' என்பதை `அஃத்உப்எர்இத்உ ஆய்இன்உம் எள்இத்உ' என்றும் எழுதலாம் என்று பாவேந்தர் கூறியுள்ளார். இப்படி எழுதுவதால் வரும் 6 பயன்களை ஆய்வாளர் கூறுகின்றனர். அப்பயன்கள் மறு ஆய்விற்கு உரியனவாகும்.

பாவேந்தரின் இலக்கிய, இலக்கண, காப்பிய, இசை, திரைப்படப் பணிகளை ஆசிரியர் அழகாக எடுத்துக்காட்டியுள்ளார். பாவேந்தரின் தொடக்க கால நடை, பிறகு ஏற்பட்டத் தனித்தமிழ் நடை, தலையங்க நடை முதலியவற்றை அவரின் படைப்பு வழி நின்று இனம் பிரித்துக் காட்டுகின்றார். பாவேந்தர் நடத்திய இதழ்களில், கையாண்ட திசைச் சொற்கள், வடசொற்கள், ஆங்கிலச் சொற்கள், புதிய சொல்லாக்கங்கள் போன்றவற்றைப் பட்டியலிட்டுத் தருகின்றார்.

நூலின் இறுதியில் பாவேந்தரின் கையெழுத்துப்படிகள் பற்றியும் அச்சுப்படிகள் பற்றியும் கூறுகின்றார். பாவேந்தரின் கையெழுத்துப்படியிலிருந்து அச்சுப்படிகளாக வரும்போது ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி இவ்வியலில் கூறுகின்றார். `ஒன்பது சுவை' என்ற நாடகம் கையெழுத்துப்படியில் `நவரச நாட்டியம்' என்றுள்ளதை எடுத்துக் கூறுகின்றார். முடிவுரையில் ஏழு இயல்களில் கூறப்பட்ட செய்திகளைத் தொகுத்துத் தந்திருக்கிறார். பின்னிணைப்பாக இதழ்களில் வெளிவந்த பாரதிதாசனின் அனைத்துப் படைப்புகளையும் அகர வரிசைப் படுத்திக் கொடுத்திருக்கிறார். இவரது அயராத உழைப்பு இப்பின்னிணைப்பில் பளிச்சிடுகின்றது. பிற இதழ்களில் பாரதிதாசனின் படைப்புகள், நூலாக்கம் பெறாத கையெழுத்துப்படிகள், பாவேந்தர் குயில் இதழில் வெளியிட்ட கவிஞர் பற்றிய விவரங்கள் போன்றவையும் இடம் பெற்றுள்ளன.

நூலின் இடையிடையே கொடுக்கப்பட்டுள்ள சான்றுகளாகப் பல இதழ்களின் படங்களும் பாவேந்தரின் கையெழுத்துப் படங்களும், நூலுக்கு அழகு சேர்க்கின்றன. பாவேந்தரின் குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர். மா. அண்ணாதுரை முயன்று பல செய்திகளைத் திரட்டி "பாரதிதாசன்இதழ்ப்பணிகள்" என்ற தலைப்பில் பெரிய செயலைச் செய்துள்ளார். இனிவரும் ஆய்வாளருக்கு இந்நூல் சிறந்த குறிப்பு நூலாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. பாவேந்தர் நூற்றாண்டில் சரியான நேரத்தில் தனது ஆய்வேட்டை நூலாக்கி அளித்த அவருக்குத் தமிழுலகம் என்றும் நன்றி செலுத்தும்.

அ.லோ.பழனிசாமி

## 10. பாரதிதாசன் ஒரு களஞ்சியம்

கருவை. பழனிசாமி, திருமொழிப் பதிப்பகம்,
கரூர், 1990, 54, ரூ.5

இந்நூலின் ஆசிரியர் பேராசியர் கருவை பழனிசாமி அவர்கள், கரூர் அரசு கலைக்கல்லூரி தமிழியல் துறைத் தலைவர் ஆவார். கரூர்த் தமிழ்ச் சங்கத்தை நிறுவி பொதுச் செயலாளராக இருந்து தமிழ்ப் பணியாற்றும் இவர், பல தமிழாராய்ச்சி நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவர்தம் அரிய முயற்சியினால் உருவான இந்நூல், 'புரட்சிக் கவிஞர் புதிர் வினாடி-வினா எனும் முறையில் அமைந்து விடை பகர்கின்றது. வினாக்கள் ஒருபகுதியாகவும் விடைகள் ஒரு பகுதியாகவும் அமைந்துள்ள இந்நூலில் 271 வினா-விடைகள் இடம் பெற்றுள்ளன. கவிஞரின் பிறப்பு, குடும்பம், பொதுவாழ்வில் ஈடுபாடு, படைப்புகள், கவித்திறன், பிற அறிஞர் பற்றிய கவிஞரின் கருத்துகள், கவிஞரைப் பற்றிய பிற அறிஞரின் கருத்துகள், கவிஞரைப் பற்றிய ஆய்வுகள், நூல்கள் என வரிசைப்படுத்திய முறையில் வினா விடை அமைந்து கவிஞரின் முழு வரலாற்றையே தொகுத்தளிக்கிறது.'

புரட்சிக் கவிஞர் எழுதிய முதல் புதினம் (பாரிவயலார் வரலாறு அல்லது கெடுவான் கேடு-வினா 31), 1945 ஆம் ஆண்டு ஒரே இரவில் எழுதி வெளியான நூல் (தமிழியக்கம்-வினா 48), புரட்சிக் கவிஞர் படைத்த பயண இலக்கியங்கள் இரண்டு (மாபலிபுரச்செலவு, குன்னூர் -வினா 267), இதுவரை எந்தக் கவிஞருக்கும் எட்டாத சிகரமாய் ஒரு பொருளைப் புரட்சிக் கவிஞர் பாடியது ('அகரமுதலி' 7 தாழிசைகள் வினா-263), புரட்சிக்கவிஞர் தமிழறிஞரில் ஒருவரைத்தேனருவி எனப்போற்றியமை. (திரு.வி.க.- வினா 174), `நமக்கோர் ஷெல்லி கிடைத்து விட்டார்' என்று புரட்சிக் கவிஞரைப் போற்றியவர் (அறிஞர் அண்ணா-வினா 95) என்பன போன்ற செய்திகள் இடம் பெற்றுள்ளமை இந்நூலாசிரியரின் அரும்பணிக்குச் சான்றாக அமைகின்றன. முதல் வினாவுக்குரிய விடை அடுத்த வினாவில் அமைந்திருக்கும் போக்கில் அமைத்துள்ள ஆசிரியரின் திறன் (வினா 65, 66, 203, 204) போற்றுதற்குரியது.

மொத்தத்தில் பாவேந்தரைப் பற்றிய அறிவுக் களஞ்சியமாக இந்நூல் திகழ்கிறது.

சா. இராசசேகரன்.

## 11. பாரதிதாசன் காதல் அமுதம்

முல்லை மு. பழநியப்பன்,
நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 1987, 85., ரூ.7.50

பாரதிதாசன் படைப்புகள் என்ற பழக்கூடையில் இருந்து, காதல் எனும் பழத்தைத் தனியே பிரித்துப் பிழிந்து கோப்பையில் ஊற்றி நமக்குப் பருகத் தருகிறார் இந்நூலாசிரியர்.

காதலர் உலகத்திற்கு மட்டுமே புரியக்கூடிய காதல் வருணனைகளை அள்ளி வீசுகிறார் பாரதிதாசன். அவ்வாறு வீசிய வருணனைகளை அழகு, முகம், கூந்தல், பார்வை, இதழ், முறுவல், கன்னம், முத்தம், இடை, நடை, சாயல், காதலன் கூற்று, காதலி கூற்று, தழுவுதல், திருமணம், பிரிவு என்று பதினாறு பகுதியாக வகைப்படுத்தி நமக்கு அளிக்கிறார் நூலாசிரியர்.

`கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர் கடுகாம்`

என்று அவளுடைய பார்வையைப் பற்றி பாரதிதாசன் குறிப்பிடும் பாங்கோ அலாதி!

காதல் வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்க்கும், காதலர்க்கும், காதலைப் பற்றி நினைப்பவர்க்கும் இந்நூல் அமுதகானமாகலாம்; துன்புற்ற நெஞ்சுக்கு இதமான மருந்தாகலாம்.

ச. குணசீலன்.

## 12. பாரதிதாசன் தமிழ் முழக்கம்

முல்லை மு.பழநியப்பன் (தொ),
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை-98, 1987, 56 ரூ.5

ஆங்கிலக் கவிஞர்தம் கவிதைகளிலிருந்து ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றிய கவிதை வரிகளைத் தொகுத்து வெளியிடப்படுவது நாம் அறிந்த ஒன்று. அதுபோன்று தமிழில் வெளிவந்துள்ள நூல் இது.

பாரதிதாசன் பாடிய கவிதைகளிலிருந்து தமிழ் பற்றிய கவிதைகளை ஆசிரியர் இந்நூலில் தொகுத்துக் கொடுத்திருக்கிறார். தமிழின் சிறப்பு, தமிழின் இனிமை, தமிழ் வளர்ச்சி என 14 தலைப்புகளில் அவற்றை வகைப்படுத்தியிருக்கிறார்.

தமிழ் எங்கள் உயிர்என்ப தாலே- வெல்லுந்
தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே (ப1)

எனத் தொடங்கி,

தாய்த்திருநாடுயர் வெய்தும்
நாள் எந்நாள்? தமிழிலுயரும்
நாள் எந்நாளோ? (ப56)

என நூலை நிறைவுசெய்கிறார் ஆசிரியர்.

மாணவர்க்கும் மேடைப் பேச்சாளர்க்கும் கைகொடுக்கும் சிறப்புடைத்து இந்நூல்.

ஜி. துளசிபாய்

## 13. பாரதிதாசன் படைப்புகளில் நகைச்சுவை

அரங்க. இராமலிங்கம், தேன்மழைப் பதிப்பகம்,
சென்னை- 16. 1991, 160 ரூ.17.50.

"பாரதிதாசன் படைப்புகளில் நகைச்சுவை" என்ற இந்நூல் 1977இல் எம்.பில்., பட்டத்திற்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்குத் தரப்பெற்ற ஆய்வேட்டின் வெளியீடாகும். இந்நூல் (1) நகைச்சுவையும் பாரதிதசானும்; (2) பாரதிதாசன் பாடல்களில் நகைச்சுவை; (3)பாரதிதாசன் நாடகங்களில் நகைச்சுவை; (4) பாரதிதாசன் கதைகளில் நகைச்சுவை; (5) பாரதிதாசன் படைத்த நகைச்சுவை மாந்தர்கள் - என்ற ஐந்து கட்டுரைகளைக் கொண்டது.

நூலின் இறுதியில் பாரதிதாசன் படைப்புகள், துணை நூற்பட்டியல், பாவேந்தரைப் பற்றிய நூல்கள், சிறப்புப் பெயர் அடைவு என்பவை இணைக்கப்பெற்றுள்ளன.

"நகைச்சுவையும் பாரதிதாசனும்" என்ற முதல் கட்டுரை (1) நகைச்சுவை என்பதன் விளக்கம், (2) நகைச்சுவை வெறும் சிரிப்புக்காக மட்டும் அமையாது சிந்தனையைத் தூண்டுவதாயும் சிறந்த கருத்துகளை வழங்குவதாயும் அமைய வேண்டும்; (3) காலமும் சூழ்நிலையும் மக்களின் மன நிலையுமே நகைச்சுவை தோன்றுவதற்குரிய காரணங்களாக அமைகின்றன; (4) நகைச்சுவையும் அழுகையும் ஒன்றொடொன்று மிக நெருங்கிய தொடர்புடையவை; (5) அகநிலையில் தோன்றும் சிரிப்பு; புறநிலையில் தோன்றும் சிரிப்பு என நகைச்சுவையை இருபெரும் பிரிவுகளில் அடக்கலாம்; (6) நகைச்சுவை உடல் நலத்திற்கும் மன நலத்திற்கும் நன்மை பயப்பது; அரசியலையும் சமுதாயத்தையும் திருத்துவதற்கும் பயன்படுகிறது; (7) சமுதாயத்தில் நிலைபெற்றுவிட்ட மூடப் பழக்க வழக்கங்களையும், குருட்டு நம்பிக்கைகளையும், அறியாமையையும் சாடுவதற்காகவே நகைச்சுவையைப் பாரதிதாசன் தனது படைப்புகளில் பயன்படுத்தியுள்ளார் என்ற கருத்துக்களை எடுத்துரைக்கின்றது.

பாரதிதாசன் பாடல்களில் நகைச்சுவை எள்ளல், இளமை, மடமை, உவமை, இயற்கை, இயல்பு, அரசியல், புரட்சிக்கருத்து ஆகிய களங்களில் படைக்கப்பட்டுள்ளன என்பது அடுத்த கட்டுரையில் புலப்படுத்தப்படுகிறது.

பாரதிதாசன் தமது நாடகங்களில் கருத்துப் பரவலுக்கு நகைச்சுவையை ஒரு கருவியாகப் பயன்படுத்தியுள்ளார்; உரையாடல், சொல்லாட்சி, காட்சியமைப்பு ஆகியவற்றில் நகைச்சுவையை இயல்பாக அமைத்து கருத்துக்களை வலியுறுத்துகிறார் என்பனவற்றை மூன்றாம் கட்டுரை புலப்படுத்துகிறது.

"பாரதிதாசன் கதைகளில் நகைச்சுவை" என்ற அடுத்த கட்டுரை, இந்தச் சமுதாயத்தில் வேரூன்றிவிட்ட குருட்டு நம்பிக்கைகளையும், மூடப்பழக்க வழக்கங்களையும், அறியாமையையும் பாரதிதாசன் தம் நகைச்சுவைக் கதைகளின் மூலம் எங்ஙனம் சாடுகிறார் என்ற கருத்தை வலியுறுத்துகிறது.

புரட்சிக் கருத்துக்களைக் கூறுவதற்குப் பாரதிதாசன் தமது படைப்புகளில் நகைச்சுவை மாந்தரைப் பயன்படுத்தியுள்ளார், சிரிப்பதற்கும் சிந்திப்பதற்கும் கூட நகைச்சுவை மாந்தரைப் பயன்படுத்தியிருப்பது பாவேந்தரின் தனிப் பண்பாகிறது என்பனவற்றை, "பாரதிதாசன் படைத்த நகைச்சுவை மாந்தர்கள்" என்ற கட்டுரை விளக்குகின்றது.

பாரதிதாசன் படைப்புகளிலான நகைச்சுவையை அவர்தம் பாடல்கள், நாடகங்கள், கதைகள், நகைச்சுவை மாந்தர்கள் இவற்றின் வழி ஆராய்ந்து சிறப்பாக வெளியிட்டுள்ளார். பாரதிதாசன் படைப்புகளுடன் நின்றுவிடாமல் அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளின் வாயிலாகவும் 'பாரதிதாசன் நகைச்சுவை உயர்வு மிக்கவர்' என்பதனை எடுத்துக் காட்டும் திறன் பாராட்டத்தக்கது. படைப்பாளரின் படைப்புகள் அவர்தம் வாழ்க்கையோடு இணைத்துப் பார்க்க வேண்டியதன் தேவையை இது உணர்த்துகிறது.

இறுதியில் இடம் பெற்றுள்ள பாரதிதாசன் படைப்புகள், துணை நூற்பட்டியல், பாவேந்தரைப் பற்றிய நூல்கள் ஆகிய அனைத்தும் ஆய்வாளருக்குப் பெரிதும் துணை புரியும்.

நா. புனிதப் பொற்கொடி

## 14. பாரதிதாசன் படைப்புகளில் மனித நேயம்

இரா. சக்குபாய், மனிதம் பதிப்பகம்,
திருச்சி - 21, 1990, 344, ரூ.45

பாரதிதாசன் பல்கலைக் கழக டாக்டர் பட்டத்திற்கான இவ்வாய்வேடு பாரதிதாசன் நூற்றாண்டு விழாவில் நூல்வடிவம் பெற்றுள்ளது. மனிதநேயம் பற்றிய ஆய்வுகள் அரிதாக உள்ள இக்காலக்கட்டத்தில், "பாரதிதாசன் படைப்புகளில் மனிதநேயம்" என்ற ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுத்த ஆய்வாளர் பாராட்டுக்குரியவர்.

மனிதநேயம் -ஒரு வரலாற்றுப் பார்வை, மனிதநேயத்தின் உலகப் பொதுமை, உழைப்பாளர் விடுதலை, பெண்விடுதலை, மனிதநேயமும் ஒழுக்கவியலும் எனும் ஐப்பெரும் தலைப்புகளில் இந்நூலைப் பகுத்துக்கொண்டிருக்கிறார்.

`உலகம் போரின்று வாழவும் உலக மக்களிடையே அன்பு தழைக்கவும் ஏற்றத் தாழ்வுகள் இல்லாதொழிந்து ஒப்புரவு நிலைக்கவும் வழிவகுக்கும் ஓர் உயரிய கோட்பாடே மனிதநேயம்.... அணுக்குண்டு முதலான கொலைக் கருவிகளின் பெருக்கத்தால் மக்கள் நெஞ்சில் படிந்துள்ள அச்சத்தை மாற்றக்கூடிய ஆற்றல் இக்கோட்பாட்டிற்கு மட்டுமே உண்டு' (ப3) என்று ஆசிரியர் இந்நூலைத் தொடங்குகிறார்.

மனித நேயக் கோட்பாடு இரண்டு கிளைகளாகக் கிளைத்து வளர்ந்த நிலையை வரலாற்றுப் பார்வையுடன் ஆசிரியர் காண்கிறார். பாரதிதாசன் படைப்புக்களில் இவை எவ்வாறு ஒன்று சேர்கின்றன என்பதை மிக விரிவாக ஆராய்ந்து, `சமுதாயத்தின் இருப்புநிலை அதாவது அதன் அமைப்பு மனித ஆளுமைகளைச் சிதைப்பதாக இருந்ததால் அதனைத் தலைகீழாக மாற்றியாக வேண்டிய தேவையை உணர்ந்தவர் புரட்சிக் கவிஞர்' (ப52)) எனறு ஆசிரியர் கருதுகிறார்.

`மனித நேயத்தில் உலகப் பொதுமை' என்னும் பகுதியில், `உயர்ந்த மனித நேயத்தின் எல்லைக்கல்லாக விளங்கும் பொதுவுடைமைக் கொள்கையை நிறைவேற்ற, `இது எனது' என்னும் தனி உடைமைக் கொடுமையைத் தீர்த்தாக வேண்டும்' (ப79) என்று ஆணித்தரமாகக் கூறுகிறார். தனி மனித இருளைப் போக்கித் தனி உரிமை உணர்வுகளைத் தகர்த்து `உலகம் உண்ண உண்ணவும், உடுக்க உடுக்கவும்' வேண்டுகின்ற பாரதிதாசனின் எண்ண ஓட்டம்-மனிதநேயம், உலகின் சொத்தாகி விடுகின்றது (ப104) என்பதைப் பல சான்றாதாரங்கள் காட்டி நிறுவுகிறார்.

மனித இன வளர்ச்சியின் ஊற்றுக்கண்கள் - மனித நேயத்தின் உயரிய வெளிப்பாடுகள் எனக் கருதப்படும் பகுத்தறிவும் பொதுஉடைமைக்கோட்பாடும் மக்கள் வாழ்வில் மாற்றத்தைக் கொணரவல்ல கருவிகள் எனப் பாவேந்தரால் வற்புறுத்தப்பட்ட பாங்கினை `உழைப்பாளர் விடுதலை' பகுதியில் அலசுகிறார்.

அச்சமும் மடமையும் இல்லாத பெண்கள்
அழகிய தமிழ்நாட்டின் கண்கள்

என்று பாவேந்தர் கருதினார். இதனால்தான் பெண் விடுதலை வேண்டி அவர் புரட்சிக் குரல் எழுப்பினர். கண்ணால் வழியைக் கண்டு, காலால் முன்னேற முடிவது போல, பெண்களாலும் முன்னேறக் கூடும் என்று அவர் உறுதியாகக் கருதினார். தம் கவிதைகளில் பல்வேறு நிலைகளிலும் பெண்ணை உயர்வாகவே படைத்து, பெண்கல்வி, பெண்விடுதலை பற்றி வற்புறுத்தியவர் பாவேந்தர் (ப255) என்பதை மிக அழகாக நிறுவுகிறார் ஆசிரியர்.

'புரட்சிக் கவிஞர் காட்டும் ஒழுக்கவியலானது வெறும் வறட்டுத் தன்மை கொண்ட அறிவுரை அன்று. அது மனிதநேயத்தின் செயல்வடிவம்' (293) என்பதை 'மனிதநேயமும் ஒழுக்கவியலும்' எனும் பகுதியில் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

நூல் முழுவதும் பிறநாட்டு அரசியல் தலைவர்கள் - அறிஞர் தம் கருத்துக்களோடு பெரியார் ஈ.வெராவின் கருத்துக்களும் பெரிதும் பயன்பட்டுள்ளன. தாம் கூற வந்த கருத்துக்குப் பக்கபலமாகப் பெரியார் ஈ.வெ.ராவின் கருத்துக்களை ஆய்வாளர் பெருமளவில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். மனிதநேயம் தொடர்பாகப் பல்வேறு செய்திகளையும் திறம்படத் தொகுத்து நூலில் சேர்த்திருப்பது ஆய்வாளர்தம் முயற்சிக்கும் உழைப்புக்கும் எடுத்துக்காட்டாயிருக்கின்றன.

சொல்லுந் திறன், கருத்துக்கு வலிமை சேர்க்கும் சான்றுகள், சீரான மொழி நடை, ஆணித்தரமாகக் கருத்தை நிறுவும் போக்கு ஆகியவற்றால் இந்நூல் சிறந்து விளங்குகிறது.

பாவேந்தர் பாரதிதாசன் பற்றிய ஆய்வுகளில் இந்நூல் சிறப்பிடம் பெறுகிறது. நூலுக்கான அட்டைப்படம் மனதை ஈர்க்கும் வகையில் சிறப்பாக அமைந்திருப்பது மேலும் சிறப்புக்குரியது.

மனித நேயக் கோட்பாட்டிற்கு இலக்கிய வடிவம் கொடுத்த பிற பாவலர்களுடன் பாவேந்தரை ஒப்பிட்டு ஆராயலாம் எனும் ஆய்வாளரின் பரிந்துரை ஏற்புடைத்தே. அத்தகைய ஆய்வுக்கு இந்நூல் அடித்தளம் அமைத்திருக்கிறது என்பது உண்மை.

ந. கடிகாசலம்.

## 15. பாரதிதாசனின் இலக்கியப் பெண்கள்,

சரளா ராசகோபாலன், ஒளிப் பதிப்பகம்,
சென்னை18, 1990, 288, ரூ.32

"பாரதிதாசனின் இலக்கியப் பெண்கள் என்ற இந்த நூல், அவர் படைத்த பெண் பாத்திரங்களைத் தனித்தனியாக அறிவித்துச் சிறப்பு செய்கிறது" (ப. 13) என்று நூலின் நோக்கத்தை என்னுரையில் வெளிப்படுத்துகிறார் ஆசிரியர்.

பாரதிதாசன் படைத்த பெண் பாத்திரங்களை, முதன்மைப் பாத்திரங்கள், துணைப் பாத்திரங்கள், நாடகப் பாத்திரங்கள் எனப் பகுத்து கொண்டு ஆசிரியர் நூலை உருவாக்கியிருக்கிறார். 16 முதன்மைப் பாத்திரங்கள், 7 துணைப் பாத்திரங்கள், 6 நாடகப் பாத்திரங்கள் என நூலில் காட்டியுள்ளார்.

ஷேக்ஸ்பியருக்குத் தலைவர்கள் இல்லை; தலைவியரே உள்ளனர் என்ற திறனாய்வாளர் கூற்று, பாவேந்தர் படைத்திட்ட கதைத் தலைவியருக்கும் மிகவும் பொருந்தும் (ப. 19) என்பது நூலாசிரியரின் கருத்தாகும். பெண் பாத்திரங்களுக்குப் பாரதிதாசன் பெயரிட்ட அடிப்படையையும்; கொள்கைப் பாத்திரங்களாக அவர்கள் விளங்குவதையும் ஆசிரியர் சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளார்.

முதன்மைப் பாத்திரங்களுக்கு முதன்மை கொடுத்து விரிவாகப் பேசுகிறார் ஆசிரியர். புரட்சிக்கவியின் அமுதவல்லி தலைவனிடம் நேராகத் தன் காதலைக் கூறிப் புரட்சி செய்கிறாள். "அமுதவல்லி அழகின் திருவுருவம்; காதலின் உறைவிடம்; கவிதையின் இருப்பிடம்; வாதம் செய்து காதலனைக் காத்த புரட்சியின் எழுச்சி; குடியாட்சி மலர்வித்த பொதுவுடைமை வித்து; பெண்மையில் காதல் உறுதியை விளக்குவதற்கென்றே படைக்கப்பட்ட பாத்திரம் எனலாம்" என்று ஆசிரியர் முடிவாகக் கூறுகிறார்.

இதுபோலவே ஏனைய 15 முதன்மைப் பாத்திரங்களையும் பல்வேறு கோணங்களில் ஆசிரியர் படம்பிடித்துக் காட்டுகிறார். ஏற்ற இடங்களில் பிற நாட்டு அறிஞர்தம் கருத்துகளையும் கூறிச் செல்லும் பாங்கு சிறப்புடைத்து. எடுத்துக்காட்டாக, "ஒரு பெண்ணுக்கு கல்வி கற்பிப்பது என்பது ஒரு சிறைச் சாலையைக் குறைப்பதற்கு ஏதுவாகும் என்று பிரெஞ்சுப் பேராசிரியர் ஒருவர் கூறியுள்ளார் " (ப. 211) என்பதைச் சுட்டலாம்.

கடல் மேல் குமிழிகள் எனும் கதைப்பாடலில் வரும் பொன்னி, "துணைப்பாத்திரமாயினும் மிகச் சிறந்த படைப்பாகும் ...புரட்சி உள்ளத்தை உடைய இவள் திராவிடக் கழகக் கொள்கைகளுக்கு வலிவு ஊட்டினாள்" (ப. 243) என ஆசிரியர் தெரிவிக்கிறார்.

இரணியன் அல்லது இணையற்ற வீரன் எனும் நாடகத்தில் இடம்பெறும் சித்ரபானு, "ஆரியர்கள் உயர்வதற்காக - தமிழர்களை அழிப்பதற்காக – அடுக்கடுக்காகச் சூழ்ச்சிகளை உருவாக்கிய முரண்பட்ட பாத்திரம் இப்படைப்பு. தமிழர்கள் இவளைப் போன்ற பெண்களின் சூழ்ச்சி வலையில் சிக்கக் கூடாது என்று அறிவுறுத்துவதற்காகப் படைக்கப்பட்ட பாவேந்தரின் கொள்கை விளக்கப் பாத்திரம் என்று கூறலாம்" (ப. 272) என்பது ஆசிரியரின் துணிவு. இதுபோன்று முத்துநகை (கழைக் கூத்தியின் காதல் ) யையும் தன் கொள்கை வார்ப்பாகப் பாரதிதாசன் படைத்துள்ளார் (ப. 286) என்கிறார் ஆசிரியர்.

மொத்தத்தில், "பாரதிதாசனாரின் இலக்கியப் பெண்கள் மிகவும் சிறந்தவர்கள். ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம் என்று சொல்லும் நிலையில் உள்ளவர்கள். சில நேரங்களில் ஆடவரினும் அறிவுடையவராக – அறிவுரை கூறுபவராக – அவர்கள் உள்ளனர் ....." என்று நூலாசிரியர் துணிந்து நிறுவியிருக்கிறார்.

பாரதிதாசன் நூற்றாண்டில் வெளிவந்த நூல்களில் இந்நூலுக்குத் தனியிடம் உண்டு. பாரதிதாசனின் இலக்கியப் பெண்களைப் பற்றிய முழுமையான முதன்மையான விரிவான விளக்கமான நூலாக இது திகழ்கிறது.

ந.கடிகாசலம்.

## 16. பாரதியாரும் பாவேந்தரும்

டி.என்.சுகி சுப்பிரமணியன், கதிர் வெளியீடு,
சென்னை 53, 1990, 64, ரூ.7.50

மனிதன், காணும் பொருளை வேறொரு பொருளுடன் ஒப்பிட்டுக் காணும் இயல்புடையவன். இந்தப் போக்குதான் இலக்கியத்துறையில் பல புதிய கோட்பாடுகளை உருவாக்கியது. ஒருமொழி இலக்கியம், இருமொழி இலக்கியம், உலக இலக்கியம் என மூன்று பகுப்பாக இவ்வொப்பீடு நடைபெறக் காணலாம். அந்த வகையில் `பாரதியாரும் பாவேந்தரும்' என்ற இந்நூல் ஒரு மொழியில் தோன்றிய சமகாலக் கவிஞர் இருவரை ஒப்பிட்டுக் காண்கிறது. பாட்டுக்கொரு புலவன் பாரதியை ஆங்கிலக் கவிஞர்களான வால்ட் விட்மன், ஷெல்லி முதலானவருடன் ஒப்பிட்டுப் பல புதிய உண்மைகளை வெளியுலகிற்குத் தெரியப்படுத்தினர். அதே போல் பாவேந்தரையும் பிறமொழிக் கவிஞருடன் ஒப்பிட்டுள்ளனர். பாவேந்தர் ஒப்பீட்டு ஆய்வுகள் போதிய அளவிற்கு வரவில்லை. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இம்முயற்சியில் `பாரதிதாசன்' என்ற ஒப்பீட்டு நூலை அவரது நூற்றாண்டு நினைவாக வெளியிட்டது. பாரதியாரையும் பாரதிதாசனையும் ஒப்பிட்டுப் பல நூல்கள் வெளிவந்துள்ள போதிலும் `பாரதியாரும் பாவேந்தரும்' எனும் இந்நூல் பாவேந்தரின் நூற்றாண்டு நினைவாக வெளிவருவது வரவேற்கத்தக்கது.

பாரதி, பாவேந்தர் ஆகியோர்தம் கருத்துக்களைக் கொண்டு பல சிறுதலைப்புகளில் ஆசிரியர் விளக்குகிறார். பாரதி, பாரதிதாசன் கருத்துக்கள் ஒரு சில இடங்களில் மட்டும் இருந்தாலும் ஆசிரியர் இவர்களின் கருத்துக்களை உலகுக்குத் தெரிவிக்கும் வகையில் விளக்கியுள்ளார். விமர்சனம் எவ்வளவு தேவை. சிறந்த விமர்சகன் யார் ? விமர்சகன் எந்த நிலையில் இருந்து விமர்சனம் செய்யவேண்டும் என்பதைக் கூறுகிறார்.

"விமர்சகனுக்கு நாக்கு சுத்தமாக இருக்க வேண்டும்; கரும்பு கசக்கக் கூடாது; பாகல் இனிக்கக் கூடாது; இவர்கள் மனக்கண்ணில் மஞ்சள் காமாலை படர்ந்திருந்தால் எல்லாமே மஞ்சளாகவே தோன்றும்" என்று, விமர்சகர் அமைய வேண்டும் முறையைத் மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

இன்றைய பாரதி பக்தர்களைப் பற்றியும் கூறுகின்றார். பாரதி அந்தணர் குலத்தைச் சார்ந்தவராக இருந்தும், அக்குலத்தில் காணப்படும் குறைகளைச் சுட்டிக் காட்டிப் பாடியுள்ளார். என்றும் இவற்றிலிருந்து பாரதியின் பக்தர்கள் எவ்வாறு விலகிக்காணப்படுகிறார்கள்; பாரதிதாசன் கருத்துக்கும் பாரதி பக்தர்கள் எவ்வாறு வேறுபடுகின்றனர் என்றும் விளக்குகிறார். அந்தணரை இராவணனுக்கு ஒப்பிட்டுக் கூறுகின்றார்.

மக்களை சாதி, மத அடிப்படையினின்று மூன்று வகையாகப் பிரிக்கின்றார்:

1 பணக்காரர் மோகம் பணத்தின் மீது.

2. நடுத்தர வகுப்பினர் மோகம் மட்டரக கலைகள் வெளியீட்டின் மீது.

3. கீழ்த்தர வகுப்பைச் சார்ந்தோர் மோகம் முரட்டுத்தனம் முட்டாள் தனத்தின் மீது.

"பாரதியார் பாடல்களை மொழிபெயர்த்தாலும், கருத்தைச் சொன்னாலும் பாரதம் முழுமையும் வரவேற்கும்; ஆனால் பாரதிதாசன் கருத்தைச் சொன்னால் அந்த மொழிப்பகுதி மக்கள் மட்டுமே வரவேற்பார்கள்." என்று பாவேந்தருக்கும் பாரதிக்கும் உள்ள வேற்றுமைகளையும் ஆசிரியர் இந்நூலில் விளக்குகிறார். 'இளித்தவாயர்களா தமிழர்கள்' என்ற தலைப்பில் இசையில் மற்ற சங்கீதங்கள் ஓங்கி நிற்பதையும், ஓசை, ஒலி போன்றவை தமிழுக்கும் உண்டென்று பாரதிதாசன் பாடல்களை மேற்கோள் காட்டித் தெரிவிக்கிறார். தமிழகத்தின் இரு கண்கள் என்ற நிலையில் பாரதியாரையும் பாவேந்தரையும் ஒன்று படுத்தி விரிவான விளக்கங்கள் கொடுத்துள்ளார்; ஆனால் இருவரையும் ஒப்பிட்டுக் காணும் பகுதி குறைவாகவும் மற்ற விளக்கங்கள் அதிகமாகவும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. அவற்றைக் குறைத்து, கவிஞர்களின் கவித்துவத்தை ஒப்பிட்டு நோக்கி இன்னும் விரிவாகக் கூறியிருக்கலாம்.

மே.ஜான்சன்

## 17. பாரதியும் பாரதிதாசனும்

சி.பாலசுப்பிரமணியன், நறுமலர்ப் பதிப்பகம்,
சென்னை - 29, 1990, 251, ரூ.30.

சி.பா. என்று தமிழ் வட்டத்தில் அழைக்கப்படும் டாக்டர் சி.பாலசுப்பிரமணியம் எழுதியுள்ள பாரதியும் பாரதிதாசனும் என்ற நூல் பாரதிதாசன் நூற்றாண்டில் வெளியாகியுள்ளது.

'பாரதியும் பாரதிதாசனும்', 'வள்ளுவர் வழியில் பாரதி', தமிழ் மொழி தமிழ் நாடு பற்றிப் பாரதியார்', 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்', 'பாரதியாரின் தேசிய கீதங்கள்', 'பாரதி கண்ட தேசிய ஒருமைப்பாடு', 'பாரதியார் கண்ட சமுதாயம்', 'பாரதியார் ஒரு மக்கள் கவிஞர் ', 'பாரதியின் தொலை நோக்கு','பாவேந்தர் பாரதிதாசனாரின் 'அழகின் சிறிப்பு'', 'பாவேந்தர் பாரதிதாசனின் 'குடும்ப விளக்கு', 'குடும்ப விளக்கு தரும் ஒளி தங்கம்', 'புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் கண்ட பெண்மை, 'கவிஞர் மன்னர் மன்னனின் 'கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல் – நூல் அறிமுகம்' என்ற பதினைந்து கட்டுரைகளைக் கொண்டுள்ளன. மேற்கூறிய கட்டுரைகள் நான்கு வகையான தன்மைகளைக் கொண்டுள்ளன. அவையாவன:

1. பாரதியும் பாரதிதாசனும் என்ற ஒப்பீட்டுக் கட்டுரை
2. பாரதி தொடர்பான கட்டுரைகள்
3. பாரதிதாசன் தொடர்பான கட்டுரைகள்
4. மன்னர் மன்னனின் நூல் அறிமுகம்.

'பாரதியும் பாரதிதாசனும்' என்ற முதல் கட்டுரையில் பாரதியையும் பாரதிதாசனையும் ஒப்பிட்டுள்ளார். பழைய இலக்கிய ஆசிரியர் பற்றிய சிந்தனை, தமிழர் பற்று, மொழிப் பற்று, பெண்ணுரிமை, இயற்கை போன்ற பிரிவுகளில் ஒப்பிடப்பட்டுள்ளது. பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் ஏற்பட்ட கவிதை உறவை விளக்கியுள்ளார். இக் கட்டுரைத் தலைப்பு மட்டும் தான் நூலின்

தலைப்போடு தொடர்புடையது; அல்லது இக் கட்டுரையின் தலைப்பைத் தான் நூலின் தலைப்பாக அமைத்துள்ளார்.

பாரதியார் படைப்புகள் பற்றிய ஆய்வு எட்டுக் கட்டுரைகளில் இடம் பெற்றுள்ளன. பாரதியார் பாடல்களைத் திருக்குறளோடு ஒப்பிட்டு விளக்குகின்றார். திருக்குறளைப் பற்றியும் திருவள்ளுவரைப் பற்றியும் பாரதியார் கொண்டுள்ள எண்ணத்தை மிக விரிவாக விளக்குகின்றார். பாரதியார் வாழ்ந்த காலம் ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டுக் கிடந்த சூழ்நிலை. இவ்வடிமைச் சமூகத்தில் மக்களை விழிப்படையச் செய்ய வேண்டியது, சமூகம் பற்றிய நல்லெண்ணம் கொண்டோரின் கடமையாக இருந்தது. அந்தச் சூழ்நிலையில் மக்களுக்கு நாட்டைப் பற்றியும் மொழியைப் பற்றியும் உணர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதனை அவரவர் தம்திறன் வழிச் செய்தனர். பாரதி அப்பணியைக் கவிதை வழிச் செயல்படுத்தினார். பாரதியாரின் வாழ்வுப் பின்புலம், கவி புனையும் திறன், அவற்றின் வழி வெளிப்படுகின்ற கருத்து பாரதியாரின் அடிமனத்தை எடுத்துரைக்கின்றது. நூலில் அறவழி, தேசியம், மக்கள், தொலை நோக்கு போன்ற கூறுகளை முதன்மை படுத்துகின்றார் ஆசிரியர்.

பாவேந்தர் படைப்புகள் பற்றிய ஆய்வு ஐந்து கட்டுரைகளில் இடம் பெற்றுள்ளன. அவரின் படைப்புகளில் குடும்ப விளக்கு, அழகின் சிரிப்பு, தமிழியக்கம், கவிதைத் தொகுப்புகள் ஆகியவை குறிப்பிடத் தக்கவை. அவற்றுள் `அழகின் சிரிப்பு', `குடும்ப விளக்கு' `பாரதிதாசன் கவிதைகள்' என்பன மிக விரிவாகவும் ஆழமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பாரதிதாசன் படைப்புகளில் பயன்படுத்திய கருத்து, வெளிப்பாட்டு உத்தி போன்றவற்றை விவரித்துள்ளார். `குடும்ப விளக்கு', `அழகின் சிரிப்பு' ஆகிய இரண்டு நூல்களைக் குறித்து மூன்று கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இயற்கை தொடர்பாகவும் பெண்மை தொடர்பாகவும் பொதுவாக இரண்டு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

பாவேந்தரின் இளமை வாழ்க்கை, பணி, அஞ்சா நெஞ்சம், தமிழ்ப் பற்றும் நாட்டுப் பற்றும், பாரதி பற்று, திராவிட இயக்கப் பங்கு, சமுதாயத் தேவை ஆகிய செய்திகளைக் `கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல்' என்ற நூலை அறிமுகப் படுத்துகின்ற பாங்கில் வெளிப்படுத்துகின்றார். இந்நூல், பாரதி பாரதிதாசன் ஆகிய இருவருடையதன்று. அவ்வாறிருக்க, பாரதியும் பாரதிதாசனும் என்ற தலைப்பு நூலில் எப்படி இடம் பெறும் என்ற வினா எழலாம். அதற்குப் பதில் கூற வேண்டின், அந்நூல் பாரதிதாசனை மையமிட்டது என்பதே பதிலாக அமைகின்றது. அந்நூலை அறிமுகப் படுத்துகின்றதன் வழி பாரதிதாசனின் உண்மையை அறிய ஏதுவாக அமையும் என்று இயைபு சுட்டலாம்.

மேலே காட்டிய கருத்துகளைக் கொண்டு நூலை நோக்கினால். பாரதியும் பாரதிதாசனும் என்ற கட்டுரையைத் தவிர பிற, பலவேளைகளில் ஆசிரியர் பாரதி, பாரதிதாசன் தொடர்பாக எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாக அமைகின்றது.

ஆசிரியர் முன்னுரையில் கூறியது கூறல் குறித்துக் கூறியுள்ளார் என்றாலும் அது மிகுந்து காணப்படுகின்றது. நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள் ஒரு நேரத்தில் எழுதப்படாமல் பல சூழலில் வேறுபட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும். வேறுபட்ட காலத்தில் எழுதியது கூறியது கூறல் மிகுந்துள்ளமைக்குக் காரணமாக அமைகின்றது.

"ஒரு கவிஞன் பிறக்கிறான்; உருவாக்கப்படுவதில்லை" என்று மேற்கோள்காட்டி, `பாரதி – ஒரு மக்கள் கவிஞர்' என்ற கட்டுரையைத் தொடங்குகின்றார். பாரதிதாசனின் வாழ்க்கையை நோக்கினால் அவரின் பாடுபொருள் மாற்றம், மொழி நடை மாற்றம் போன்றவை அவர் சூழ்நிலையினால் ஏற்பட்டதேயன்றி அவர் மரபுவழிப் பட்டதல்ல. மேலும், பாரதியார், நாமக்கல் கவிஞர், பாரதிதாசன் போன்ற கவிஞர் ஒரு காலத்தைச் சார்ந்தவர் தாம் என்றாலும் அவர்களின் படைப்புகளின் போக்கு, பாடுபொருள் மாறுபட்டும் வேறுபட்டும் திகழ்வதை அறிய முடிகின்றது. அம் மாற்றத்திற்கு அவர்களின் சூழ்நிலைதான் காரணமேயன்றி அவர்களின் மரபியல் காரணமன்று என்பது இங்குச் சுட்டத்தக்கது.

பாரதியையும் பாரதிதாசனையும் காட்டுவதன் வழி புதுமையான சமூகத்தையும் அவர்களைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனையையும் தெளிவுபடுத்துகின்றார். பாரதிதாசன் நூற்றாண்டு விழாவை அணி செய்யும் நூல்களில் இதுவும் ஒன்றாகத் திகழ்கின்றது.

திமு.கந்தசாமி

## 18. பாவேந்தர் கனவு

மு.தமிழ்க்குடிமகன், திருமகள் நிலையம்,
சென்னை17, 1990, 196, ரூ.20.

பாவேந்தர் நூற்றாண்டிலே அவருக்கு ஒரு நூல் தர வேண்டும் என்ற கடமை உணர்வோடு மட்டுமில்லாமல், தனித்தமிழ்க் கொள்கையோடும் இந்நூலைத் தந்துள்ளார் முனைவர் மு. தமிழ்க்குடிமகன். இந்நூல் உருவாக இன்னொரு காரணமாக அமைந்த தினமணி நாளிதழையும் இங்குக் குறிப்பிட்டாக வேண்டும். "பாவேந்தர் கனவு" என்ற இந்நூல் அவரின் தமிழ்ப்பற்றை உணர்த்த, அதனை மற்றவர்கள் பின்பற்ற வெளிவந்துள்ளது. தினமணியில் "பெயர்ப் பலகைகளில் தமிழ்' என்ற தமிழ்க்குடிமகனின் கட்டுரை வெளியானதையும் அதனைத் தொடர்ந்து வாசகர் கருத்து மோதல் நடைபெற்றதையும் மையமிட்டு இந்நூல் செல்வதைக் காணமுடிகின்றது. பாவேந்தரின் கனவுகளில் ஒன்றான "அறிவிப்புப் பலகையெல்லாம் அருந்தமிழ்ச் சொல் ஆக்குவதேயன்றி, அச்சொல் குறையற்ற தொடராகக் குற்றமற்ற சொல்லாக அமையுமாயின் மறுவற்றுத்திகழாளோசெந்தமிழ்த்தாய்" என்பதை நனவாக்கத் தூண்டுவதே இந்நூலின் நோக்கம் (ப. 12) என்று சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருக்கிறார்.

பாவேந்தரின் கனவைப் பற்றி நூலாசிரியர் தெளிவாகவே சுட்டிகாட்டியுள்ளார். "அவரது தமிழியக்கம்' நூல்தான் அவரது கனவின் வெளிப்பாடு; தமிழுக்கு ஆக்கம் சேர்க்கும் திட்ட அறிக்கை; அந்த நூலிலேயே அனைத்துக் கட்டளைகளும் அடங்கியுள்ளன. "(ப. 15) என்ற இவரது கூற்று பாவேந்தரின் கனவைத் துல்லியமாக எடுத்துக்காட்டும்.

பாவேந்தரின் கனவு வணிகப் பெருமக்களை முன்னிறுத்தியே செல்கிறது. சங்கம் வைத்து, தமிழ் வளர்த்த மதுரையில், கடைகளில் தமிழ் தவிர மற்ற மொழிகள் இருப்பதை வேதனையோடு குறிப்பிடுகின்றார் ஆசிரியர். 1974 –இல் மதுரையில் "தமிழ் காக்கும் மாணவர் மன்றம்" பெயர்ப் பலகைகளில் தமிழ் கொண்டுவர முயற்சி மேற்கொண்டதையும், நெருக்கடிக் *(MISA)* காலத்தில் அம்முயற்சி தளர்ந்து போனதையும் குறிப்பிடுகின்றார். எனினும் இம்முயற்சியால் *'Regal Talkies'* என்பது `ரீகல் திரைஅரங்கம்' என்றும் *'Vijaya Press'* என்பது `விசயா அச்சகம்' என்றும் `நாராயணா காபி ஒர்க்ஸ்' என்பது `நாராயணா காப்பித்தூள் விற்பனையகம்'

என்றும் சிலர் தங்கள் கடைகளின் பெயர்களை மாற்றியமைத்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தியதை நன்றியோடு நினைவு கூர்கிறார்.

தமிழ் என்பது & சன்ஸ், & பிரதர்ஸ் என்று தமிழ் எழுத்துகளால் எழுதுவதல்ல – தனித்தமிழ்ச் சொற்களைப் பெய்ய வேண்டும் என்று கூறுகின்றார். தமிழ் எழுத்தால் எழுதுவதால் தமிழாகிவிடாது. ஒவ்வொரு மொழிக்கும் உள்ள தனி ஒலி அமைப்புகளை விளக்கி, பிறமொழிச் சொற்களை எப்படித் தமிழில் எழுத வேண்டும் என்று நன்கு தெளிவாக்கியுள்ளார். அத்துடன் விளம்பரப் பலகைகளிலும் விளம்பரங்களிலும் காணப்படும் ஆங்கிலச் சொற்களுக்கு நேரான தமிழ்ச் சொற்களைத் தந்து அவற்றைப் பயன்படுத்தினால் தமிழ் வளம் பெறுமே என்கிறார். அண்டை மாநிலங்களில், வடநாட்டில் அவரவர் மொழியில் பெயர்ப்பலகைகள் வைத்துள்ளனர். ஆனால் தமிழகத்தில் மட்டும் தான் அதற்கு எதிரான ஒரு போக்குக் காணப்படுகின்றது. இதனை நீக்கத் தமிழக அரசு கொண்டு வந்த ஆணையையும், கலைஞர் மு.கருணாநிதி பேசிய உரையையும் அப்படியே இந்நூலில் தந்துள்ளார்.

இந்நூலாசிரியர் தினமணியில் எழுதிய "பெயர்ப்பலகைகளில் தமிழ் –ஒரு விளக்கம்" என்ற கட்டுரையையும் அதற்கு வாசகர் எழுதிய மறுப்பு மடல்கள், ஏற்பு மடல்கள் இந்நூலில் அப்படியே தந்து ஒவ்வொரு மடலுக்கும் தெளிவான விளக்கங்களைத் தந்துள்ளார்.

சட்டச்சிக்கல்கள், பொருளாதாரச் சிக்கல்கள், மனிதரின் நம்பிக்கை, எண்கணித சோதிடத்தில் வணிகருக்கு உள்ள பற்று, சில பெயர்களின் மேல் உள்ள தணியாத விழைவு இவை காரணமாக விளம்பரப் பலகைகளில் தனித்தமிழ் எழுத `வணிகர் விழைவதில்லை. இதற்கான காரணங்களை நுணுகி ஆய்ந்து செயல்படுத்தும் நெறிமுறைகளை ஒவ்வொரு மறுப்பு மடல்களுக்கும் தமிழ்க்குடிமகன் தந்துள்ள விளக்கம் சிறப்பானதாகவும் செயல்படுத்தக் கூடியதாகவும் இருக்கின்றதை உரை முடிகின்றது. `மனம் இருந்தால் மார்க்கம் (வழி) உண்டு' என்ற பழமொழிதான் இந்நூலினைப் படிக்கும் பொழுது நினைவிற்கு வருகின்றது. இப்போது உள்ள விளம்பரப் பலகைகளில் 29– ஐ எடுத்துக்காட்டி அதற்கான மொழிமாற்றத்தினையும், பெயர்ப்பலகைகளில் நல்ல தமிழ் இடம் பெறுவதற்கான முயற்சிகளாக, உலகத் தமிழ்க் கழகம் முதலான 36அமைப்புகளின் பட்டியலையும் இந்நூலில் தந்துள்ளார். `பேன் தெரியும். *Fan* –தெரியும். பேன் பெண்கள் தலையில், அதை எடுத்து வீசினால் நாறுமே தவிரக் காற்று வராது. ஆனால் ``Fan' மின்விசிறி காற்றைத் தரும். `பத்மினி மின்விசிறி' என்றெழுதலாம். அதை விட்டுவிட்டுப் `பத்மினிப் பேன்கள்' என்று எழுதினால் பத்மினி தலையில் உள்ள பேன்களா? (ப. 177) என்று நகைச்சுவை ததும்பக்கேள்வி கேட்கிறார். ஒலிபெயர்ப்பு செய்து எழுதிவிடுவதால் வரும் பொருட் சிக்கலுக்கு இது ஒரு நல்ல சான்று. விளம்பரத்தில் காணும் சில கொடுமைகளை எடுத்துக் காட்டி அதைப் போக்க வழிகளையும் சொல்லியிருக்கிறார்.

மு.வ. வின் தனித்தமிழ்க் கருத்தினைக் கூறி நடைமுறையில் இருக்கும் ஆங்கிலச் சொற்களுக்கு நல்ல தமிழாக்கம் தந்து நூலினை முடித்துள்ளார். நூலின் இறுதியில் சிங்கப்பூரில் உள்ள ஒரு நகைக் கடை விளம்பரத்தையும் இணைத்துள்ளார். "அணிமணி பொற்சாலை – *AIMANI PORCHALAI*" என்று அதில் உள்ளது. வெளிநாட்டில் வாழும் தமிழருக்கு இருக்கும் தமிழ் உணர்வு கூடத் தமிழக மக்களுக்கு இல்லாமை வருந்தற்குரிய செய்தி. அந்த உணர்வினைக் கொண்டுவர, பாவேந்தரின் கனவு நிறைவேறிட வழி வகுக்கும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

அ.லோ.பழனிசாமி.

## 19. பாவேந்தர் நோக்கில்

சு. சுப்பிரமணியன், நன்மொழிப் பதிப்பகம்.
புதுச்சேரி – 1. 1990, 128, ரூ.15.

சமுதாய நிகழ்வுகளைச் சாதாரண மனிதன் காண்பதற்கும் ஒரு கவிஞன் காண்பதற்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. உணர்ந்ததைச் சொல்லவும், குறைகள் இருப்பின் அவற்றைத் தனது படைப்புகள் வழிச் சுட்டிக் காட்டி மக்களை நல்வழிப் படுத்தவும் உண்மையான கவிஞன் முயற்சி மேற்கொள்கின்றான். இத்தகைய கவிஞர்களின் வரிசையில் பாரதிதாசன் சிறந்து விளங்குகின்றார். அவரது நோக்கில் இத்தமிழ்ச் சமுதாயம் எப்படி இருந்தது என்று கூற எழுந்துள்ளது இந்நூல்.

பாவேந்தர் தம் பாடல்களைக் கொண்டு மொழி, இனம், நாடு, குடும்பம், பெண்கள், சமுதாயம், சமயம், இயற்கை என எட்டுத் தலைப்புகளில் பாவேந்தரின் நோக்கினை எடுத்துக்கூறியிருக்கின்றார் ஆசிரியர்.

பாவேந்தரின் நோக்கில் தமிழ் மொழி எப்படியெல்லாம் திகழ்ந்தது என்பதை `மொழி' என்னும் முதல் கட்டுரையில் கூறியுள்ளார். தமிழை இகழ்ந்தவனைத் தாய்தடுத்தாலும் விடமாட்டேன், தமிழ் வாழ்ந்தால் தமிழர் வாழ்வர், தமிழ் வீழ்ந்தால் தமிழர் வீழ்வர், மங்கை தரும் சுகமும் மாத்தமிழுக்கு ஈடில்லை என்றெல்லாம் பாடிய பாவேந்தரை அவரது மொழிப்பற்றை இக்கட்டுரை எளிமையாக எடுத்துரைக்கின்றது. ஓர் இனம் மேன்மையடைவது அதன் ஒற்றுமையால்தான் என்று உணர்ந்தவர் பாவேந்தர். சாதி மத வேறுபாடுகளால் தமிழர்களுக்குள் இருக்கும் வேற்றுமை நீக்கப் பாடிய பாடல்கள் `இனம்' என்னும் கட்டுரையில் கூறப்பட்டுள்ளன.

பாவேந்தர் நோக்கில் `நாடு' என்ற கட்டுரை சிறப்பாக உள்ளது. பாரதியார் "தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற, தாயென்று கும்பிடடி பாப்பா" என்றார். பாவேந்தர் "எனை ஈன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள், இனம் ஈன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால், தினையளவு நலமேனும் கிடைக்குமென்றால், செத்தொழியும் நாளெனக்குத் திருநாளாகும்" என்றார். பாரதிதாசன் தமிழ்நாட்டைப் பற்றிச் சிறப்பித்துப் பேசுவதால் அவரது நாட்டுப் பற்றினைக் குறைத்து மதிப்பிடுதல் கூடாது (பக்.39-40) என்று பாவேந்தரின் நாட்டுப் பற்று தமிழ்நாட்டுப் பற்றுதான் என்பதைத் தெள்ளத்தெளிவாக ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

குடும்பம் என்ற கட்டுரையில், எது குடும்பம் என்ற கேள்வி கேட்டு சங்க இலக்கியம், திருக்குறள், பாவேந்தர் பாடல்கள் ஆகியவற்றைக் கொண்டு பதிலளித்துள்ளார். குடும்ப விளக்கில் சொல்லப்பட்ட கருத்துகளை இக்கட்டுரையில் எடுத்துத் தந்துள்ளார். பெண் கல்வி, குடும்பக் கட்டுப்பாடு, காதல் வாழ்க்கை, பொதுத் தொண்டின் மேன்மை, விருந்தோம்பல், இல்லறமே நல்லறம், மக்கட்பேறு போன்றவற்றில் பாவேந்தர் கொண்ட எண்ணத்தை அழகாக விளக்கியுள்ளார். `பெண்' என்ற தலைப்பில் பெண்களைப் பற்றிய திரு.வி.க.,மாயூரம் வேதநாயகம் பிள்ளை, பாரதியார் போன்றோர் கருத்துகளைப் பாவேந்தர் பாடல்களுடன் எடுத்துக்காட்டியுள்ளார். திருமண முறையில் பாவேந்தரின் காதல் திருமணம், கலப்புத் திருமணம், புரட்சித் திருமணம் மூன்றை எடுத்துக் கூறுகின்றார். பெண் என்பவள் அறிவின் உறைவிடம். உலகின் அறியாமை ஒழிய பெண்களின் அறிவு வளர வேண்டும். விதவை மறுமணம் போன்ற

கருத்துகளைக் கொண்ட பாடல்களின் வழிப் பாவேந்தரின் பெண் பற்றிய நோக்கினைக் கண்டிருக்கின்றார்.

சமுதாயம்' என்ற கட்டுரையில் பெண்ணடிமை பற்றிப் பேசுகின்றார். பெண்ணடிமை ஒழிய வேண்டும். அப்போதுதான் மண்ணடிமை தீரும். அதற்குப் பெண்கள் துணிவுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். இரு பாலாருக்கும் பொதுவான சிலவற்றை இக்கட்டுரை சிறந்த முறையில் விளக்குகின்றது.

சமய நம்பிக்கையில் பாடல் வாழ்க்கையைத் தொடங்கியவர் பாவேந்தர். பகுத்தறிவு இயக்கத்தின் தொடர்பு அவரது பாதையை மாற்றியது. இதை அனைவரும் அறிவர். இதனை, பாவேந்தர் நோக்கில் `சமயம்' என்ற கட்டுரையில் தெளிவாக்கியுள்ளார். எல்லாச்சமயத்தையும் தான் மறுத்துப் பாடினார் பாவேந்தர் என்கிறார். இறுதியாக அமைந்த `இயற்கை' கட்டுரை பாவேந்தரின் அழகின் சிரிப்பை அலசுகிறது.

பாவேந்தரின் பரந்த நோக்கினை இந்நூல் நன்கு எடுத்துக்காட்டுகின்றது. இந்நூலாசிரியரின் இலக்கியப் புலமை நூலில் நன்கு தெரிகிறது. பாவேந்தர் பாடலைக் கூறும் போதெல்லாம் அத்துடன் தொடர்புடைய பழங்கால இலக்கியக் கருத்துகளையும் முறைப்படிக் கொடுத்து கருத்தினைத் திறம்படச் சொல்லியிருக்கின்றார். சிறிய நூல்தான்; ஆனால் பனித்துளியில் பகலவனைக் காண்பது போல் இருக்கின்றது.

— அ.லோ.பழனிசாமி.

## 20. பாவேந்தர் படைத்த ஒளியும் இருளும்

இரா.இளங்குமரன், பெங்களூர்த் தமிழ்ச் சங்கம்,
பெங்களூர். 1990, 52, ரூ.5.

பாரதிதாசனின் குடும்ப விளக்கின் முதற்பகுதியை ஒளியாகவும் இருண்ட வீட்டை இருளாகவும் கொண்டு ஒப்புமை நோக்கில் எழுந்துள்ளது இந்நூல். வெளியீட்டாளரின் இல்லத் திருமணத்திற்கு வருகை தருவோர்க்குரிய அன்பளிப்பாக அமைந்தமையால் எளிமையாக அமைந்துள்ளது.

முன்னோட்டம், ஒளியில் ஒரு நாள், இருளில் ஒரு நாள், நிறைவு எனப் பகுக்கப்பட்டுள்ள நூலில், இடைப்பகுதிகள் விரிவான இடத்தைப் பெற்றுள்ளன. பாரதிதாசனின் குடும்ப விளக்கு இருண்ட வீடு ஆகிய நூல்களின் பாடல் வரிகள் உரைநடைவடிவத்தை இவற்றில் பெற்றுள்ளன.

`கல்வியால் ஓங்கிய வளவயல் காட்சியைக் கண்முன் காட்டுவது குடும்ப விளக்கு ! கல்வியறிவில்லாக் களர்நிலவிளைவைத் தெள்ளத்தெளியக் காட்டுவது, இருண்ட வீடு' என முன்னோட்டத்தில் மொழியும் ஆசிரியர் நிறைவுரையில் அதனை இரு நூல்களின் நிகழ்ச்சி ஒப்பீட்டின் வழித் தெளிவாக்குகிறார். பாவேந்தரின் கல்விக் காதல் வெளிப்பாடே குடும்ப விளக்கும், இருண்ட வீடும் எனல்தகும் என்பது ஆசிரியர் கருத்து.

எழுத்தறிவித்தலாகச் சிறப்புறும் இவ்வாண்டில் கல்வியைச் சிறப்பித்து நூல் படைத்தல் எனும் நிலையில் இது ஏற்புடைத்தே. ஆயின் பெண்ணுரிமை, பெண்விடுதலை பாடும் பாரதிதாசன்

அதற்கு இலக்கணமாகத் தான் படைத்த குடும்ப விளக்கில், தனக்கு முன்பே எழுந்து எத்துணையுமின்றி இல்லப் பணிகள் ஒன்றுவிடாமல் அனைத்திலும் இடையீட்டின்றி ஈடுபட்டிருந்த மங்கைக்கு உதாவது, கணவன், தான் ஓய்வு கொண்டு திரும்பும் வரையில் தன் பணியினையும் மேற்கொள்ளத் தூண்டுவது எவ்வகையில் பொருந்தும் எனவும் ஆசிரியர் விளக்கம் காட்டியிருக்கலாம்.

—சசிவகாமி.

## 21. பாவேந்தர் படைப்பும் வாழ்க்கையும்

மா.அண்ணாதுரை, பூங்கொடி பதிப்பகம்,
சென்னை – 4, 1990, 130, ரூ.12

நூற்றாண்டு விழாக் காணும் தமிழ்க் கவிஞரின் தமிழ்த் தொண்டினையும், ஒரு சில படைப்புகளின் ஆய்வினையும், வாழ்க்கைக் குறிப்புகளில் சில விளக்கங்களையும் ஒருங்கே தரும் நூலாக இஃதமைகிறது. பாவேந்தரின் உறவினரான நூலாசிரியர் நூலகராக இருப்பினும், அவர் மீது கொண்டுள்ள மிகுதியான ஈடுபாட்டினால் வெளியிட்டுள்ள பல பாவேந்தர் ஆய்வு நூல்களுள் இதுவும் ஒன்று.

பன்னிரு கட்டுரைகளின் அடைவாக அமையும் இந்நூலின் 3 கட்டுரைகள் பாரதிதாசனின் இதழ், இசைத் தொண்டைச் சிறப்பிக்கின்றன. பாரதிதாசன் தமது எழுத்துப்பணிக்கும், சமுதாயப் பணிக்கும் களனாக இதழ்களைப் பற்றியிருந்தார். எனவே புதுவையிலிருந்து தாமே ஓரிதழ் வெளியிட விரும்பினார்; ஆனால் அரசு அலுவலில் இருந்த காரணத்தால் நேரடியாக ஈடுபட இயலவில்லை. எனினும் தளராது தமது நண்பர் ம. நோயெல் என்பவரைப் பொறுப்பாசிரியராக நியமித்து தாம் பின்னின்று பணியாற்றும் படியாக இதழொன்றை 10.11.1930 முதல் தொடங்கினார். தாம் இதற்கு முன்பு நடத்திய கையெழுத்து இதழின் பெயரான 'புதுவை முரசு' என்பதனையே இதற்கும் சூட்டினார்.

கே.எஸ்., நாடோடி, அடுத்த வீட்டுக்காரன், சுயமரியாதைக்காரன், வழிப்போக்கன், கிண்டல்காரன் போன்ற புனை பெயர்களைப் பாரதிதாசன் தம் இதழ் எழுத்துகளுக்குப் பயன்படுத்தியுள்ளார். தமிழாலும் தமிழிசைப் பாடல்கள் தர முடியும் என்பதைத் தம் படைப்புகளால் உறுதிப்படுத்திய பாரதிதாசன், தியாகராசரின் தெலுங்குக் கீர்த்தனங்களை இசைக்கேற்ப மொழிபெயர்த்துள்ளார். அவையும் இந்நூலில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

பாரதிதாசன் படைத்த படைப்புகளில் 13 சிறுகதைகளும் உள. அவை சிறுகதை இலக்கணத்திற்குப் பொருந்தி நிற்பதையும், எழுந்த சூழலையும், நோக்கத்தையும் நூலின் முதற் கட்டுரை விளக்குகிறது. கட்டுரை முடிவில் "வளரும் எழுத்தாளர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து தம் இதழ்களில் சிறுகதைகள் படைக்கப் பெரும்வாய்ப்பினைத் தந்துள்ளார் பாவேந்தர்", எனும் ஆசிரியர், அவ்வெழுத்தாளர் யார் யார் எனப் பெயர் சுட்டியிருப்பின் மேலாய்விற்குத் துணையாகும்.

இலக்கியச் சிந்தனை, மொழி, ஆற்றல், இனவுணர்வு ஊட்டும் பாரதிதாசன் வாழ்வியற் கடிதங்களைப் பெற்றுள்ள அறிஞரிடமிருந்து மீண்டும் பெற்று முறைப்படித் தொகுக்கப்படின்,

பாரதிதாசனின் உண்மை வரலாறு நாட்டு மக்களுக்குக் கிடைக்கலாம் என்று ஆசிரியர் நவின்றிருப்பது உடனடியாகச் செயல்படுத்த வேண்டிய ஒன்றாம். மிகச் சிறந்த கடிதவிலக்கியங்களாக அவற்றைப் போற்றும் ஆசிரியர், தமிழ்ப்பற்றில் ஐயத்திற்கு அப்பாற்பட்ட பாரதிதாசன், தமது மடல் ஏட்டின் முகப்புகளில் ஆங்கிலத்தில் முகவரி யமைத்ததற்கான ஏதுக்களைச் சுட்டியிருக்கலாம்.

காந்தி, பாரதி, திலகர், வ.வே.சு., அரவிந்தர், லாலா லஜபதிராய், வ.உ.சி., செட்டிநாட்டரசர் முத்தையா முதலானவரைப் பற்றிய பாவேந்தர் பாடல்களையும், அழகின் சிரிப்பையும் பிற மூன்று கட்டுரைகளில் சிறப்பித்துள்ளார்.

பாவேந்தரின் வாழ்க்கை வரலாற்றுப் படைப்பிற்குத் துணை நிற்கும் வகையில் ஐயப்பாட்டிற் குரியதாக நின்ற அவரது பிறந்த நாள், தாயார் பெயர் முதலியவற்றைத் தனித்தனிக் கட்டுரைகளில் முறையே 29.4.1891, இலட்சுமி அம்மாள் எனப் பல சான்றுகளுடன் ஐயமற நிறுவியுள்ளார்.

நூலாசிரியர் நூலகராக இருப்பதனால் பாவேந்தரின் நூலகம் பற்றிய எண்ணங்களையும் தமது இறுதிக்கட்டுரையாகத் தொகுத்தளித்துள்ளார். நூலகர் நோக்கில் நின்று அவற்றை விளக்கியிருப்பது சிறப்பாகும். பாரதிதாசன் பற்றிய பல புதிய செய்திகளைத் தமிழுலகிற்குத் தம் உழைப்பால் உறுதிபடத் தந்துள்ள திறம் போற்றற்குரியது. பாரதிதாசன் ஆய்வாளரில் குறிப்பிடத்தக்க சிறப்பிடமும் நூலாசிரியருக்குண்டு.

— ச.சிவகாமி

## 22. பாவேந்தர் பாதை

பாவலர் இலக்கியன், பயோனியர் புக் சர்வீசஸ்,
சென்னை – 5, 1990, 61, ரூ.7

பாட்டாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும் என்றான் பாரதி. அவன் பாதையில் கனகசுப்புரத்தினமாக இருந்தவர் பின்பு பாரதிதாசனாக மாறினார். காலம் அவர் படைத்த பாடல்களைக் கண்டு பாவேந்தர் எனப் பெயர்சுட்டி மகிழ்ந்தது. அவர் பிறந்து நூறாண்டுகள் கழிந்து விட்டன. மகிழ்ச்சியோடு தமிழகம் பாவேந்தர் நூற்றாண்டைச் சிறப்பாகக் கொண்டாடியது. பாவேந்தர் பாடல்களைப் பொதுவுடைமையாக்கிச் சிறப்பித்தது தமிழக அரசு. பாவேந்தர் அவருக்குப் பின் பலரை உருவாக்கிச் சென்றுள்ளார். அதுதான் அவருடைய வெற்றியும் கூட. பாவேந்தரைப் பின்பற்றிப் பாடல்கள் இயற்றி வருவோரில் பாவலர் இலக்கியனும் ஒருவர். இவர் தமது நூலின் தலைப்பைக் கூட "பாவேந்தர் பாதை" என்றே வைத்துள்ளார்.

பாடல் வழியாகவே தமிழில் கலந்த பாரதிதாசனைப் பாடல் வடிவிலேயே சிறப்பித்து இந்நூலைத் தந்துள்ளார். "உயர்வை விளைக்கும்" என்ற தலைப்பு முதல் தமிழ் முரசம் என்ற தலைப்பு ஈறாக இருபத்தியோரு தலைப்புகளில் தம் கவிதையாலே பாரதிதாசனைப் புகழ்கின்றார்.

பாவேந்தர் பல நூல்களை எழுதியிருக்கின்றார். அவரது நூல்களில் எல்லோராலும் அறியப்பட்டதும், சிறப்பு வாய்ந்தவையுமானவற்றை நூலின் முதல் கவிதையிலேயே பட்டியல் இட்டுக் காட்டுகின்றார்

"குடும்ப விளக்கோ வாழ்க்கை விளக்கு !
இடும்பை தீர்க்கும் இருண்ட வீடு,
தமிழை இயக்கும் தமிழ் இயக்கம் தான்;
அமிழ்தைச் சுரக்கும் அழகின் சிரிப்பு
தேனின் அருவி தெளிவை ஊட்டும்
கூனல் நிமிர்த்தும் குறிஞ்சித் திட்டு
பழச்சுளைப் பாவியம் பாண்டியன் பரிசு"

என்று ஒவ்வொரு நூலுக்கும் உள்ள சிறப்பை அழகாகக் கூறியுள்ளார். முதல் கோணல் முற்றும் கோணல் என்பார்களே அப்படியில்லாமல் முதல் கவிதையே உயர்வை விளைக்கும் என்ற தலைப்புடன் பாவேந்தரின் நூல்களைக் கூறுவது பொருத்தமாக இருக்கின்றது.

நூலின் தலைப்பாகவும் ஆறாவது கவிதையாகவும் "பாவேந்தர் பாதை" அமைந்துள்ளது. பாவேந்தரைப் பின்பற்ற வேண்டும் என்ற உணர்வு தோன்றி விட்ட பிறகு மற்றவர் யாரும் தேவையில்லை என்பதைப் பாடல் காட்டுகின்றது.

"பாவேந்தர் பாதையிலே நடையைப் போடு
பழஞ்சரக்குக் கடைகளையே இழுத்து மூடு"

என்கிறார். பாவேந்தர் தோன்றி மூடப்பழக்கத்தை விரட்டப் பாடுபட்டார். இன்னும் சமுதாயம் முடைநாற்றம் வீசிக்கொண்டுதான் இருக்கின்றது. பாவேந்தர் பாதையில் சென்றால் வளம் பெறலாம் என்கிறார். அனைவரும் ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டிய ஒரு கருத்தாக இருப்பினும்,

"கம்பனும் இங்கு வேண்டா! எந்த
வம்பனும் இங்கு வேண்டா ! புரட்சிக்
கொம்பன் இங்குப் பாவேந்தன்தான்
தெம்பினை ஏற்று ! தேன்தமிழ் போற்று !" (ப. 16)

எனும் பாடலைத் தவிர்த்திருக்கலாம். தமிழுக்குக் கதியானவரில் ஒருவராகக் கம்பன் கருதப்படுகின்றான். தேன்தமிழ் போற்றியவர்களில் அவரும் ஒருவர் என்பதை மறக்கலாகாது. தவிர இவரது பாடல்கள் எதுகை மோனையுடன் சிறப்பாக அமைந்துள்ளதைக் காண முடிகின்றது. "பாவேந்தர் பாட்டு" என்ற தலைப்பில் அமைந்த இன்னொரு பாடலில்,

பாவேந்தர் பாட்டு
பகுத்தறிவுப் பாட்டு—அது
நீ வேண்டும் பாட்டு
நினைவேந்தும் பாட்டு—தமிழா
நிறைபுகழை ஈட்டு

என்று பாவேந்தர் பாடல்களின் தன்மையைச் சுட்டுகின்றார்.

பழைமையிலே சிக்கித் தவிக்கும் தமிழகத்தை மீட்டுத்தரப் பாவேந்தர் மீண்டும் வரவேண்டும் என்று ஏங்கித் தவிக்கும் உணர்வை "பாவேந்தே வா" பாடல் காட்டுகின்றது.

"புதைந்து போன வரலாற்றை - இங்குப்
புதுக்கியெழுத வரவேண்டும்

வதைபட்டு வீழ்கின்ற —தமிழர்
வளவு பெற வரவேண்டும்”

என்கிறார். “எதிர்பாராத முத்தத்தில் உறவில் பகை” என்ற கவிதை பாரதிதாசனின் எதிர்பாராத முத்தம் கதையை அப்படியே இவர் தம் நடையில் எழுதியுள்ளார். பூங்கோதை, பொன்முடி இருவரின் காதல் நிலையை அழகாகக் கூறுகின்றார். ஆங்காங்கே பாரதிதாசனின கவிதை அடிகளையே தந்து, கதையைச் சொல்லியிருக்கின்றார். இது போன்றே `பரவுக பாரதிதாசன் கொள்கை', `நெருப்புக்கனி', `தமிழ் முரசம்' போன்ற கவிதைகளில் இவருடைய தமிழ்நடை, கவிதை நயம், திறமை, பாரதிதாசன் மேல் கொண்ட ஈடுபாடு அனைத்தும் புலனாகின்றன. பாவேந்தருக்குப் பாக்களால் பாவலர் இலக்கியன் சிறப்புச் செய்திருப்பது வரவேற்கத்தக்கது.

-மே. ஜான்சன் செளந்திர பிரபாகர்.

## 23. பாவேந்தர் பாரதிதாசன்

மா. அண்ணாதுரை, பூங்கொடி வெளியீடு
ஈரோடு - 2, 1991, 248 ரூ.30/-

தம் பதின்மூன்றாம் வயது தொடங்கி எழுபத்து மூன்றாம் வயதுவரை - வாழ்வின் இறுதி வரை இடையறாது கூவிய குயில்பற்றி - பாவேந்தர் பற்றிப் பதினெண் நூல்களின் துணைகொண்டு டாக்டர் மா. அண்ணாதுரை இயற்றியது இந்நூல்.

ஐந்து நோக்கில் அணுகப்பெறும் இந் நூலில் முதல் இயல் பாவேந்தரின் வாழ்வியலைச் சுருங்கக் கூறுகிறது. அவர்தம் பெற்றோர், பிறந்த ஊர், உடன் பிறப்புக்கள், பெற்றமக்கள், அவர்களது சுற்றம் ஆகியோரது அறிமுகத்துடன் தொடங்கி, தம் முதற் கவிதையினைப் பதின் மூன்றாம் அகவையில் அவர்மீது தொடுக்கப் பெற்ற ஒரு குற்றச்சாட்டினைக் கேள்வியுற்றுத் தந்தை வினவ அதற்கு விடையாகப் பாடினார் என உரைத்துச் செல்கின்றது. பாவேந்தர் பங்காருபத்தர் திருப்புளிச்சாமி அய்யா, சாரம் மகாவித்துவான் பு.அ. பெரியசாமிப்பிள்ளை ஆகிய ஆசிரியப்பெருமக்களிடம் முறையாகத் தமிழ் இலக்கியமும் இலக்கணமும் கற்றமை, அவரது கலை ஆர்வம், ஓவியம், இசை ஆகிய கலைகளில் பெற்றிருந்த தேர்ச்சி, நடிப்புத்திறன், உணவுப்பழக்கம், உடல் வன்மை, தூய்மை, எடுப்பான தோற்றம் போன்றவை இப்பகுதியில் கூறப்பட்டுள்ளன. மேலும் அஞ்சாமை, தன்மான உணர்வு, இளமை முறுக்கு, இன்னல்கண்டு தளராமை, கள்ளம் கபடமற்ற குழந்தை உள்ளம், பிறர்நலம் பேணல், குற்றம் கண்டவிடத்துக் குமுறல், யாராய் இருப்பினும் தவறுரைப்பின் எதிர்த்துரைத்தல், மனவலிமை, கொள்கைப்பிடிப்பு, பகைவரிடத்தும் இரக்கம், தியாக மனப்பான்மை ஆகிய நற்பண்புகள் மிக்கோராய் விளங்கியமையைச் சிறு சிறு நிகழ்வுகளைச் சான்றுகாட்டித் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார்,

பாரதியாருடன் அறிமுகம் ஆதல், அதன் பின் அவரது இல்லத்திற்குச் சென்று தமிழறியும் தமிழ்ப்பற்றும் மிக்க வ.வே.சு அய்யர், சிவா போன்றோருடன் நட்புக்கொள்ளல், பாரதியின் படைப்புக்களைக் கண்டபின்னரே எளிய நடையில் பாடல் இயற்றத் தொடங்கிப் பாரதியின் வாயிலாகவே “சுப்பிரமணிய பாரதியார் கவிதாமண்டலத்தைச் சேர்ந்த கனகசுப்புரத்தினம்

பாடியது' என்ற குறிப்புடன் சுதேச மித்திரன் பத்திரிகையில் கவிதை வெளிவந்து தமிழ் உலகிற்குக் கவிஞராக அறிமுகமாதல் ஆகியன சுவைபடக் கூறப்பட்டுள்ளன.

தேசிய விடுதலை இயக்கத்தில் தீவிரப்பங்கு பெற்றமை, ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டமை, பழுத்த ஆத்திகராக இருந்தவர் `நிரந்தர நாத்திகராக' மாறிச் சுயமரியாதை இயக்கத்தில் தீவிரமாகப் பணியாற்றியமை, இந்தி எதிர்ப்பில் இணைந்து பல இடங்களில் சொற்பொழிவாற்றியமை, பல மாநாடுகளில் பங்கு பெற்றுப் பணிபுரிந்தமை, மேலும் இந்திய தேசியக் காங்கிரஸ், நீதிக்கட்சி, திராவிடர் கழகம், திராவிடர் முனனேற்றக் கழகம், தமிழ் தேசியக்கட்சி, பொதுஉடமைக் கட்சி போன்ற பல கட்சிகளிலும் இயக்கங்களிலும் உரையாற்றியமை, தொடர்பு கொண்டு தொண்டாற்றியமை, பல மன்றங்களும், கழகங்களும் அமைத்து உரையாற்றியமை பற்றி ஆசிரியர் கூறுங்கால் இதுவரை பாவேந்தரைத் தமிழுலகம் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை என எண்ணத் தோன்றுகின்றது. இவை சுருங்கக் கூறப்படினும் இதனைப் படிப்போர் பாவேந்தரைப் புதிய பதிய கோணங்களில் இனம்கண்டு கொள்ள முடியும் என்பதில் ஐயமில்லை. பாடல்கள் ஒன்றிரண்டு ஆங்கிலமொழியிலும் `புதியதோர் உலகம் செய்வோம்' என்ற பாடல் பாரசீக மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டு வெளி வந்ததும், அவர் பெற்ற பிற சிறப்புக்களும், பாராட்டுக்களும் வாழ்ந்தகாலத்திலேயே தமிழகம் முழுவதும் ஏற்றுக்கொண்ட பெருங்கவிஞர் இவர் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

தனித்தனித் தலைப்புகளில், சிறு சிறு பத்திகளாக வழங்கப்பட்ட இவை சிறப்பாகத் தொகுக்கப் பெற்றிருப்பினும் முறையாகப் பகுத்து வழங்கப் படவில்லை. செய்திகள் முன்னும் பின்னுமாகத் தரப்பட்டிருக்கின்றன. எனினும் பாவேந்தரைப் பற்றிய புதிய புதிய செய்திகளை, இடையிடையே அவரது சொற்களையே இணைத்துக் கொடுத்திருப்பது இக்குறையினை மறைத்து விடுகின்றது.

`பாரதியாரும் பாவேந்தரும்' என்ற இரண்டாவது இயல் பாரதியார் மீது பாவேந்தருக்கு இருந்த ஈடுபாட்டினை அழுத்தந் திருத்தமாக உரைக்கின்றது. புதுவையில் பாரதியார் வாழ்ந்த பத்தாண்டுக் காலத்து அவருடன் நெருங்கிப்பழகும் வாய்ப்புக் கிடைத்தமையால் இருவரிடையேயும் ஆத்மார்த்தமான, உள்ளார்ந்த நட்பு நிலவியிருக்கின்றது. பாரதியாரைப் பற்றி அவர் எழுதிய, பேசிய ஒவ்வொரு சொல்லிலும் எந்த அளவிற்கு அவர் பாரதியாரை மதித்தார், பின்பற்றினார், அவரை இகழ்ந்தோரை எதிர்த்தார்; சினந்தார்; கனல் பறக்கச் சாடினார் என்பதனை ஆசிரியர் நன்கு தெளிவுபடுத்துகின்றார். பாரதியாரின் நிழற்படம் வேண்டுமென விரும்பி அவரது முயற்சியால் எடுக்கப்பட்ட படமே இன்று எல்லோர் மனதிலும் நிலைத்துள்ள பாரதியார் படம் என்பது ஆசிரியர் தரும் புதிய சுவையான செய்தி. பாவேந்தரால் பாரதியார் புறநானூறு, பரிபாடல் முதலிய பழந்தமிழ் நூல்களை ஆர்வமுடன் படித்தார், பிற இலக்கியங்களையும் விரும்பிப் படித்தார் என்பதும் இவ்வியல் தரும் எதிர்பாராத செய்தி.

பாவேந்தரின் பார்வையில் பாரதியார் கம்பனுக்குப் பின் பிறந்த உலக மகாகவி. பாரதியார் பாடல்களின் தாக்கம் இவரது பாடல்களிலும் உண்டு. `ஆடுபாம்பே! எழுந்தாடுபாம்பே' என்ற இவரது பாடலைப் பாரதியாரின் பாடல் என்று கலைமகள் இதழ் தவறுதலாக வெளியிட்டதே இதற்குத் தக்க சான்றாகும். பார்ப்பனீயத்தை வெறுத்த பாவேந்தர் பாரதியார் மீதும், அவரது

குடும்பத்தின் மீதும் கொண்டிருந்த பாசமும் பற்றும் பக்தியும் இவ்வியலில் தெளிவாக உரைக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் இயல் பாவேந்தர் படைப்புகள் என்ற தலைப்பில் அமைந்து குறிப்பிட்ட நூல் ஒவ்வொன்றும் எந்தெந்தச் சூழலில் எழுதப்பட்டது? எதைப் பற்றியது? எழுதியதன் நோக்கம்? எந்த ஆண்டு வெளியிடப்பட்டது? என்பனவற்றைக் கூறுவதோடு பாவேந்தர் வழங்கிய முன்னுரையில் சிறுபகுதி, நூலின் சிறப்பான பகுதி, பிறர் பாராட்டுரையில் ஒருபகுதி, கதையாயின் கதைச் சுருக்கம், கதையை அவ்வாறு அமைத்ததன் காரணம் ஆகிய அனைத்தையும் சுருக்கமாகத் தருகின்றது. சில நூல்கள் விடப்பட்டும் உள்ளன. இதனைப் படிக்கும் போது பாரதிதாசனார் எந்தவொரு பாடலையும் காரணமின்றியோ, கருத்தின்றியோ படைக்கவில்லை என்பதனை ஆசிரியர் உணர்த்த முயல்வது தெரிகின்றது.

நான்காம் இயல் பாவேந்தரின் `சமுதாயச் சிந்தனைகள்' பற்றியது. மொழி உணர்வு மிகுந்த இவர் தமிழ் மொழியினைப்பற்றி, அதன் வரலாறு பற்றி, வளர்ச்சி பற்றி எழுதியன மேற்கோளுடன் வழங்கப்பட்டுள்ளன. மொழியே மூச்சு, உணர்வு, வாழ்வு, இன்பம், உலகம் என வாழ்ந்த இவர் தமிழர் பற்றியும் தமிழர் சமுதாயம் பற்றியும் பாடியதோடு நின்று விடவில்லை. தேசிய உணர்வும் மிக்கவராய், ஒருமைப்பாட்டில் நாட்டம் உடையவராய், உலக அமைதியும் விரும்பியவராய் வாழ்ந்தமையும் எடுத்துக்காட்டப்பட்டு, தமிழுணர்வு மிக்கவர் மட்டுமல்ல உலகம்தழுவிய எண்ணம் இவருக்கும் உண்டு; பரந்த மனப்பான்மையும் உடையவரே என்பதனையும் ஆசிரியர் நிறுவுகின்றார். இந்தியைத்திணிப்பதால் ஒற்றுமை குலையும் என்பதனை அன்றே உணர்ந்து பாடியமையும் உரைக்கப் பட்டுள்ளது. சாதி, மத பேதம், தீண்டாமை பொருந்தா மணம், கைம்மை இவற்றை வெறுத்துப் பாடிய புரட்சிக் கவிஞர் மூடப்பழக்க வழக்கங்களைச் சாடியமையும், பெண்களின் முன்னேற்றம் விரும்பியமையும் பாடித் தனிமனித வாழ்வு உயர்வதில் அவருக்கிருந்த பெரு விருப்பையும் புலப்படுத்துகின்றார். பொதுவுடைமைக் கொள்கை, குடும்பநலத்திட்டம் அனைவருக்கும் கல்வி என்று சமுதாயமுன்னேற்றத்தில் அவருக்கிருந்த வேட்கையினையும் விளக்கும் இவர் இத்தனை கருத்துக்களையும் மிகச் சுருக்கமாக, செறிவாக ஓரிருசான்றுகளுடன் தெளிவுபடுத்தியிருப்பது பாராட்டிற்குரியது.

இறுதி இயல் `இதழ்த்துறையில் பாவேந்தர்' என்ற தலைப்பின் கீழ் அமைகின்றது. இலக்கிய உலகில் தனக்கெனத் தனியிடம் பிடித்த பாவேந்தர் தொடர்பு கொண்ட இதழ்கள் பல; தாமே நடத்திய இதழ்கள் பல. இத்துறையிலும் பாரதியாரே இவருக்கு முன்னோடி. பாவேந்தர் நடத்திய இதழ்கள், அவை தொடங்கப்பட்ட காலம், நடை பெற்ற காலம் குறிப்பிடப்பட்டுள்ளன. இதழ் தொடங்கியதன் நோக்கமாகப் பாவேந்தர் எழுதியனவும் தரப்பட்டுள்ளன. மிகச்சிறந்த இதழ் ஆசிரியராக விளங்கிய பாவேந்தரின் இதழ்பற்றிய சிந்தனைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. அவரது இதழ்கள் பற்றி முந்தைய கட்டுரைகளிலும் கூறப்பட்டதனால் போலும் இவ்வியல் மிகச் சிறிய ஒன்றாக விளங்குகின்றது.

பாவேந்தர், அவர்தம் படைப்புகள் பற்றிய செய்தி, கருத்துக் குவியலாக விளங்கும் இந்நூலில் காணப்படும் ஒரு குறிப்பிட்ட குறைபாடு மனத்தை நெருடுகின்றது. `சேரதாண்டவம்' என்ற தம் நூலை `சோரதாண்டவம்' என்ற பிழைபட அச்சுக் கோத்த ஊழியரைப் பாவேந்தர்

வேலை நீக்கம் செய்தார் என்று குறிப்பிடுகின்றார் ஆசிரியர். ஆனால் அச் சேரதாண்டவம் ஆங்காங்குக் காணப்படுகின்றது. இந்நூலில் `சேரதாண்டம்' என்று குறிக்கப்பட்டுள்ளது. இது தவிர வேறு பல அச்சுப் பிழைகள். தம்நூல் செம்மையாக வெளிவர வேண்டும் என்று விரும்பிய பாவேந்தர் தம் நூல்களைத் தாமே மெய்ப்புத் திருத்தித்தருவார்; பிழையின்றித் தெளிவாக அச்சாகிறதா என்பதைக் கவனிப்பார் என்று எழுதும் ஆசிரியர் அவரைப் பற்றிய தம் நூல் பிழையின்றி வெளிவர இன்னும் சிறிது முயன்றிருக்கலாம்.

பல ஆய்வு நூல்கள் பாவேந்தர் படைப்புகளைப் பற்றித் தோன்றியுள்ளன; சில நூல்கள் அவர் வாழ்க்கை வரலாறு பற்றித் தோன்றியுள்ளன. இருப்பினும் அவரைப் பற்றியும், அவர் தம் படைப்புகள் பற்றியும் அறிந்து கொள்ள விரும்புவார்க்கு இந்நூல் சிறந்த வழிகாட்டியாய் சுருக்கமான கையடக்கப்பதிப்புப் போன்றதாய் அமைகின்றது என்பதில் மாறுபட்ட கருத்திற்கு இடமில்லை.

-பாக்யவதி சங்கரலிங்கம்

## 24. பாவேந்தர் பாரதிதாசன் (வாழ்க்கை வரலாறு)

அரசுதாசன்,ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1990. 104, ரூ.10

கற்றோரும், மற்றோரும், பாமரரும் கூடப் பாரதிதாசனைப் பற்றியும் அவருடைய நூல்களைப் பற்றியும் தெரிந்துகொள்வதற்கு வசதியாக எளிய நடையில் எல்லாச் செய்திகளையும் இரத்தினச் சுருக்கமாகக் கூறியிருப்பது பாராட்டத் தக்கதாக அமைகிறது. `விளையும் பயிர்' என்ற தலைப்பில் அமைந்துள்ள பகுதியில், பாரதிதாசன் பிறந்தபோது பிரெஞ்சுக்காரர் ஆட்சியில் பாண்டிச்சேரியின் சூழ்நிலையைத் தெளிவாக எடுத்துக் கூறுகிறார். பாரதிதாசன் இளமையில் கல்வி கற்ற பாங்கினைப் பக்குவமாகக் கூறிச்செல்கிறார்.

`பாரதிதாசன்' என்ற இரண்டாவது பகுதியில் பாரதியாருக்குப் பாரதிதாசன் மேல் இருந்த அன்பையும், பாரதிதாசனுக்குப் பாரதியார் மேல் உள்ள ஈடுபாட்டையும் சில நிகழ்வுகள் மூலம் காட்டுகின்றார் ஆசிரியர். சுப்புரத்தினம் பாரதிதாசனாக மாறுகின்ற சூழலை ஆசிரியர் அழுத்தமாக முத்திரையிடுகிறார்.

`பகுத்தறிவின் பக்கம்' என்ற பகுதியில் பாரதிதாசன் முதலில் தனித்தமிழ்ப் பற்று இல்லாத நிலையையும், தொடர்ந்து அதன் மீது கொண்ட ஈடுபாட்டினையும், அதன் பின்பு அவர் தனித்தமிழைப் பற்றிய ஒரு குழப்பமில்லாத மனநிலையில் இருந்த தன்மையையும் ஆசிரியர் விளக்குகிறார்.

`குடும்ப விளக்கில்' இடம் பெற்றுள்ள இல்லறத்தின் மாண்பு குறித்து கருத்துக்களை பாரதிதாசன் வரிகளிலேயே நமக்கு எடுத்துக் கூறுகிறார். பாரதிதாசன் நடத்திய `குயில்' என்ற கவிதை இதழைப் பற்றியும் கூறுகிறார் ஆசிரியர்.

வறுமையில் சிக்குண்ட பாரதிதாசனைத் தூக்கிவிட்ட தகைசார்ந்த திறத்தை, `பேரறிஞர் அண்ணாவின் பேருதவி' என்ற தலைப்பில் படிப்போர் உருகத்தக்க வகையில் அழுத்தமான எழுத்துக்களில் நிரப்புகிறார் ஆசிரியர்.

`அரசியல் ஈடுபாடு' என்ற பகுதியில் சுதந்திர இந்தியாவில் தமிழ் மொழி பின் தள்ளப்படுகின்ற சூழ்நிலையில் அவருடைய அரசியல் பிரவேசம் தவிர்க்க முடியாத நிலையை உருவாக்கிய காரணத்தை நமக்குக் காட்டுகிறார். தமிழனும், தமிழும் இழிவு செய்யப்படுகின்ற நிலையைக் கண்டு கொதித்தார் பாரதிதாசன் என்பதை • அவர் கவிதை வரிகளிலேயே நமக்குக் காட்டுகிறார்.

`பாரதிதாசன் சென்னை வருகை' என்ற பகுதியில், சென்னையில் சில தீய சக்திகள் பாரதிதாசனை வறுமையின் புதைகுழியில் தள்ளிய செயலைப் பல நிகழ்வுகள் மூலம் ஆசிரியர் காட்டுகிறார். கடைசி காலத்தில் தமிழ்நாடு அவரைக் கொச்சைப் படுத்தியது, தமிழனுக்கு ஒரு தலைக்குனிவை ஏற்படுத்திய செயலாகிவிட்டதை நினைத்து ஆசிரியர் வேதனை அடைகிறார். அவை வார்த்தைகளாகக் கொப்புளிக்கின்றன.

``புகழுடல்' என்ற பகுதியில் பாரதிதாசன் இறப்பைப் பற்றியும், அவர் கனவுகள் நினைவாகும் தகைமை பற்றியும் பேசிச் செல்கிறார் ஆசிரியர்.

`பாரதியாரைப் பற்றிப் பாரதிதாசன்' என்ற பகுதியில் பாரதியார் மேல் பாரதிதாசன் கொண்டிருந்த ஈடுபாட்டைப் பல நிகழ்வுகளின் மூலம் உறுதிப்படுத்துகின்றார்.

`சொல்லாற்றல்', `பாவேந்தர் நூல்கள்', `கவிதை முத்துக்கள்' என்ற பாரதிதாசன் படைப்புகள் திறன் முழுவதையும் நமக்குச் சுருக்கமாக விளக்குகிறார். பாரதிதாசன் படைப்புகள் அனைத்தையும் பற்றி நாம் ஓரளவாவது தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலை ஏற்படுத்துகிறார்.

`குறிப்பிடத்தகுந்த சில நிகழ்ச்சிகள்' என்ற பகுதியில் பாரதிதாசன் நற்குணங்களையும் விருந்தோம்பும் பண்பு, எதையும் தாங்குகின்ற மனத்துணிவு போன்ற சிறப்பியல்புகளையும் நமக்குப் பல சான்றுகள் மூலம் கூறுகிறார்.

`புகழாரம்' என்ற பகுதியில் திரு.வி.க, நாவலர் சோமசுந்தர பாரதியார், ரா.பி.சேதுப்பிள்ளை, வையாபுரிப் பிள்ளை, தேவநேயப்பாவாணர், பேரறிஞர் அண்ணா மற்றும் பல பேரறிஞர் பாரதிதாசனுக்குச் சூட்டுகின்ற புகழாரங்களை அப்படியே தருகிறார்.

இந்நூலைப் படித்து முடித்தவுடன் பாரதிதாசனைப் பற்றி நிறைய செய்திகளைத் தெரிந்துகொண்ட ஒரு நிறைவு ஏற்படுகிறது. பாரதிதாசன் வாழ்ந்த 73 ஆண்டு நிகழ்ச்சிகளை ஒரு மணி நேரத்தில் படித்து அறிந்து கொள்கின்ற அளவிற்குத் தொகுத்துத் தந்துள்ள ஆசிரியரது திறம் போற்றுதற்குரியது.

-ச. குணசீலன்.

## 25. பாவேந்தர் பாரதிதாசன் ஒரு கண்ணோட்டம்

ந. சுப்புரெட்டியார், தேன்மழைப் பதிப்பகம்,
சென்னை-16. 1991, 254, ரூ 32/-

இந்நூலின் ஆசிரியர் பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார், தமிழியல், கல்வியியல், அறிவியல், சமயம், தத்துவம் எனப் பல்துறை தோய்ந்த பேரறிவாளர், இவர் தம் 75-வது அகவை நினைவாகவும், பாவேந்தரின் நூற்றாண்டு விழா நினைவாகவும் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. இதில், பாவேந்தரின் கொள்கைகளை, அவர்தம் கவிதைகள் வழிநின்று விரித்துரைக்கிறார் ஆசிரியர்.

ஆசிரியர், இந்நூலை, 1. புரட்சிக் கவிஞர் - ஓர் அறிமுகம், 2. பாரதியார் பற்றி பாவேந்தர், 3. கடவுள், .சமயம் பற்றிய சிந்தனைகள், 4. மொழிவழிச் சிந்தனைகள் 5. சுந்தரமூர்த்தி வழியில் 6. சிறுவர், இளைஞர் இலக்கியம் 7. காதல் பற்றிய சிந்தனைகள் 8. சமூக நலம் பற்றிய சிந்தனைகள் 9. புதியதோர் உலகம் என்னும் 9இயல்களாகப் பகுத்துள்ளார்.

முதல் இயலில், பாவேந்தரின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான செய்திகள் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் பாங்கில் விளக்கப்படுகின்றன. பாரதியாருக்கும் பாவேந்தருக்கும் ஏற்பட்ட தொடர்பும், பாவேந்தர், பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையால் ஈர்க்கப் பெற்ற பான்மையும் பேசப்படுகிறது. அடுத்த இயல், பாரதியார் பற்றிய பாவேந்தரின் எண்ணங்களை அவர் தம் சொல்லோவியங்களைக் கொண்டு ஆராய்கிறது. இவ்விரு கவிஞர்கட்குமிடையே காணப்பட்ட பண்பு, பழக்க வழக்கங்களின் ஒற்றுமைக் கூறுகளைக் கூறுவதோடு, இறைக்கொள்கையில், “பெரியார் என்ற கதிரவனால் ஈர்க்கப் பெற்றபின் பாரதிதாசன் எதிர்துருவத்தைச் சேர்ந்துவிட்டார் குருவின் மறைவிற்குப் பிறகு ”(ப. 20) என்று வேறுபாட்டையும் குறிப்பிடுகிறது.

மூன்றாம் இயலில், தன்மான இயக்கத்தால் ஈர்க்கப்பட்ட பாவேந்தர், இறைமறுப்புக் கொள்கை, பகுத்தறிவுக் கொள்கை, மூடப்பழக்கங்களைச் சாடுதல் ஆகியனவற்றைத் தம் பாடல்களின் கருவாகக் கொண்டதைச் சுட்டுகிறார் ஆசிரியர். மேலும் கவிஞரின் கடவுட் கொள்கை, “சாதிமத வேறுபாட்டைத் தாண்டி `ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற திருமூலரின் கருத்துக்கு உடன்படுவதாகவே தெரிகின்றது”(ப. 56) என்பதைக் கவிஞரின் பாடல்களைச் சான்றாக்கி மெய்ப்பிக்கிறார். இயல் நான்கில், தமிழ் மொழியின் இனிமையைப் போற்றும் பாவேந்தர், கட்டாயத் தமிழ்க் கல்வி, தமிழ்வழிக் கல்வி ஆகியவற்றை வலியுறுத்துதலையும், இசைத்தமிழைப் போற்றுதலையும் விளக்குகிறார். ஆங்கிலம் தொடர் மொழியாக ஆக்கப்படுவதே உண்மையான சுதந்திரம் என்று கூறும் இந்நூலாசிரியர், இந்தி மொழி பேசாத மாநிலங்கள் ஒன்று சேர்ந்து குரலெழுப்ப வேண்டும் என்றும், இந்தி பேசும் மாநிலங்கள் அதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் (ப. 66) வேண்டுகோள் விடுப்பது தமிழரின் எண்ணத்தைப் பிரதிபலிப்பதாகும்.

அய்ந்தாம் இயலில், உலகப் பெரியார், திராவிட இயக்கத் தொண்டர், அறிஞர், புலவர், துணைவேந்தர், நடிகர், நூல் வெளியீட்டாளர் முதலியோர் பாவேந்தரின் பாடல்களில் இடம்பெற்றுள்ளமை விளக்கப்படுகிறது. பாவேந்தரின் இச் செயல், சைவ அடியாரைப் பாடிய சுந்தரமூர்த்தி அடிகளின் செயலைப் போன்றது எனக் கருதி இவ்வியலுக்கு, `சுந்தரமூர்த்தி வழியில்.. எனப் பெயரிட்டமை ஆசிரியரின் எதிர் மறை உத்தியைக் கையாளும் திறனைக் காட்டுகிறது. ஆறாம் இயல், பாவேந்தர் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் பாடிய பாடல்களை அலசுகிறது. குறிப்பாகக் கவிஞரின் `இளைஞர் இலக்கியம்' என்னும் நூல் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. குழந்தைக் கல்வி பற்றி விரிவாகப் பேசுகிறது. `ஆறுகள் எல்லாம் நடுவண் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் அமைந்தால் காவிரிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கக் கர்நாடக அரசைக் கையேந்தி நிற்கவேண்டியதில்லை' (ப. 126) என்று, இன்று பேருருக் கொண்டுள்ள நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வுகூறும் இந்நூலாசிரியின் துணிவு பாராட்டத்தக்கது.

பாவேந்தரின் காதல் பற்றிய சிந்தனைகளை விளக்கும் ஏழாம் இயலில், தொல்காப்பியம் (பொருள்), திருக்குறள், சீவக சிந்தாமணி, மணிமேகலை, திவ்வியப் பிரபந்தம் ஆகியவற்றின் வழிநின்று பாவேந்தரின் பாடல்களை நோக்கும் ஆசிரியரின் திறனைக் காணமுடிகிறது. எல்லோருக்கும் கல்வி, பெண்களுக்குச் சம உரிமை, குழந்தை மணக் கொடுமை போன்ற சமூக நலம் பற்றிய பாவேந்தரின் பாடல்கள் எட்டாம் இயலில் விரித்துரைக்கப்படுகின்றன. கவிஞரின் தொழிலாளர்நலக் கொள்கைகளும் பொதுவுடைமை கொள்கைகளும் ஒன்பதாம் இயலில் எடுத்துக்காட்டப்படுகின்றன.

மகாகவி பாரதியார், கவிமணி தேசிக விநாயகம் ஆகியோருடன் பாவேந்தரை ஒப்பிடும் ஒப்பியல் நூலாக இந்நூல் விளங்குகிறது. தொல்காப்பியம், நன்னூல், திருக்குறள், புறநானூறு, தேவாரம், திவ்வியப்பிரபந்தம் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகியவற்றின் செல்வாக்கு பரந்து காணப்படுவதால் பேராசிரியரின் இலக்கண, இலக்கியப் பன்னூற் புலமை பளிச்சிடுகிறது. நூலின் பல்வேறு இடங்களில் (பக். 7, 11-12, 56, 74, 80-81, 200) தம் கருத்தைத் துணிவுடன் கூறி நடுநிலை ஆராய்ச்சியாளராகக் காட்சி தருகிறார். மேலும் அவர்தம் சமயவியல் (பக். 35, 43 - 44), உளவியல் (ப. 58), கல்வி உள்வியல் (பக். 121-123, 140) ஆகிய பிற துறை அறிவாற்றலும் வெளிப்படுகின்றது.

-சா. இராசசேகரன்.

## 26. பாவேந்தர் பாரதிதாசனின் அமைதியை நோக்கி

காசி வில்லவன், பாரதி பதிப்பகம், சென்னை – 17, 1990, ரூ.7.50

பாவேந்தர் நூற்றாண்டில் பாவேந்தர் தொடர்பாக, பல்வேறு படைப்பு நூல்களும், ஆய்வு நூல்களும் வெளிவந்துள்ளன. அவற்றுள் ஒன்றாக, "பாவேந்தர் பாரதிதாசனின் அமைதியை நோக்கி..." என்ற நூல் விளங்குகிறது. பாரதிதாசன் 1946-இல் எழுதிய `அமைதி' என்ற ஊமை நாடகத்தை, அவர்தம் மைந்தரான மன்னர் மன்னனின் விருப்பத்திற்கிணங்க, காசி வில்லவன் அவர்கள், வானொலி நாடகமாக வடிவமைத்துள்ளார். இந்நாடகம் பாவேந்தர் நூற்றாண்டிற்கு

ஓரிரு ஆண்டுகள் முன்பே எழுதப் பெற்று வானொலியில் ஒலிபரப்பப் பெற்றது எனினும், இது நூல் வடிவம் பெற்றது பாவேந்தரின் நூற்றாண்டில் தான் .

நரமங்குடி என்ற ஊரைச் சேர்ந்த மண்ணாங்கட்டி, தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் தகைமையாளன். தன் தாயின் மரணத்திற்குப் பின் ஆறுதல் தேடி, தன் தாய்மாமன் ஊரான ஆயங்குடி செல்கிறான். அங்கு, பண்ணையார்களை எதிர்த்து, கூலியுயர்வுக்காகப் போராடும் ஊர்மக்களுக்குத் துணைநின்று, தன் அறிவுத்திறத்தால் அவர்களை வெற்றியடையச் செய்கிறான். பெரிய பண்ணையின் மனைவிக்கும் சின்னப் பண்ணையாருக்கும் இடையேயான ஒழுக்கக் கேட்டை மண்ணாங்கட்டி வெளிப்படுத்த பெரிய பண்ணையார் சின்ன பண்ணையாரின் மாளிகை முதலியவற்றை அழிக்கிறார். தப்பியோடிய சின்னப் பண்ணையார் கொடுத்த புகாரின் பேரில் பெரியபண்ணை கைது செய்யப்படுகிறார். சுரண்டல் வர்க்கத்தின் அழிவில் உழைக்கும் வர்க்கம் வாழ்வுபெறுகின்ற வேளையில், பண்ணையாரின் அடியாள் ஒருவனால் மண்ணாங்கட்டி கொல்லப்படுகிறான்.

ஊமை நாடகம் உரையாடல் அமைக்கப் பெற்ற நிலையில், பேசும் நாடகமாக மாற்றம் பெறுவதோடு தமிழ் மொழியை ஊடகமாகப் பெற்றுள்ளது. மேலும், அதன் இடப்பொதுமை நீக்கப் பெற்று, நரமங்குடி, ஆயங்குடி என்ற ஊர்களில் இக்கதை நிகழ்வதாக, களம் அமைக்கப் பெற்றுள்ளது.

`அமைதி நாடகத்தில் மண்ணாங்கட்டியைத் தவிர பிறபாத்திரங்கள் தமக்கெனப் பெயரோ, தெளிவான வரையறையோ பெறவில்லை. ஆனால் காசி வில்லவனோ, அவர்களுக்குப் பெயர்சூட்டி, பொருத்தமான உரையாடல் மற்றும் காட்சியமைப்புகளால் உயிரூட்டியுள்ளார். மேலும் கதையமைப்பிலும் `அமைதியை நோக்கி', பல மாற்றங்கள் பெற்று விளங்குகின்றது. சான்றாக, `அமைதி'யின் நாயகன் மண்ணாங்கட்டி, தாயின் மரணத்திற்குப்பின் யாருமற்ற அநாதை. ஆனால், காசி வில்லவனோ அவனுக்குத் தங்கவேலு என்ற தாய் மாமன் இருப்பதாகப் படைத்துள்ளார். ஊர்மக்கள் வேலையின்மையால் உணவிற்கு வழியின்றி, பண்ணையார்களின் வீட்டுவாயிலில் கையேந்தி நிற்பதாகப் பாவேந்தர் படைக்க, காசி வில்லவனோ கூலி உயர்வு வேண்டி அவர்கள் தங்கவேலுவின் தலைமையில் வேலை நிறுத்தம் செய்வதாகக் காட்டுகிறார். பண்ணைக் குடும்பத்தில், பெரிய பண்ணையாரின் மனைவி சின்னப் பண்ணையாருடன் கொள்ளும் உறவைப் பாவேந்தர் ஒழுக்கக் கேடாகக் காட்ட, காசி வில்லவனோ அப்பெண், மனதால் ஒருவரோடும் உடலால் வேறொருவரோடும் வாழவிரும்பாத பண்பினால் அவ்வாறு நடந்து கொள்வதாக நியாயப் படுத்துகிறார். இவ்வாறு கதையமைப்பிலும், உத்தியிலும் அமைந்துள்ள மாற்றத்திற்கேற்ப கதைத் தலைப்பும் மாற்றம் பெற்றுள்ளது.

பாவேந்தர் தமது நாடகத்திற்கு, `அமைதி' என்று தலைப்பிட்டிருப்பதை நோக்க, உரையாடல் வெறும் சைகையாலே வெளிப்படுத்தும் இதன் வெளிப்பாட்டுத் தன்மையாலேயே இப்பெயர் அமைந்ததோ என எண்ணத் தோன்றுகிறது. அதே வேளை, இந்நாடகக் கருத்துகள் உலகப் பொதுவானவை என்ற அவருடைய கூற்று, உலகை அமைதியை நோக்கி அழைத்துச் செல்லும் அவருடைய இலட்சிய நோக்கைக் காட்டுகிறது. நாடக முடிவில், மண்ணாங்கட்டியின்

வாழ்க்கைப் போராட்டம் மரணத்தில் அமைதியுறுவதாகக் கூறுவதையும் இத்தலைப்புக்குக் காரணமாகச் சுட்டலாம்.

இவ்வாறு `அமைதி' எனும் பெயர் பன்முகமணியாக விளங்கினாலும், அதன் உள்ளொளி, சமுதாயத்தில் வறுமையையும் சுரண்டலையும் ஒழித்து அமைதியை ஏற்படுத்துதலே. அவ்வகையிலேயே இதனை வானொலி நாடகமாக்கிய காசி வில்லவன் `அமைதியை நோக்கி' எனப் பெயரிட்டிருப்பது பொருத்தமானதாகும்.

இவ்வாறு பாரதிதாசனால் காண்பதற்குரிய சைகை நாடகமாகப் படைக்கப் பெற்ற `அமைதி', காசி வில்லவனால் கேட்பதற்குரிய வானொலி நாடகமாக யாக்கப் பெற்று, பாவேந்தர் நூற்றாண்டில் படிப்பதற்குரிய நாடகமாக அச்சுவடிவில் வழங்கப் பெற்றுள்ளது. எனினும் அச்சுவடிவில் வழங்கும் நிலையிலும் வானொலி நாடகத் தன்மையிலேயே ஆசிரியர் இதனை அமைத்துள்ளார். சான்றாக, தொடக்கக் காட்சியிலேயே,

"ஏ! மண்ணாங்கட்டி! வடவாத்தங்கரையில குந்திக்கிட்டு என்ன பண்ணிக்கிட்டு இருக்கே நீனு" என்று இடஞ்சுட்டிக் கூறல், காட்சிகள்தோறும் பாத்திரங்களையும், அமைப்புகளையும் குறிப்பிடும் ஆசிரியர் களம் சுட்டாமை ஆகியனவற்றைக் குறிப்பிடலாம்.

நூலின் கண் பாவேந்தரின் `அமைதியைக் காட்டிலும், காசி வில்லவனின் படைப்புத்திறனே மிக்கு விளங்குகிறது. அதன் காரணமாக, `அமைதி' நாடகத்தின் வடிவ மாற்றமாக அல்லாது, அதன் தழுவல் படைப்பாகவே விளங்குகிறது.

பாவேந்தரின் படைப்பை மெருகூட்டும் வகையில் பேச்சு வழக்கும் வட்டார வழக்கும் அமைய பாவேந்தர் பாடல்களையும் இடையே அமைத்து கதையமைப்பில் தேவையான மாற்றங்கள் செய்து சிறந்ததொரு புது நாடகமாக வழங்கியுள்ளார். இதன் காரணமாக இந்நூலை, பாவேந்தர் பாரதிதாசனின் `அமைதியினின்று வளர்ச்சியுற்ற காசிவில்லவனின், அமைதியை நோக்கி' என்று குறிப்பிடுதல் சாலப் பொருந்தும்.

- வே. நெடுஞ்செழியன்

## 27. பாவேந்தர்வழி பாரதி வழியா ? (யாப்பியல் ஆய்வு)

இரா. திருமுருகன், பாரதி பதிப்பகம்,
சென்னை *1990*, *70*, ரூ*8*

"பாவேந்தர் நூற்றாண்டு விழாத் தொடர்பாகப் `பாரதிதாசன் நூற்றாண்டு விழா மலர் ஒன்று வெளியிடத்திட்டமிட்டிருப்பதாகவும் அதற்குப் `பாவேந்தர் பாடல்களில் யாப்பு நெறி' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வேண்டும் என்றும்" கேட்டு வந்த பாரதிதாசன் பல்கலைக் கழகக் கடிதமே இந்நூல் தோன்றக் காரணமாயமைந்துள்ளது. (முன்னுரை).

"யாப்பு ஆய்வு எனக்கு உவப்பான பொழுது போக்கு ....`கம்பன் பாடிய வண்ணங்கள் என்று ஒரு நூலும்,...`அருட்பா யாப்பு' என்ற ஒரு கட்டுரையும் எழுதியிருக்கிறேன்" என்பன ஆசிரியரை அறிமுகப்படுத்துகின்றன.

குறள் வெண்பா முதல் கலிவெண்பா ஈறான வெண்பா வகைகளுக்கும், நேரிசையாசிரியப் பா முதல் விருத்தவகை ஈறாக ஆசிரியப்பா வகைகளுக்கும், கொச்சகக்கலி, கலிவிருத்தம், கலித்துறை, சிந்துப்பாவகைகள் ஆகியவற்றுக்கும் பாவேந்தரின் பாடல்களில் ஒவ்வொன்று எடுத்துக்காட்டும் முறை நூல் முழுமையும் ஒரே சீராக அமைகிறது. தொடர்ந்து அப்பாவகைகள் அமையும் பிற பாடல்களும் நூல்களும் ஆங்காங்குச் சுட்டப் பெறுகின்றன.

பாரதியார் பாடல்களில் நேரிசை வெண்பா வகையைத்தவிர பிற வெண்பாவகைகள் இல்லை; இணைக்குறள் ஆசிரியப் பாக்கள் இல்லை என்பன போன்ற செய்திகளோடு பாரதியாருடைய பாக்களில் காணப் பெறும் பிறவகைப் பாக்களையும் நூல் எடுத்துக் காட்டுகிறது.

பாரதியார் பாடாமல் பாவேந்தர் பாடியுள்ள பாவடிவங்கள், பாரதியார் பாடிப் பாவேந்தர் பாடாத பாவடிவங்கள், பாரதியாரைச் சிந்துக்குத்தந்தை என்று பாராட்டிய பாவேந்தர் கூற்றுக்குரிய காரணம் போன்ற பல செய்திகள் ஆய்வின் முடியாக அமைகின்றன.

இருபெருங் கவிஞரின் பாவகைகளை எடுத்துக்காட்டும் நிலையில் பாவகைகளின் அமைப்பை இலக்கணச் சான்றுகளோடு எளிமையாக விளக்கிக் காட்டுவது ஆசிரியரின் யாப்புப் புலமையைப் புலப்படுத்துகிறது. கலிவெண்பா —பஃறொடை வெண்பா இவற்றிடையுள்ள வேறுபாட்டை உணர்த்துவது குறிப்பிடத்தக்கது (பக் 8-11).

கீர்த்தனைகளை உருப்படி எனவும், சிதைந்து காணுகிறது என்பதைச் சிதர்ந்து காணுகிறது எனவும், எனக்கு ஏற்படுத்தியது என்பதை என்னில் ஏற்படுத்தியது எனவும் கூறும் வட்டார வழக்குகள் பல, நூலுள் இடம் பெறுகின்றன.

நூலின் தலைப்பு `பாவேந்தர் வழி பாரதி வழியா ? (யாப்பியல் ஆய்வு)' எனவும், நூலின் பக்கத் தலைப்புகள் `பாவேந்தர் யாப்பு நெறி – பாரதியாருடன் ஒப்பீடு' எனவும் வேறுபட்டு அமையும் முறை சுட்டத்தக்கதாகிறது.

ஒப்புநோக்கி உணர்ந்த முடிவுகள், பதிப்புச்சீர் கேடுகள் என்னும் இரு தலைப்புகளில் சுட்டபெறும் செய்திகள் ஆய்வாளருக்கும் பதிப்பாளருக்கும் பயன்படுவனவாகும்.

- பூ.சுப்பிரமணியம்.

## 28. பாவேந்தரின் தமிழ்ப் போராட்டங்கள்

சு.சண்முகசுந்தரம், காவ்யா வெளியீடு,
பெங்களூர், 1991, 192,ரூ.20.

`புரட்சிக் கவிஞர் என்று அழைக்கப்படுகிற பாவேந்தர் போர்க் கவிஞராக எவ்வாறு விளங்குகிறார் என்பதை அவரது எழுத்துக்கள் மூலமும் அவரைப் பற்றிய பிறரது எழுத்துக்கள் மூலமும் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்' என்று முன்னுரையில் ஆசிரியர் சு. சண்முகசுந்தரம் குறிப்பிடுகிறார்.

தமிழ் வணக்கம், தமிழ் முழக்கம், தமிழ் இயக்கம் எனும் மூன்று பிரிவுகளாக நூலைப் பகுத்துக் கொண்டுள்ளார்.

`தமிழ் வணக்கம்' எனும் பிரிவில், பாவேந்தர் வாழ்வினை மூன்று காலக்கட்டமாக - 1. பாரதியாரோடு வாழ்ந்த காலம் (1908-1920) 2. பெரியாரோடு சேர்ந்த காலம் (1921-1938) 3. திராவிட - தமிழ் இன இயக்க உணர்வு மிக்க காலம் (1938-1958) என ஆராய்கிறார். `பாரதிதாசன் பகுத்தறிவுப்பாவலர், ஆயினும் இவர் தமிழ் மீது கொண்ட பற்று கடவுள் மீது பக்தர்கள் கொண்ட பற்றைக் காட்டிலும் தீவிரமானது..தேசிய இன விடுதலைக்காகவே இவர் மொழி உணர்வை உரக்கப் பாடுகின்றார்' (ப. 13) என்பது ஆசிரியர் கருத்தாகிறது.

`தமிழ் முழக்கம்' எனும் பிரிவில், பாவேந்தர் தம் கவிதைத் தமிழ், கதைப்பாட்டுத் தமிழ், மேடைத் தமிழ் ஆகியவற்றை ஆசிரியர் அலசுகிறார். பாவேந்தர் மேற் கொண்ட தமிழ்ப் போராட்டத்திற்கு அவருடைய கதைப்பாடல்களே கதாயுதமாக விளங்கியதாக (ப.57) ஆசிரியர் கருத்து தெரிவிக்கிறார்.

`தமிழ் இயக்கம்' எனும் பிரிவில், பாவேந்தரின் இன உணர்வு, தமிழ் மொழி காக்க பல்வேறு துறைகளில் அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் ஆகியவற்றை மிகமிக விரிவாகவும் விளக்கமாகவும் ஆசிரியர் பேசுகிறார். இந்தி எதிர்ப்பு, தமிழக எல்லைப் போராட்டம் முதலிய போராட்டங்களைப் பற்றி நன்கு விளக்கமாக - ஆண்டுவாரியாக நிகழ்ச்சிகளைக் கோர்வையாகத் தந்திருப்பது பாராட்டுக்குரியது.

`சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் தமிழ் இடம்பெற வேண்டும் என்பது பாவேந்தரின் ஆசை. தமிழன் தமிழனாக இருப்பதற்கு இது மிகத் தேவையான ஒன்று என்பது இவர் கருத்து '(ப. 91) என்று ஆசிரியர் குறிப்பிட்டுச் செல்கிறார்.

`பத்திரிகைத் தொண்டு என்பது இன உரிமை காக்கும் தொண்டாக இலங்க வேண்டும்' (ப. 136) என்று குறிப்பிட்ட பாவேந்தர் அவ்வாறே செயல்பட்டார் என்பதை ஆசிரியர் படம்பிடித்துக் காட்டியிருக்கிறார். திரைப்படத்துறையில் பாவேந்தர் ஈடுபட்டு, தமிழையும் தமிழர் பண்பாட்டையும் முன்னேற்றம் அடைய மேற் கொண்ட முயற்சி விரிவாக இந்நூலில் பேசப்படுகின்றது. `சினிமா உலகில் இவர் நடத்திய தமிழ்ப் போராட்டம் தமிழர் முன்னேற்றத்துக்கான போராட்டமாக விளங்குவதைக் காண முடியும்' (ப. 173) என்று இந்நூலாசிரியர் மதிப்பீடு செய்கிறார்.

பொது நிலையில், பாவேந்தரின் தமிழ்ப் போராட்டத்தில் கள்ளமும் களங்கமும் இல்லை; சுயநலமும் சூழ்ச்சியும் இல்லை (ப. 179) என்று ஆசிரியர் கூறுகிறார்.

`வயிற்றுக்காகவும் வாழ்க்கைச் சுகத்துக்காகவும் போராடுகின்றவர்களிடம் மொழிக்காகப் போராடச் சொல்வது எவ்வகையில் நியாயம் ? தமிழ் வாழ வேண்டும். சரிதான். தமிழன் வாழ வேண்டாமா ? (ப.180) என்றொரு கேள்வியை நூலின் இறுதியில் முன்வைத்துள்ளார். இது கவனிக்கத் தக்கது.

பாவேந்தர் மேற் கொண்ட தமிழ்ப் போராட்டங்கள் பற்றி மிக விரிவாக -விளக்கமாகச்சிறப்பாக -விறுவிறுப்பாகப் பேசும் இந்நூல் நூற்றாண்டு வெளியீடுகளில் தனித்த இடம் பெறுகிறது.

- ந.கடிகாசலம்

## 29. பாவேந்தருக்குப் புகழ் அஞ்சலி

முல்லை பி.எல். முத்தையா, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை- 98, 1991, 280 ரூ.20

பாவேந்தரைப் பற்றிய அறிஞர்களின் கருத்தோவியங்கள் மறைந்து/மறந்து போகாமல் இருக்கவும், இளந் தலைமுறையினர் பாவேந்தரின் பெரும் புகழை அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கிலும் இந்நூலை உருவாக்கியிருப்பதாக முல்லை முத்தையா குறிப்பிடுகிறார்.

பாவேந்தரின் பெருமையை ஒருங்கே உணர்வதற்கு இது பெரிதும் உதவும் எனலாம். நூலின் தொடக்கத்தில் `பாவேந்தர் வரலாற்றுக் குறிப்பு' விரிவாகத் தரப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து 100 தமிழறிஞர் பாரதிதாசனாரைப் பற்றிக் குறிப்பிட்ட கருத்தோவியங்கள் இடம் பெற்றுள்ளன.

`பாரதிதாசனை ஒரு வீரக்கவி என்ற சொல்ல வேண்டும்' (ப. 28) என்கிறார் பரலி சு. நெல்லையப்பர். `பாரதிதாசனுடைய புரட்சி புதுமையாகவுள்ளது; ஆற்றல் வாய்ந்தது' என்று எஸ். வையாபுரிப்பிள்ளை கூறுகிறார்.

`பாரதிதாசன் தமிழ்நாட்டின் பொக்கிஷம்' எனப் பாராட்டுகிறார் அறிஞர் வ.ரா.

`அவருக்குத் தமிழ் மொழியில் உள்ள பற்றிற்கும் ஆர்வத்திற்கும் எல்லையில்லை. அவர் பாடல்களைப் படிக்கிற அன்னியனும் தமிழன்பன் ஆகிவிடுவான்' (ப. 68) என்று அசிதம்பரநாதன் கூறுகிறார்.

`பாரதிதாசனின் கவிதைகளில் உண்மை, இனிமை, அழகு இம்மூன்றும் அமைந்துள்ளன. அதனால்தான் அவரது கவிதைகள் படிப்போர் உள்ளத்துக்கு இன்பம் அளிக்கின்றன' (ப. 44) என்பது மயிலை சீனி வேங்கடசாமியின் மதிப்பீடாகும்.

`பொதுவுடைமை என்ற கருத்து தமிழ் இலக்கிய உலகுக்குப் புதுமையான ஒன்று. இந்தப் புதிய கருத்தை அறிவியல் நோக்கில் முறையாகப் பல கோணங்களில் இலக்கிய நலம் செறியப் பாடிய சிறப்புமிக்க ஒரே கவிஞர் புரட்சிக் கவிஞர்தான்' என்று புகழாரம் சூட்டுகிறார் ந.இராமநாதன்.

`எதிலும் அவர் போக்கும் இயல்பும் தனிச் சிறப்புடையன. அதனாலேயே அவர் புரட்சிக் கவிஞராய், பாரோர் புகழும் பாவேந்தராய்த் திகழ்ந்தார்' என்ற முல்லை பி.எல்.முத்தையாவின் கூற்று முற்றிலும் உண்மை.

பாவேந்தரைப் பற்றிய அறிஞர் பெருமக்களின் கருத்துக், கணிப்பை இந்நூல் வெளிப்படுத்துகிறது. அவ்வகையில் வரவேற்கத்தக்க நூல் இது.

– ஜி.துளசிபாய்

## 30. பாவேந்தரும் தனித்தமிழும்

க.தமிழமல்லன், தனித்தமிழ்ப் பதிப்பகம்,
புதுச்சேரி. 1991, 152, ரூ.16

நூலாசிரியர் தமிழமல்லன் தனித்தமிழ் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர். தமிழ்ப் பணியை முதற்பணியாகக் கொண்டு வாழ்பவர். கல்விக்குத் தாய் மொழிக் கல்வி மிக இன்றியமையாதது. நம்மை ஆண்ட ஆங்கிலேயர்களின் செயல்பாட்டாலும் இன்றுள்ள அரசியல் நிலைகளாலும் தமிழ்க்கல்வி கட்டாயப் படுத்தப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அதன் செயலாக்கம், தனித்தமிழாக மிக வேகத்துடன் செயல்படுகின்றது. இதனைப் பின்புலமாகக் கொண்டு பாவேந்தரும் தனித்தமிழும் என்ற நூல் உருப் பெற்றுள்ளது.

இந்நூல் பதின்மூன்று தலைப்புகளில் அமைந்துள்ளது. அவை, 1. பாவேந்தர் காலம், 2. தனித்தமிழ், 3. பாவேந்தர் தனித்தமிழ்க் கொள்கையாளரா ? 4. பாவேந்தர் மொழி நடையில் மாற்றம், 5. பாவேந்தரின் தனித்தமிழ்ப் பற்று, 6. பாவேந்தரின் தனித்தமிழ் இலக்கியங்கள், 7. பாவேந்தரின் தனித்தமிழ்க் கொள்கை, 8. பாவேந்தரின் தனித்தமிழ்த் தொண்டு, 9. பாவேந்தர் தனித்தமிழ், 10. பாவேந்தரும் பாவாணரும், 11.தனித்தமிழ் இலக்கியத்தில் பாவேந்தர், 12.குடும்ப விளக்கில் பழமையும் புதுமையும், 13.நகை முத்து வேடப்பன் நல்ல காதல் – என்பனவாம். இப் பிரிவுகள் நான்கு தன்மைகளைக் கொண்டு திகழ்கின்றன. 1. பாவேந்தரின் கால சமூகச் சூழல், 2. தனித்தமிழ் இயக்கத்தின் தோற்றப் பின்புலம், 3. தனித்தமிழ்ச் சிந்தனையைப் பாவேந்தருடன் ஒப்பிடுதல், 4. பாவேந்தரின் படைப்புகளில் சில கூறுகள் என்பன.

ஒரு மனிதனையோ அல்லது படைப்பையோ முழுமையாக அறிந்து கொள்ள, அவன்/அது தோன்றிய காலத்தை அறிந்திருக்க வேண்டும். மனிதனுடைய பண்புகளைத் தீர்வு செய்வது இரண்டு காரணங்கள். ஒன்று மரபு (Heridity); மற்றொன்று சூழ்நிலை (Environment). சூழ்நிலைகளின் செயல்பாட்டினால் மரபியலின் தன்மைகள் மாற்றம் பெற வாய்ப்புகள் உண்டு. அதனால் மரபியலை விட சூழ்நிலை மிக இன்றியமையாததாகவும் முதன்மையானதாகவும் உள்ளது. அந்த வகையில் பாரதிதாசன் வாழ்க்கைப் பின்புலத்தை ஆசிரியர் விளக்குகின்றார். 1916இல் தனித்தமிழ் இயக்கத்தை மறைமலையடிகள் தோற்றுவித்தார். பேராயக் கட்சி ஆட்சிக்கு வந்து சி.இராசகோபாலாச்சாரி இந்தியைக் கட்டாயப்பாடமாக்கினார். இதனால் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தோற்றம் பெற்றது. இந்தப் பின்புலம் பாரதிதாசனைத் தனித் தமிழ் இயக்கத்தில் செயல்படுத்தக் காரணமாக அமைந்தது எனப் பாரதிதாசனின் காலப்பின்புலத்தை மிகச் சுருக்கமாகவும் ஆழமாகவும் விளக்கியுள்ளார்.

வடமொழி செல்வாக்கிழந்த போது, அதன் சொற்களைப் பிற மொழிகளிற் புகுத்தி அதற்கு வாழ்வு வழங்க வேண்டும் என்று எண்ணியவரின் செயல்பாட்டைத் தடுக்கவும், அவ்வடமொழிச் சொற்களைத் தனித்தமிழாக்கி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தவும் தோன்றிய இயக்கம் தனித்தமிழ் இயக்கம் என்று கூறி அதனை விரிவாக விவரிக்கின்றார்.

தனித்தமிழ்ச் சிந்தனைகளைப் பாவேந்தருடன் ஒப்பிட்டு, கொள்கையாளரா, மொழி நடை மாற்றம், தனித் தமிழ்ப் பற்று, தனித்தமிழ் இலக்கியங்கள், கொள்கை, தொண்டு போன்ற

பிரிவுகளை அமைத்துள்ளார். குடும்பவிளக்கையும், நகைமுத்து வேடப்பன் காதலையும் தொடர்ந்து சிறப்பித்துக் கூறுகின்றார்.

தான் எதில் ஈடுபடுகின்றோமோ அதன் தாக்கம் வாழ்விலும் செயலிலும் வெளிப்படும். தனித் தமிழில் ஈடுபட்ட நூலாசிரியரிடம் அத்தன்மை காணப்படுகின்றது. அக்கூறுகள் வெளிப்படுகின்ற இடங்களில் சில பின்வருமாறு:

1. தன்னுடைய பட்டத்தை எழுதுகையில் க.மு. கல்.இ. என்று குறிப்பிட்டுள்ளார்.
2. அணிந்துரைபக்கங்களுக்குத் தமிழ் எண்ணிட்டுள்ளார்.
3. குமுகாயம், தன் மதிப்பு இயக்கம், பண்டாரகர்ப் பட்டம், கரணியம், தூவல் போன்ற தனித்தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

ஆசிரியர் இந்நூலை ஆய்வு நூல் (பட்ட ஆய்வேடு) வடிவில் அமைத்துள்ளார். அது மேலும் சிறப்பிற்குரியது.

பாவேந்தரைத் தனித்தமிழ் இயக்கத்தோடு மட்டும் பார்த்துள்ளமையினால் அவரின் மற்றொரு பக்கத்தைப் பற்றி கவலையில்லாமல் எழுதியுள்ளார். தலைப்பை நோக்க ஆசிரியர் சரி என்றாலும் பாவேந்தரை நோக்க ஆசிரியர் ஒரு பக்கத்தைக் காட்டாமல் விட்டுவிட்டார் என்று மட்டும் புலனாகின்றது.

பாரதிதாசன் நூற்றாண்டை மையமிட்டுப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் சிலவே பாரதிதாசனையும் நூற்றாண்டையும் சிறப்புச் செய்கின்ற நூல்களாக உள்ளன. மற்றவை நூற்றாண்டில் நானும் நூல் வெளியிட்டேன் என்று கூறிக் கொள்ளும் வகையிலேயே அமைகின்றன. ஆனால் இந்நூல் தனித்தமிழிலும், பாரதிதாசனினும் மிக ஈடுபாட்டோடும் சிறந்த அமைப்பு முறையிலும் அமைந்துள்ளது என்றால் அது சற்றும் மிகையாகா.

- தி.மு. கந்தசாமி.

## 31. புரட்சிக் கவிஞர்

பட்டுக்கோட்டை இராசேந்திரன்,
பூங்கொடி பதிப்பகம், சென்னை - 4, 1990, 156, ரூ.18

பாவேந்தரிடம் தமிழ் படிக்கச் சென்று, ஏறத்தாழ மூன்றாண்டுக் காலம் அவருடைய குடும்பத்தில் ஓர் உறுப்பினராக இருந்திட்ட பட்டுக்கோட்டை இராசேந்திரன் இந்நூலாசிரியராவார். பாரதிதாசன் பற்றிய தமது பசுமையான அனுபவங்களை இந்நூலில் அவர் தொகுத்தளித்திருக்கிறார். "பாவேந்தர் அவர்களோடு எனக்கிருந்த தொடர்பு, இந்த நூல் முழுதும் என்னால் உள்ளது உள்ளபடி உணர்த்தப்பட்டிருக்கிறது" (ப. 2) என்கிறார் ஆசிரியர்.

புரட்சிக் கவிஞரின் 'இளைஞர் இலக்கியத்தில் பல கவிதைகள் பிறக்க, தமிழ்ச் செல்வம், பாண்டியன் ஆகிய பேரக் குழந்தைகளே காரணமாக இருந்தனர்' (பக்.8-9) என்று ஆசிரியர் தெரிவிக்கிறார்.

பத்திரிகையாளர் பாவேந்தர் பற்றிக் குறிப்பிடுகையில், "பத்திரிகை என்பது, மிகச் சரியான ஒரு பெண்ணுக்குரிய பத்தினித் தன்மையோடு நடந்து கொள்ள வேண்டும் என்ற அவா மிகக் கொண்டிருந்தார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்" (ப. 53) என்று புலப்படுத்துகிறார்.

பாவேந்தருடனான தமது முதல் சந்திப்பு பற்றியும், பயணங்களில் பாவேந்தருடன் ஏற்பட்ட சுவையான அனுபவங்களையும் நூலாசிரியர் சுவை குன்றாமல் தருகிறார். பத்துக் கட்டளைகள் (டென் கமாண்ட்மெண்ட்ஸ்) படம் பற்றிப் பேசும்போது, "நம்ப முடியாத கதைதான்; ஆனா எவ்வளவு தத்ரூபமா எடுத்திருக்கான் தெரியுமோ ? அப்படியெல்லாம் எப்ப நம்ம ஆளுங்க வேற மாதிரி உருப்படியான விஷயங்களை வச்சுப் படம் பண்ண போறாங்களோ தெரியலே....!" (ப. 79) என்னும் பாவேந்தரின் ஆவலையும் ஆசிரியர் எடுத்துக்காட்டியிருக்கிறார். முத்துப்பேட்டையில் ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றார் பாவேந்தர். அப்போது ஒரு முதியவரை அழைத்து, "ஏங்கையா, இந்தப் பக்கமெல்லாம் `குயில்' (இதழ்) கிடைக்குதுங்களா?" என்று பாவேந்தர் கேட்டார். "எங்கேங்கே கிடைக்குது?" முன்னெல்லாம் எங்க பார்த்தாலும் காடாயிருக்கும்; ரெண்டு கல்லை வீசினா ஒரு குயிலாவது விழும்; இப்ப..காட்டை அழிச்சிட்டானுக; குயிலைக் காண்றதும் அரிதாப் போச்சு" என்று அந்தப் பெரியவர் சொல்ல, அதைக்கேட்டு உடம்பு குலுங்கச் சிரித்து உவந்தார் புரட்சிக் கவிஞர் (ப. 85) என்ற செய்தியையும் தருகிறார் ஆசிரியர்.

கேட்டால் புரிந்து கொள்ளாதவாறு தமிழ்த் திரைப்படப் பாடல்கள் உள்ளனவல்லவா ? இது குறித்து, பாவேந்தர் கருத்து வருமாறு: "கிராப்பை, வெட்றவன் வெட்டினான்னா ...நாம எப்படி வகிடெடுத்துச் சீவினாலும் சரியா வரும். எழுதத் தெரிஞ்சவன் எழுதற எந்தக் கவிதையையும் எப்படி வேணுமானாலும் இசையமைக்க முடியும்". (ப. 106)

பாவேந்தரோடும் அவருடைய குடும்பத்தினரோடும் பழகிய நாட்களை நிகழ்ச்சிகளை - மலரும் நினைவுகளாகத் தரும் வகையில் இந்நூலை உருவாக்கியிருக்கிறார் இராசேந்திரன். பாவேந்தரின் தனித்தன்மைகளை அவர் இந்நூலில் திறம்பட எடுத்துக் காட்டியிருக்கிறார்.

"பாவேந்தரைப் பொறுத்தமட்டில் இன்னமும் எனக்குள்ள ஒரே குறை – கடைசி வரையில் விமானப் பயணமோ, கப்பல் பயணமோ வேறெந்த வெளிநாட்டுப் பயணமோ அவருக்கு ஒரு போதும் வாய்க்கவில்லையே என்பதுதான் !" (ப. 88) என்று குறிப்பிடுவது சுட்டத்தக்கது.

புரட்சிக் கவிஞரின் பல்வேறு குணநலன்களை வெளிக்காட்டும் வகையில் இந்நூல் அமைந்திருப்பது வரவேற்கத்தக்கது. சுவை குன்றாமல் கடந்த கால நிகழ்ச்சிகளைத் தொகுத்தளிப்பதில் நூலாசிரியர் வெற்றி பெற்றிருக்கிறார்.

— ந.கடிகாசலம்.

## '32. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

லியோ ராமலிங்கம், இமயப்பதிப்பகம்,
சென்னை, 1990, 115, ரூ.12

பாவேந்தர் பாரதிதாசனின் நூற்றாண்டின் போது, அவர் நினைவைப் போற்றும் வண்ணம் பாரதிதாசனைப் பற்றி,தாம் அறிந்த செய்திகளை, `புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்' என்ற இச்சிறு நூலில் லியோ இராமலிங்கம் படைத்துள்ளார்.

`பாட்டினால் ஏற்படும் பயன்தான் என்ன ?', `பாவேந்தர் பாடலின் தனிச்சிறப்பு', `வெறுத்தவரும் விரும்பிய பாட்டு', `பாவேந்தருக்குள்ள தனிமரியாதை' போன்ற தலைப்புகள் பாரதிதாசனின் வாழ்வில் நடந்த பல சுவையான நிகழ்ச்சிகளைத் தன்னகத்தே கொண்டு நூலின் முற்பகுதியை அணிசெய்கின்றன.

பாவேந்தரின் குருபக்தி, தேசிய உணர்வு ஆகியன `பாவேந்தர் பாரதிக்குத் தந்த மரியாதை', `தேசிய உணர்வில் திளைத்தவர் பாவேந்தர்' என்ற தலைப்புகளில் விரித்துரைக்கப் பெறுகின்றன.

எந்தத் தமிழ்ப்புலவரையும் தமிழ்க்கவிஞரையும் பாராட்டாத தந்தை பெரியார் போற்றிய முதற்கவிஞர் பாரதிதாசன் என்பது போன்ற பல செய்திகள், `பெரியார் போற்றிய முதற்கவிஞன்' என்ற தலைப்பில் இடம் பெறுகின்றன.

`புரட்சிக்கவிஞர் இயற்கையைப் பற்றி மிகுதியாகப் பாடியிருக்கிறார். அத்தனையும் அவர் தாமாக உணர்ந்து சொல்லுகின்ற கருத்துகளின் கோவை என்பதை ஆசிரியர் `இயற்கையை ரசித்தார் எழில் கவிதைகளைத் தந்தார்' என்ற தலைப்பில் உணர்த்துகின்றார்.

புரட்சிக்கவிஞர் காட்டும் காதல் காட்சிகள் புதுமையானவை ! புரட்சியானவை ! புதிய சமுதாயம் படைக்கத் துணைநிற்பவை ! படித்து இன்புறவும், வாழ்வில் ஏற்றுப்பயன்பெறவும், பகுத்தறிவு பெற்றிடவும், பண்பாட்டோடு வாழவும் வழிகாட்டுபவை என்பதைக் `காதலைப் பாடுவதில் பாவேந்தருக்கு நிகர் யாருமில்லை' என்ற தலைப்பில் ஆசிரியர் வெளிப்படுத்துகின்றார்.

`பெண்களுக்காகப் பாடியபெருங்கவி' என்ற தலைப்பில் பெண் எப்படி இருக்க வேண்டும்; வரும் துன்பத்திலிருந்து எவ்வாறு வெற்றிபெற வேண்டும் என்பதை ஆசிரியர் பேசுகிறார்.

`பாவேந்தர் காட்டிடும் பாங்கான குடும்பம்' கல்விகற்ற குடும்பம்; குடும்பப் பணிகளை அவரவர் நள்கு செய்ய வேண்டும் என்பதைக் காட்டும் வகையில் அமைந்துள்ளது; அளவான மக்கட் செல்வத்தைப் பெற்று வளமாக வாழ்ந்திடவும் வழிகாட்டுகிறது.

`விருந்தும் கேட்பார் விருந்தும் அளிப்பார்' என்ற தலைப்பில் பாவேந்தர் புலால் உணவில் மிகுவிருப்பம் உடையவர், எதையும் விரும்பி உண்ணுபவர், பிறரையும் விருந்துண்ணச் செய்து மகிழ்பவர் முதலான செய்திகள் இடம் பெறுகின்றன.

எளிமையாக, இனிமையாக, சில வேளைகளில் கோபமாக உரையாடுபவர் பாவேந்தர். அவரோடு உரையாடுவதால் பல்வேறு துறைகளைப் பற்றிய செய்திகளை அறிந்து மகிழலாம் என்பது `உரையாடுவதில் இன்பம் காண்பவர்' என்ற தலைப்பில் வெளிப்படுகின்றது.

`போற்றுவதிலும் தூற்றுவதிலும் அவருக்கு நிகர் அவரே', `பாவேந்தர் பார்ப்பனரை வெறுத்தார். தன்மீது பற்றுடைய பார்ப்பனரை மதித்தார்; பாவேந்தருக்குத் தமிழ் உணர்வே தலையாய உணர்வு', `கொண்ட கொள்கையில் உறுதி கொண்டவர்' என்ற தலைப்புகள் பாவேந்தருக்குரிய தனித்த பண்பினை, தமிழ் உணர்வினை, கொள்கைப் பிடிப்பினை வெளிப்படுத்துகின்றன.

பாவேந்தரின் இயல்புகள்' என்ற தலைப்பு பாரதிதாசனின் குணநலன்கள் சிலவற்றை இயம்புகின்றது. இந்நூலாசிரியர் திருவையாறு தமிழ்க்கல்லூரியில் பயின்று கொண்டிருந்த போது அவர் தங்கியிருந்த விடுதியில் பாவேந்தர் ஒருமுறை தங்கியிருந்தார். அப்போது அவரிடம் பேசிப்பழகும் வாய்ப்பு ஏற்பட்டதை, `பாவேந்தரைச் சந்தித்தேன்' என்ற தலைப்பில் கூறுகின்றார்.

பாவேந்தர் வளர்ந்துவரும் மழலைச் செல்வங்களுக்கு எளிய நடையில் இனியகருத்துக்களை வழங்கியவர் என்பது, `வளரும் செல்வங்களுக்கு செந்நெறி காட்டியவர்' என்ற தலைப்பில் உணர்த்தப் பெறுகின்றது.

பாரதிதாசன் பாரதியார் வரலாற்றைப் படமாக்க முயன்றார்; உழைத்தார்; கைப்பொருளையும் அவருக்குள்ள தனிப்பெருஞ்சிறப்பையும், உடல் நலத்தையும் இழந்தார் என்பது போன்ற செய்திகளை ஆசிரியர் `திரைப்படம் எடுக்க முயன்றார் பெருமையையும் பொருளையும் இழந்தார்' என்ற தலைப்பில் நெஞ்சுருகக் குறிப்பிடுகிறார்.

`அதிர்ஷ்டம் இல்லாத கவிஞர்' என்ற பகுதி, பாவேந்தரின் இறப்புக்குப்பின் அவருக்குப் பெருமையளித்த செயல்கள் சிலவற்றைச் செப்புகின்றது.

`பாவேந்தர் காணவிரும்பியது எது?' என்ற தலைப்பில் தாம் காணவிரும்பிய இலட்சியத் தமிழகத்தைக் காணமுடியாமலே பாவேந்தர் மறைந்துவிட்டார் என ஆசிரியர் நொந்து கொள்கிறார்.

அரசும் நாமும் பாவேந்தரின் பணிகளுக்காக உழைத்தால் தமிழகம் பொலிவும் உலகில் புகழும் பெறும் என்பதை `நூற்றாண்டு விழாக் காணும் நாளில் திட்டமிட்டுச் செயல்புரிவோம்' என்ற தலைப்பு நவில்கின்றது.

இறுதிப் பகுதியில் புரட்சிக் கவிஞரின் வாழ்க்கைக்குறிப்பு இடம் பெறுகின்றது.

மு.வ., சாலை இளந்திரையன், சுரதா முதலிய அறிஞர் பலரும் தம் அனுபவ வாயிலாக பாவேந்தரின் பெருமையைச் சுட்டிக் காட்டும் பாங்கு இந்நூலில் பலவிடங்களில் இடம் பெறுகின்றது. பாரதிதாசனின் பாடல்களில் பெரிதும் காணப்படும் கொள்கை விளக்கங்கள் ஆங்காங்கே பட்டியலிடப்படுகின்றன.

கவிஞரின் நிறைகளைச் சுட்டிச் செல்லும் இந்நூலாசிரியர் இடையிடையே கவிஞரின் குறைகளைக் குறையாகச் சுட்டாமல் கவிஞரின் செருக்கு, அவருக்குரிய இயல்பே என்ற நிலையில் பெருமிதமாகக் கூறுகின்றார். கவிஞர்கள் உணர்ச்சிவசப்பட்டவர்கள்; மன ஓட்டங்களை அடக்க இயலாதவர்கள் என்பனவற்றை ஆசிரியர் உணர்த்துகின்றார். ஆசிரியர் பலவிடங்களில் பாவேந்தரிடம் தமக்கிருக்கும் அன்பின் ஆழத்தை வெளிப்படுத்துகின்றார்.

பாரதிதாசன் வாழ்வில் நடந்த பலசுவையான நிகழ்ச்சிகளில் தலைவர், அறிஞர் ஆகியோரின் பங்கேற்பு, நூலை ஆர்வத்துடனும் சுவையுடனும் படிக்கத் தூண்டுகின்றது.

இந்நூலில் பாரதிதாசனைப் பற்றிய பல செய்திகளை ஆசிரியர் நன் முறையில் திரட்டித் தந்துள்ளது பாராட்டுக்குரியது.

-டி.மகாலட்சுமி

## 33. புரட்சிக் கவிஞரும் பெண்மையும்

சரளா ராசகோபாலன், ஒளிப் பதிப்பகம்,
சென்னை -18, 1990, 408, ரூ.40

பாரதிதாசன் நூற்றாண்டு விழாவில் வெளிவந்துள்ள இந்நூல் பெண்மையின் பெருமை பேசும் நூலாக விளங்குகிறது. `வேதநாயகரும் பெண்மையும்', `தமிழ்த் தென்றலும் பெண்மையும்' ஆகிய நூல்களைத் தொடர்ந்து சரளா ராசகோபாலன் படைத்துள்ள நூல் இது.

எட்டுத் தலைப்புகளில் இந்நூலை அவர் பகுத்துக் கொண்டிருக்கிறார். முதலில், `புரட்சிக் கவிஞரும் பெண்மையும்' என்பது குறித்து மிக விரிவாகப் பேசுகிறார். `என்ன குழந்தை?' என்ற கேள்விக்கு, `பெண் குழந்தை' என்று பதில் வந்தால் நிலவும் துக்க நிலைமையை விவரிக்கும் பான்மையில் நூல் தொடங்குகிறது, புரட்சிக் கவிஞர் பெண்மையைப் போற்றியதற்கான காரணங்களை முறையாகத் தொகுத்தளிக்கிறார். பிரெஞ்சு ஆடவர்கள் பரந்த உள்ளத்தோடு தங்கள் மனைவியருக்கு உரிமை கொடுத்து வாழ்ந்ததைப் பார்த்த அவர், தமிழ்ப் பெண்களும் ஏன் உரிமை வாழ்வு வாழக் கூடாது என நினைத்தார் (ப25) என்கிறார் நூலாசிரியர்.

திரு.வி.க. பெண்மையைத் தெய்வ நிலைக்கு உயர்த்தியது போல் இவர் உயர்த்தவில்லை (ப33) என்றும் வெளிப்படையாகவே கூறுகிறார், ஆணுக்கு நிகர் பெண்ணும் சமம் என்று பாரதிதாசன் நினைத்தார், `பெண்கள் பெண்களாக விளங்க வேண்டும், பெண்மையோடு, தங்கள் இயல்புக்கும் ஏற்ற பொறுப்பேற்று உயர வேண்டும் என்றும் விரும்பினார்' (ப37) என்பது நூலாசிரியரின் கருத்தாகும்.

தாய்மையைப் பாவேந்தர் பாடியுள்ள பாங்கினை இரண்டாவது பகுதியில் ஆசிரியர் ஆராய்கிறார். எட்டுத் தாலாட்டுப் பாடல்களைப் பாடிய பாவேந்தர் (ப.128) தமிழர்களின் குழந்தைகளுக்குத் தமிழ்ப் பெயரையே சூட்டுமாறு அறிவுறுத்தினார் (ப.133) எனவும் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

பெண்ணடிமைத்தனம் பற்றியும் மிக விரிவாக ஆசிரியர் பேசுகிறார். தன் பாடல்களின் வாயிலாகப் பெண்ணடிமையைக் கடிந்துரைத்த போக்கினை ஏற்ற ஆதாரங்களுடன் புலப்படுத்துகின்றார்.

இதே போன்று கைம்மை நிலை பற்றிப் பேசுகையில், `விதவைக் காதலையும், விதவை மறுமணத்தையும் அதிகமாகப் பாடியவர் புரட்சிக் கவிஞர்தான் என்று உறுதியாகக் கூறலாம் (ப230) என்கிறார் நூலாசிரியர். பெண்ணுரிமை பெண்கல்வி பற்றியும் மிக விரிவாக ஆராய்கிறார்.

`காதல் வாழ்விலும் பெண்களுக்கு முன்னுரிமை இருக்க வேண்டும் என்பதால் காதலனிடம் தன் காதலைத் தலைவியே எடுத்துக் கூறுவதாகப் பாவேந்தர் காட்டியுள்ளார்' (ப.338) `சாதி, மதம், செல்வம் போன்ற பலவற்றினும் காதல் உயர்ந்தது என்பது பாவேந்தரின் கோட்பாடு, ஆயின் காதலினும் உயர்ந்தது ஒன்று உலகில் உள்ளது என்பதையும் அவர் சுட்டிக் காட்டத் தயங்கினாரில்லை. அதுதான் `தமிழுணர்வு' (ப323). இது போன்ற மதிப்பீடு ஏற்கத்தக்கதே, `காதலர்களின் முத்தக் காட்சியை இவரைப் போல் வேறு யாரும் சிறப்பிக்கவில்லை' (ப383) என்கிறார் ஆசிரியர்.

மகளிர்தம் அழகு, அருமை பற்றிய பாவேந்தர் வருணனையை நூலின் இறுதியில் தொகுத்தளித்திருப்பது பயன் மிக்கது.

பெண்மையின் பெருமை பேசும் வகையிலும் பாவேந்தருக்குப் புகழஞ்சலி செய்யும் முறையிலும் மிகவும் சிரத்தையுடன் இந்நூலை உருவாக்கியிருக்கிறார் சரளா ராசகோபாலன் என்பதில் மாறுபட்ட கருத்துக்கே இடமில்லை. பாவேந்தர் பற்றி வெளிவந்துள்ள ஆய்வு நூல்களில் இந் நூலுக்குத் தனியிடம் உண்டு, நூற்றாண்டு விழா காணிக்கை இது எனலாம்.

-ந. கடிகாசலம்

## 34. புரட்சிக் குயில் பாரதிதாசன்

பூவை அமுதன், மயிலவன் பதிப்பகம்,
சென்னை 1990, 128, ரூ.12

எஸ்.ஆர். கோவிந்தராசன் என்னும் இயற்பெயர் கொண்ட பூவை அமுதன் 147 நூல்களின் படைப்பாசிரியராவர்.

பாரதிதாசன் நூற்றாண்டு விழாவையொட்டிப் பாவேந்தரைப் பற்றிய சீரிய தெளிந்த தம் கருத்துக்களைத் தொகுத்து, `புரட்சிக் குயில் பாரதிதாசன்' எனும் தலைப்பில் நூலாக்கியுள்ளார். நூலில் ஒன்பது தலைப்புக்கள் அமைகின்றன. தண்டமிழ் நாட்டின் தனிப் பெருங்கவிஞர் என்பது முதல் தலைப்பு, முதல் தமிழ்ப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனே என்று இது முழக்கமிடுகிறது.

இந்நூலாசிரியர், தேசிய கவியான பாரதியாருக்கும், புரட்சிக் கவியான பாரதிதாசனுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும், வேற்றுமைக்கான காரணங்களையும் விளக்குகிறார். பாரதியின் பார்வையிலே இந்தியத் தாயின் விடுதலை பெரிதாகத் தோன்றியது. பாரதிதாசனின் பார்வையிலே தமிழ்த் தாயின் விடுதலை பெரிதாகத் தோன்றியது. பாரதியாரிடம் தாய் மொழிப் பற்று இருந்தது; பாரதிதாசனிடம் தாய் மொழிப் பற்றோடு அதனைக் காக்க வேண்டும், அதன் துயரைப் போக்க வேண்டும் என்ற பற்றும் மிகுதியாகக் கலந்திருந்தது என்பதை வேறுபடுத்திக் காட்டுகிறார். பாரதிதாசன் தம் காலத்தில் தமிழ் மதிப்பிழந்து கிடந்த நிலையைப் பார்த்து என் தாய்மொழியாம் தமிழைப் பழித்தவனை என் தாயே எதிர்நின்று தடுத்தாலும் வாளா விடேன்! என்று முழங்குவது தமிழ்ப் பற்றுக்கு எடுத்துக் காட்டாக அமைகிறது.

உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே! வெள்ளம் போல் தமிழர் கூட்டம்! வீரங்கொள் கூட்டம்! அன்னார் உள்ளத்தால் ஒருவரே; உணர்வினால் ஒருவரே ... உடலில்தான் பலராய்க்

காண்பார்! என்னும் புரட்சிக் கவிஞரின் கருத்துக்கள் பெரியாரின் பகுத்தறிவுப் பாசறைக்குப் போர் வாளாகித் துணை நிற்பன.

பிரெஞ்சு அரசாங்கத்தால் பாவேந்தர் சிறைத் தண்டனை பெற்ற போது தமிழரால் `புரட்சிக் கவிஞர்' என்ற பட்டத்தைப் பெற்றார்.

அறிஞர் அண்ணா, மு.கருணாநிதி ஆகியோரின் கருத்துக்களும், எண்ணங்களும் திரைஉலகில் பவனி வந்த காலத்தில் பாரதிதாசன் பாடல்களும் மொழியுணர்வுக்காகவும், விழிப்புணர்வுக்காகவும் அவற்றில் இடம் பெற்றன; பாரதிதாசன் திரை உலகில் ஈடுபட்டதால் அவர் பெற்ற இன்னல்கள் பல; தமிழுக்காவும், தமிழருக்காகவும் வாழ்ந்த அவர் இறுதிக் காலத்தில் உதவியின்றி முடங்கிக் கிடந்தார் என்று பூவை அமுதன் குறிப்பிடுகிறார்.

ஒரு பெட்டை தன் ஆண் அன்றி வேறொன்றுக்குடன்படாது என்று புறாக்களைக் காட்டுவது தமிழரின் தனிப் பண்புடைய வாழ்க்கையை விளக்குவதாகும். தாய் அருந்தியதைக் கக்கித் தன் குஞ்சின் குடல் நிரப்பும்; ஓய்ந்ததும் தந்தை ஊட்டும் என்பது அன்புக்கு எடுத்துக்காட்டாய் அமைவது.

காதலைப் பாடும் கவிஞர் அவள் மொழி பண்டைத் தமிழோ அல்லது கொம்பிற்கனியோ, எளிதில் உண்ணக் கிடைத்த அமுதோ? பாடல் அவள்... ஆடல் நான்; ஓடைமலர் அவள்... அதில் ஊறும் மணம் நான்; யாழ் அவள்... இசை நான் என்று பல பாடல்கள் காதலுக்கு எடுத்துக் காட்டாய் அமைவன;

வீரத்தைப் பாடும் கவிஞர் தமிழனைப் பார்த்து,

சிறுத்தையே வெளியில் வா
எலி என இகழ்ந்தவர் நடுங்கப்
புலி எனச் செயல் செய்யப் புறப்படு வெளியில்!

என்று பாடும் பாடல் பொங்கி வரும் புது வெள்ளமாகப் பீறிட்டுப் பாய்கிறது.

பாட்டாளி மக்களின் உழைப்பைச் சுரண்டி வாழும் முதலாளிகளைச் சாடுகிற பாடல்கள் பல உள்ளன என்கிறார் ஆசிரியர்.

பெண்மை, குடும்பவிளக்கு என்னும் இரு தலைப்புகளிலும் பெண்மையைப் போற்றும் பாவேந்தரின் கருத்துகள் தொகுத்துத் தரப் பெற்றுள்ளன.

தேகத்திலே வலிவினை ஏற்று
சிந்தையிலே வரும் அச்சத்தை மாற்று
யூகித்துச் செயல் ஆற்று உன்னருமைத்
தமிழ் அன்னையைப் போற்று!

என்பது போன்று சிறுவர்க்குப் பாடும் பாவேந்தரின் பாடல்கள் பல நூலுள் எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

நூலைப்படிக்கும் முறையைச் சொல்லும் பாவேந்தர் அறிவியல், தோட்டக்கலை, நல்லொழுக்கம், சுத்தம் என்னும் பலவற்றைக் கூறி அறிவுறுத்துவது நூலுள்

பட்டியலிடப்பட்டுள்ளது. நகைச்சுவை ஆற்றல் மிக்கவர் பாவேந்தர் என்பதற்கு பல சான்றுகள் காட்டப்படுகின்றன.

பாரதிதாசன் படைத்த காவியங்களுள் புரட்சிக்கவி, வீரத்தாய், சஞ்சீவி பர்வதத்தின் சாரல், பாண்டியன் பரிசு இவற்றின் வாயிலாக நாட்டிற்கு அவர் உணர்த்த விரும்பிய கருத்துக்கள் சுட்டிக் காட்டப் பெற்றுள்ளன.

இந்நூலின் பிற்சேர்க்கையாக, பாரதிதாசன் வாழ்வில் நிகழ்ந்த சுவையான நிகழ்ச்சிகள் சில இடம் பெறுகின்றன.

பழங்காலத்திலே பழங்களைத் தான்
பார்த்துத் தேடிப் பயல், களைத்தான்!

என்று வரும் அவர்தம் பதின்மூன்றாம் வயதில் பாடிய பாட்டு அவருடைய பாட்டுத் திறத்துக்கு எடுத்துக்காட்டாய் அமைவது என்று சுட்டப் பெறுகிறது.

பாவேந்தர் பற்றிய முக்கிய குறிப்புகள், புனை பெயர்கள், படைப்புகள், நினைவுச் சின்னங்கள் ஆகியவையும், பாரதியார், பாரதிதாசன் குறித்து இந்நூலாசிரியர் எழுதிய இரு கவிதைகளும் நூலின் இறுதியில் இடம் பெற்றுள்ளன.

- பா. காவேரி தினகர்ராஜ்

### 35. புரட்சிக்கு வித்திடும் பாவேந்தர் பாட்டு (ஒரு திறனாய்வு)

மயிலை நாதன், தேன்மழைப் பதிப்பகம்,
சென்னை -16, 1990, 80, ரூ.8.50

அணிந்துரை, பாராட்டுரை, முன்னுரை, நுழைவாயில், பாட்டு போன்ற செய்திகள், நூலில் நான்கில் ஒரு பங்கு இடம் பெற்றுள்ளன. இப்பகுதி பல புதிய செய்திகளைத் தருகின்றது என்றாலும் அதனைச் சற்று குறைத்திருக்கலாம்

இந்நூல் 1967 இல் நடைபெற்ற உலகப்பன் பாட்டு' என்கின்ற திறனாய்வுப் போட்டிக்காக எழுதப்பட்ட நூலாகும். போட்டியில் இந்நூல் முதல் பரிசு பெற்றது.

பாரதிதாசன் நூற்றாண்டிற்காக எழுதப்பட்ட நூல் அன்று; பாரதிதாசன் நூற்றாண்டில் வெளியாகிய நூல் என்று கொள்வது பொருத்தமுடையது.

இந்நூல் பத்துத் தலைப்புகளைக் கொண்டுள்ளது. அவை, `இலட்சிய சகாப்தத்தின் குரல்' `வரலாற்றின் கட்டாயப் போக்கு', `வலிமையான சொல்லாட்சி', `வாளினும் வலிமை வாய்ந்த பேனா', `பசியும் பாட்டும்', `புதுக்கணக்கு', `புதிய சிந்தனை', `காலத்தின் கண்ணாடி., ஒரு நொடி' `நுட்பமான சொற்றொடர்', `அவசர மாற்றம் -அவசர முடிவல்ல', `எதிர் காலத்தை இயக்குகிறார்' என்பன.

ஒவ்வொரு தலைப்பின் தொடக்கத்திலும் பாரதிதாசனைக் குறித்து பிற ஆசிரியர் தரும் கருத்தைத் தந்துள்ளார். அக் கருத்துக்கள் அவரின் கருத்தை வலுப்படுத்துகின்றன.

கவிதை சிறந்து விளங்குவதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றுள் காலம், கவிஞர், ஊடகம், வெளிப்படும் சூழ்நிலை, சொல்லாட்சி போன்றவை குறிப்பிடத்தக்கன.

புலவர் அரசனைப் பற்றியும் ஆண்டவனைப் பற்றியும் பாடிக் கொண்டிருந்த காலம் மாறி மக்களின் சிக்கல்களைக் கருவாகக் கொண்டு பாடும் காலம் பிறந்து விட்டது. அம் மாற்றம் ஒரு சகாப்தம், இச் சகாப்தம் குறிக்கோள்களை மையமிட்டது. அதனால் இலட்சிய சகாப்தம்.

உலகப்பன் என்ற பாட்டு 1936-37 இல் எழுதப்பட்டது. அன்று 1. விடுதலைப் போராட்டம் தலை தூக்கியிருந்தது.2. அந்தக் காலத்தில் தான் (1937) ஜமீன்தார்களின் கொடுமை தாங்காமல் ஏழை உழவர் அவர்களை எதிர்த்தனர்; `பிரச்சாரக் கமிட்டி' ஜமீன் ஒழிப்பைப் பரிசீலனைச் செய்து கொண்டிருந்தது, 3. `உழுபவனுக்கே நிலம்' என்ற செய்தி உலகின் பல பாகங்களில் ஒலித்துக் கொண்டிருந்தது. 4. தாது வருஷப் பஞ்சம் 1936-37 இல் தலைகாட்டியிருந்தது. இது போன்ற உலக நிகழ்ச்சிகள் காட்டப்பட்டுள்ளன. அதன் வழி காரண காரியக் கோட்பாடு மிக ஆழமாகப் பயன்படுத்தியுள்ளமை புலனாகின்றது.

எச்செயலுக்கும் இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று மரபு வழிப்பட்ட தன்மையும் மற்றொன்றும் சூழ்நிலை வழிப்பட்ட தன்மையுமாகும். சூழ்நிலைகளின் செல்வாக்கு அதிகமாகும் போது மரபு வழிப் பண்புகள் குறைவது இயல்பு என்று சூழ்நிலை ஆய்வாளர் கூறுகின்றனர். அக் கொள்கையைப் பாரதிதாசன் படைப்புகளில் ஒப்பிட்டு விளக்கியுள்ளார் ஆசிரியர். `வரலாற்றின் கட்டாயப் போக்கு', `பசியும் பாட்டும்', `காலத்தின் கண்ணாடி' போன்ற தலைப்புகள் இந்நிலையில் அமைந்தன.

`நொடிக்குள்' என்ற சொல்லின் வழி பாரதிதாசன் தன்னுடைய எண்ணத்தை வெளிப்படுத்துகின்றார். அது அவரின் உள்ளத்து வேகத்தையும், அப்பொருள் மீது கொண்ட பற்றையும் காட்டுகின்றது. ஆனால், பிரெஞ்சுப் புரட்சி, ருஷ்ய புரட்சி, சீனப் புரட்சி ஆகிய எந்த நாட்டுப் புரட்சியும் ஒரு நொடியில் நடைபெற்றதில்லை; படிப்படியாகத்தான் நடைபெற்றுள்ளது. அது ஒரு நொடியில் நடைபெற வேண்டும் என்பது அவரின் மன வேகத்தை உணர்த்துகின்றது. அம் மாற்றம் அவசரமாகச் செய்ய வேண்டிய மாற்றம் தான்; ஆனால் அது அவசரமாகச் செய்ய முடிவதன்று என்பதை உலக வரலாற்று நிகழ்வுகளை எடுத்துக் காட்டி விளக்கியுள்ளார்.

நூலாசிரியரின் பரந்துபட்ட அறிவு அவரின் எடுத்துக்காட்டுகளின் வழி வெளிப்படுகின்றது. நூலாசிரியர் தரும் சான்றுகளைப் பற்றியும் அவர் காட்டும் பொருள் ஆழத்தைப் படைப்பாளர் (பாரதிதாசன்) அறிந்திருப்பார் என்று கூறிட இயலாது. நூலாசிரியர் ஆய்ந்து தன் கருத்தைக் காரண - காரிய முறையில் கூறுகின்றார். ஆனால் படைப்பாளர் தான் கொண்ட உணர்ச்சியின் வேகத்தை மற்றவரும் [illegible]ரும்படி முறையாக வெளிப்படுத்தியுள்ளார். இருவரும் இரு நிலையிருந்தாலும் நூலாசிரியர் அத்துணை அளவிற்கு நினைக்க அவரின் படைப்பு அமைந்துள்ளது. இதற்கு நூலாசிரியர் "பாவேந்தர் தமிழ் இலக்கியங்களை மெத்தப் படித்த மாமேதை" என்று கூறி அதன் வழி அவர் அறிந்திருக்கக் கூடும் என்பதை வெளிப்படுத்துகின்றார்.

பாவேந்தர் `உலகப்பன்' பாடலைப் பாட ஒரு சூழ்நிலை அமைந்தது போன்று `புரட்சிக்கு வித்திடும் பாவேந்தர் பாட்டு' என்ற நூலைப் படைக்க மயிலைநாதருக்கு ஒரு சூழ்நிலை காரணமாக அமைந்தது 1. உலகப்பன் பாட்டு திறனாய்வுப் போட்டி 2. டி.எஸ். சொக்கலிங்கத்திடம் பெற்ற எழுத்துப் பயிற்சி 3. பத்திரிகைகளில் ஆசிரியராக இருந்தமை, 4. நண்பர்களின் ஊக்குவிப்பு போன்றவை அப்படைப்புச் சூழ்நிலைக் காரணங்களாகும்.

பாரதிதாசன் நூற்றாண்டினைச் சிறப்புச் செய்கின்ற நூல்களுள் இது குறிப்பிடத் தக்கது.

-தி.மு.கந்தசாமி

## 36. புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு நினைவு மலர்

பா.வளன் அரசு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட வெளியீடு,
1991. 38, விலை குறிப்பிடப்படவில்லை.

1991 இருபெரும் அறிஞரின் நூற்றாண்டாக அமைந்தது பெருமைக்குரியது. ஒருவர் பாரதிதாசன், மற்றொருவர் டாக்டர் அம்பேத்கார். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞரில் பாரதிதாசனை அறியாதவர் யாருமில்லை. அவரின் நூற்றாண்டினை (1891- 1991) ஒட்டி, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுலகம் சிறிய நூல் ஒன்றினைப் பாரதிதாசன் நூற்றாண்டு மலராக வெளியிட்டுள்ளது. "புரட்சிக் கவிஞர்" என்றும் "பாவேந்தர்" என்றும் பாராட்டப்பெற்றவர் பாரதிதாசன். இந்நூல் பாரதிதாசனின் இரு சிறப்புப் பெயர்களையும் தாங்கி "புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன்" என்ற தலைப்பில் வெளிவந்ததுள்ளது. பாளையங்கோட்டைத் தூய யோவான் கல்லூரிப் பேராசிரியர் முனைவர் பா.வளன் அரசு இதனைத் தொகுத்திருக்கின்றார்.

இந்நூல் மூன்று பகுதிகளாக அமைந்துள்ளதைக் காண முடிகின்றது. முதற் பகுதியில் பாவேந்தரின் வாழ்வில், ஆற்றலும் ஏற்றமும், பாரதியாரின் தொடர்பு, பேறும் வீறும், மழலையர் மாண்பும் குழந்தை இலக்கியமும், வண்டமிழ் வாழ்வும் வளமும், நலம் பயக்கும் தமிழியக்கம், பாவேந்தரின் கோட்பாடுகள், நிறைவுரை என, பாரதிதாசனின் எழுபத்து மூன்று ஆண்டு கால வாழ்வினைப்பிறப்பு முதல் இறப்பு வரைச் சுருக்கித் தர முயற்சித்துள்ளார்.

இரண்டாவது பகுதி "புகழ்ப் பூங்கொத்து" என்ற தலைப்பில் பாரதிதாசன் பல அறிஞரைப் பற்றிப் புகழ்ந்து பாடிய பாடல்களைத் தொகுத்துத் தந்துள்ளார். மகாத்மா காந்தி, பெரியார், பாரதியார், தேவநேயப் பாவாணர், வெள்ளை வாரணன், மனோன்மணீயம் சுந்தரனார், திரு.வி.க., செந்தமிழ்ச் சிதம்பரனார், அம்பேத்கார், காமராசர், சீவானந்தம் போன்ற அறிஞரைப் பற்றியும், தமிழ் உயர்வு பற்றியும் பாவேந்தர் பாடிய பாடல்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

மூன்றாவது பகுதியில் பாவேந்தர் பற்றி இதுவரைப் பல்கலைக் கழகங்களில் நடந்த முனைவர் (Ph.D), ஆய்வியல் நிறைஞர் (M.Phil.) பட்ட ஆய்வுகளை கிடைத்த வரையில் தொகுத்திருக்கிறார். அத்துடன் 1926-ஆம் ஆண்டு முதல் 1952-முடிய பாவேந்தர் எழுதிய நூல்கள் எண்பத்திரண்டின் பட்டியலும், அவரைப் பற்றி வெளிவந்துள்ள எழுபத்தேழு நூல்களின்

பட்டியலும், சிறப்பு மலர்கள் பற்றியும், பாரதிதாசன் விருது பெற்றவர் பட்டியலும் கொடுத்து நூலினை முடித்திருக்கின்றார்.

பாரதிதாசன் நூற்றாண்டில் அவருக்கு மேலும் புகழ் சேர்க்கக் கருதி சிறு நூலினைத் தொகுத்திருக்கிறார் பாவளன் அரசு. `நினைவு மலராக' வெளிவருவதால் நூலில் பாடல்கள் நிறைய இடம் பெறுவதைக் குறைத்திருக்கலாம். பாரதிதாசனைப் பாடல்கள் வழித் தமிழுலகம் நன்கு அறியும். அவர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள், நண்பருடன் பழகிய தன்மை, இயக்கச் சார்பான நடவடிக்கைகள், பிறநூலில் இடம் பெறாத சுவையான தகவல்களைக் கொடுத்திருந்தால் படிப்பவருக்கு புதிய செய்திகளாகவும் நினைவு மலராகவும் இருந்திருக்கும். பாரதிதாசனைப் பற்றிய குறிப்பேடு போன்று இந்நூல் அமைந்துள்ளது.

"நல்லுயிர் உடம்பு செந்தமிழ் மூன்றும் நான் நான் நான்" என்று வாழ்ந்த பாவேந்தரை அவர் பாடல்களின் வழியே பெரும்பாலும் எடுத்துக்காட்டியுள்ளார். பாவேந்தரின் கோட்பாடுகளாகத் தமிழுணர்வு, பகுத்தறிவுப் பார்வை, பெண்ணடிமை ஒழிப்பு, சாதித் தகர்ப்பு போன்ற பத்துக் கோட்பாடுகளைக் கூறியுள்ளார். பாரதியாரின் பாடலுக்கும் பாரதிதாசனின் பாடலுக்கும் உள்ள தேசிய- சமூக வேறுபாட்டினை எளிமையாக விளக்கியுள்ளமை சிறப்பாக உள்ளது. முடிவாகப் "பாவேந்தர் பெயரால் துலங்கும் பல்கலைக் கழகமும் பிறவும் அவர்தம் எண்ணக் கருவூலங்களை நடைமுறைப்படுத்த விழைகிறோம்" (ப.10) என்ற இவரது நோக்கம் வரவேற்கத் தக்கது.

-அ.லோ.பழனிசாமி.

## 37. BHARATHIDASAN - Life, Works and Views, Part I- Life

P.Parameswaran, Anu Pathippagam,
Coimbatore-14, 1991, 56, Rs.7.50

பாரதிதாசன் பற்றி ஆங்கில நூல் எழுத முனைந்துள்ள டாக்டர் பி. பரமேசுவரன், முதல் பகுதியாக பாரதிதாசன் வாழ்க்கை வரலாற்றை மிகச் சுருக்கமாக, தெளிவான ஆங்கில மொழிநடையில் படைத்திருக்கிறார்.

பாரதிதாசன் பிறந்தது முதல் சென்னையில் காலமானது வரை கோர்வையாக நிகழ்ச்சிகளைப் பின்னிப் பிணைத்து சுவையாகக் கூறிச்செல்கிறார் ஆசிரியர்.

'The poet's moustache fluttered and his nerves twisted in fury. He roared 'dunces' in his lion-like voice' (P.19) என்று சரளமான நடையில் நூலைப் படைத்திருக்கிறார்.

'Though Subburathinam was a teacher of teachers, he was an enemy to the authorities' (P.21)

என்றும் கூறுகிறார்.

இறுதி நாட்களில் உடல் தளர்ந்து போன நிலையை, 'His hand grew tired with incessant writing;his soul sank at the obsessive thought of the slavish attitude and miserable plight of the Tamils. The throat which roared all through his life for the welfare of the Tamils became still and silent'. (P.41)

என்று குறிப்பிடுகிறார்.

மறைவுக்குப் பின் பாரதிதாசனுக்கு வழங்கப் பெற்ற விருதுகளைப் பற்றிய விவரங்களைத் தொகுத்துக் கொடுத்திருக்கிறார். மன்னர் மன்னன் எழுதிய 'கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல்' எனும் நூலில் இடம்பெற்றுள்ள பாரதிதாசன் பற்றிய செய்திகளை/வருணனைகளை நூலின் இறுதியில் சேர்த்திருக்கிறார்.

பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு பற்றிய எளிய ஆங்கில நூல் இது; மேலும் பல நூல்கள் வெளிவர அடிப்படையாகிறது.

- ந. கடிகாசலம்

## மதிப்புரைக்கு வரப்பெற்றவை (1991)

1. அருள் செல்லத்துரை **மனைமாட்சி வண்ணம்**, தமிழருவி, திருச்சிராப்பள்ளி
2. சாது, எஸ்.எல், **ஹரப்பா காதூரன்**, சாகித்திய அக்காதெமி, புதுதில்லி-1
3. தமிழ்த்தென்றல் **தமிழ்த் தேன் கவிதைகள்**, ஆசிரியர் வெளியீடு, கோவை -3
4. பாரக்கவிராசன், **எரிதழல்**, இளைஞர் இலக்கியச் சோலை, சங்கரன்கோவில்.
5. Sugimoto, Yoshio, **Traditional Religion and Knowledge**, *Anthropological Institute, Nanzan.*